குணத்தில் பயின்று பண்படுவது, சாதகமான நற்பழக்கத்தை உரப்பிப்பது முதலிய எவ்வகைப் பயனுவது அடைந்துகொள்ள முயலாமல் காலத்தை வீணிற் கழிக்கலாகாது. லண்டன் நகரத்தில் வீதிக்குவீதி சவாரிபோய் வியாதிஸ்தரை அவரவர் வீட்டிற் கண்டு வைத்தியம் செய்து வந்த மேஸன் குட் வைத்தியர் (Dr. Mason Good) வழியிற் கழியும் காலத்தில் ல்யூக்ரீஷியஸ் எனும் கிரந்தத்தை மொழிபெயர்த்தார். இவ்வாறே டார்வின் வைத்தியரும் (Dr. Darwin) நாட்டகத்தில் வீட்டுக்கு வீடு வைத்தியம்பார்க்க வண்டிச்சவாரி போம்பொழுது, சிறுசிறு துண்டுக்கடிதம் வைத்திருந்து அவ்வவ் விஷயத்தைத்தொட்டு மனதிற் பிறக்கும் அபிப்பிராயங்களைக் குறித்துவைத்து வீடு சேர்ந்தபின் கிரமப்படுத்தி எழுதுவார். அவருடைய கிரந்தம் எல்லாம் இந்தப் பிரகாரம் எழுதி முடிந்தனவாம். ஹேல் (Hale) நீதியதிபர் "தியானம்" எனும் புஸ்தகம் எழுதி முடித்தது உத்தியோக முகாந்தரமாய் அங்கங்கே போகுமார்க்கத்தில். பூர்னிபண்டிதர் (Dr. Burney) பிரான்சிய இத்தாலிய பாஷைகள் கற்றுத் தெளிந்தது சங்கீத வித்தியார்த்திகளுக்கு அவ்வித்தை கற்பிக்க அவரவரிடத்திற்குக் குதிரை ஏறிப் போகுமார்க்கத்தில். கேர்க் வைத் (Kirke White) என்பவர் கிரேக்க பாஷை கற்றது நியாயவாதி ஒருவருடைய உத்தியோகசாலைக்குப் போகுமார்க்கத்திலும் திரும்புகாலிலும். மான்செஸ்தர் நகரவீதிகளில் கூலிக்குக் கடிதம் கொண்டுபோம்பொழுது வரும்பொழுது லத்தீன் - ப்ரெஞ்சு பாஷைகள் கற்றுத்தெளிந்து பிரபலராயிருக்கின்ற ஒருவரை அறிவோம்.

பிரான்சுதேசத்து அரசிறைக் கணக்கு நிர்வாகிகளில் ஒருவராகிய டெகெஸ்ஸோ (Daguesseau) என்பவர் வேலை ஒழிந்திருக்கும் ஒரு கொடிப்பொழுதையாவது வீணிற் கழிய விடாமல் கல்விமுயற்சிக்கு அனுகூலப்படுத்தி,

யசுற்போஜனம் செய்யுமுன் உள்ள சிறிது ஒழிவுநேரத்தில் மிக அரிய பெரும்புஸ்தகம் ஒன்று எழுதிமுடித்தார். மாடம் டி ஜென்லிஸ் (Madame de Genlis) சிறந்த கிரந்தங்கள் சில எழுதி முடித்தது அன்றன்று ராஜகுமாரத்திக்குக் கல்வி கற்பிக்கப் போய் அவர் வருமளவும் காத்திருந்த வேளையில். இலைஹூ பரிட் (Elihu Burritt) பிறர் உதவியின்றித் தாம் கற்றுத்தெளிந்தது முக்கியமாய் விவேகபலத்தாலல்ல, எவ்வகை வேலைக்கும் உரியதாயிருந்த சிறிது சிறிதான ஒழிந்த காலத்தில் சிரத்தையாய்க் கல்வி பயின்றதனால் என்றார். தமக்கு விவேகமே இல்லையென்று அவர் உறுதியாய் மொழிந்தார். அவர் கருமான் தொழில் செய்து பிழைத்தவர்; இவ்வாறு கஷ்டப்பட்டு உழைத்த காலம் அவர் ஜீவனத்திற்கும் உதவிற்று; பூர்வமும் நூதனமுமாகிய பாஷை பதினெட்டும், ஐரோப்பிய பாஷை இருபத்திரண்டும் பயின்று தெளியவும் அனுகூலித்தது.

அக்ஸ்போர்ட் [illegible] ஸர்வாத்மாவின் [illegible] எனும் ஆலயத்துச் சூரியகடிகாரத்தில் "நாழிகை கழிந்து நமது கணக்கில் பதிவதாம்" எனும் அர்த்தம் விளங்க லத்தீன் பாஷையில் எழுதிய வாக்கியம் யாவருக்கும் எத்தனை அச்சமும் சிந்தனையும் தோற்றுவிக்கும் சரியாயிருக்கின்றது. மனுஷர் வாழ் நாள் என்பது நித்தியத்தின் ஓர் சின்னஞ் சிறிய அம்சம். இந்த அம்சம் மாத்திரமே மனுஷருக்கு ஸ்வாதீனம். [illegible] இனிப் பிறப்பதில்லை. அதுபோலக் கழிந்த [illegible] காலமும் வராது. "பூலோக [illegible]" எனும் கிரந்தம் எழுதின [illegible] ஜாக்ஸன் (Jackson) "இதுவரையும் [illegible] இனிச் சிக்கனமாயிருந்தால் போதும். அதுபோல, இன்று வீணிற் போக்கடித்த பொழுது போகட்டும்—இக்கணம் முதல் [illegible] செய்து திருத்திக்கொள்வேன் என்று யாவன் சொல்வ

மாட்டேவான்'' என மொழிந்தார். மெலாங்தன் (Melancton) என்பவர் தாம் போக்கடித்த காலத்தைக் கடிதத்தில் குறித்து வைத்து அதைப் பார்த்து, இனி நாழிகை நேரமாவது வீணிற் கழியாமல் மேன்மேலும் முயற்சி செய்யும்பொருட்டே. இவ்வீட்டிலிருக்கும் யாவரும் என்னுடன் சேர்ந்து உழைக்கவேண்டும் என்று எழுதி இத்தாலிய வித்வான் ஒருவர் தமது வீட்டுக் கதவில் ஒட்டி வைத்தார். ஒரு முறை பாக்ஸ்டரைக் காணப் போனவர்கள் இவர், "தமது காலக்ஷேபத்திற்கு எங்களால் பின்னம் நேரிட்டதோவென்று சற்றுப் பயப்படுகிறோம்" என்று சொல்ல, அவர்களைக் கண்டு சிந்தனை சிதறிய அந்தக் குரு வியப்பின்றி, "வாஸ்தவம்-உங்களால் என் முயற்சி பின்னப்பட்டது" என் முகத்தில் அடித்தாற்போல மொழிந்தாராம். மேற் சொல்லிய பிரபல முயற்சியுடையோரும், முயற்சியுள்ள மற்றெல்லோரும் காலம் என்பதையே பூமியாகக்கொண்டு திருத்திப் பயிரிட்டு, சித்தவிர்த்தி • செய்கை எனும் திரவியம் தேடித் திரட்டித் தங்கள் சந்ததியாருக்கு வைத்துவிட்டுப் போனார்கள்.

சில மனுஷர் எடுத்த கருமத்தை முடிக்கும்பொருட்டுப் பட்ட கஷ்டம் மிகுதி. அதுவும் அக்கஷ்டமே காரியசித்தியின் இரகசியமென்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். அடிஸன் (Addison) என்பவர் *"தரிசி" எனும் பத்திரிகையைப் பிரசுரம் செய்யத் தொடங்குமுன், தானே இரண்டாய் மடித்துக் கட்டிய மூன்று பெரும்புஸ்தகம் நிறைய விஷயங்களை எழுதிவைத்திருந்தாராம். "காலநிரூபணம்" எனும் கிரந்தத்தை நியூட்டன் திருப்பித் திருப்பிப் பதினைந்து முறை எழுதுகிற வரையில் அது அவர் புத்திக்குத் திருப்திகரமாயிருக்கவில்லை. தன்சரித்திரம் அச்சிடுவிக்குமுன் கிப்பன் (Gibbon) அந்தச் சரித்திரத்தை ஒன்பது முறை எழு

* தரிசி—Spectator.

ஸிஜர். ஹேல் (Hale) என்பவர் தினம் ஒன்றுக்குப் பதினாறு மணி நேரவீதம் பல வருஷகாலம் சாஸ்திரம் படித்துக்கொண்டுவந்தார். அதில் சற்று அலுப்புத் தட்டும்பொழுது, அவ்வலுப்புத்தீர, அவர் கத்திய நூலும் கணிதமும் வாசித்துக்கொண்டேவருவார். ஹ்யூம் (Hume) ஆங்கிலேய சரித்திரபுஸ்தகம் இயற்றும்பொழுது, நாள்தோறும் பதின்மூன்று மணிநேரம் எழுதிக்கொண்டேவருவார். மக்தெஸ்க்யூ (Montesquieu) தமது கிரந்தங்களில் ஒன்றைத்தொட்டு இடையர் ஒருவருடன் பேசும்பொழுது, "நீங்கள் அதை நாலைந்து மணிநேரத்திற்குள் வாசித்து முடித்துப்போடுவீர்கள். ஆனாலும், நிச்சயம் சொல்லுகிறேன். அதற்கு நான் உழைத்த உழைப்பு மிகுதியால் என் தலைமயிர் நரைத்துப்போயிற்று" என மொழிந்தார்.

சித்தவிர்த்திகளையும் விஷயங்களையும் அடிக்கடி குலையாமலும் மறதி எனும் இருளில் மறைந்துபோகாமலும் பத்திரமாய்க் காத்துக்கொள்ளும்பொருட்டு எழுதிவைத்திருக்கும் வழக்கத்தைச் சிந்தனையும் அவதானமுமுள்ளவர்கள் கைவிடாது அனுசரித்துவந்தார்கள். "சமயத்திற்கு உதவுமென்று குறித்துவைத்த உதிரி விஷயங்கள்" எனும் பெயர் உள்ள கையெழுத்துப் பிரதிகள் அநேகம் பேகன் பிரபு (Lord Bacon) இறந்தபின் அவர் வீட்டில் இருந்தன. பர்க்குடைய கிரந்தங்களினின்று பெரு வாக்கியங்களை எர்ஸ்கைன் (Erskine) எழுதி வைத்திருந்தார். லிட்டில்டனைப் பற்றிக் கோக் இயற்றிய புஸ்தகத்தை எல்டன் (Eldon) தமது கையால் இரண்டு முறை எழுதிமுடித்தார். ஆகவே அப்புஸ்தகத்தின் உள்ளுறைப்பொருள் எல்லாம் அவர் சிந்தையில் நிறைந்தவைகளாயின. டாக்டர் பை ஸ்மித் (Dr. Pye Smith) தனது பதினைந்தாவது வயது பருவத்தில் தகப்பனிடத்தில் புஸ்தகம் கட்டப் பழகும்பொழுது கைக்கு எட்டும் புஸ்தகங்களில் முக்கியமானவைகளை வாசித்து ஞாபகக் குறிப்பு எழுதுவார்; பெரு வாக்கியங்களைப் பார்த்தெழுது

யார்; பழைய கணை ஒரு கருத்தியும் எழுதுவார். அங்கங்கே காணும் விஷயங்களை எழுதிச் சேர்க்கும் வழக்கத்தை அவர் ஜீவன் உள்ளளவும் அனுசரித்துக்கொண்டேவந்தார். இம் முயற்சி ஒரு காலும் இளைக்கவில்லை. அவர் சரித்திரம் எழுதினவர் அவர் முயற்சியைக்குறித்து "அவர் எப்பொழுதும் உழைத்த வண்ணமாயிருப்பார், எப்பொழுதும் தேடிக்கொண்டு வருவார், எப்பொழுதும் கல்வியின் களஞ்சியத்தைப் பெருக்குவார்" என்று எழுதினார். இக் குறிப்புப் புஸ்தகங்கள் பின்னாளில் ரிக்டருடைய கற்கவிகளைப்போல் அவர் தமக்கு வேண்டும் பொருளெல்லாம் விஷய விளக்கம் எடுக்கும் களஞ்சியமாயின.

ஜான் ஹண்டர் எனும் சிறந்த பண்டிதருடைய வழக்கமும் இதே. ஞாபகசக்தியின்மையால் அவர் இவ்வழக்கத்தை அனுசரித்தார். ஒருவன் தன் சித்தவிருத்திகளை எழுதி வைத்து அடையும் பயனை விளக்கி அவர் "வித்தியார்த்தி குறிப்புப் புஸ்தகம் எழுதி வைப்பது, வர்த்தகன் கையிருப்புச் சரக்கு அட்டவணை எழுதி வைப்பது போலாம். இவ் வட்டவணை இல்லாவிடில் தன் வசம் உள்ள சரக்கு இன்னது இல்லாதது இன்னதென்று அறிய வகை இல்லையே" எனச் சாதாரணமாகச் சொல்வார். ஜான் ஹண்டர் அதி நுட்ப திருஷ்டியுள்ளவராதலின் அபர்னெதி என்பவர் அவரை "ஆயிரம் கண்ணன்" என்று சொல்வார். பொறுத்து உழைக்கும் உழைப்பு இத் திறமுள்ளதென்பதற்கு ஜான் ஹண்டர் உத்தம பிரமாணமாயிருந்தார். இருபது வயதாகுமுன் அவர் கல்வி சிறிதும் கற்கவேயில்லை. அவர் வெகு கஷ்டப்பட்டு எழுத வாசிக்கப் பயின்றார். சில வருஷகாலம் அவர் கிளாஸ்கோவில் சாமானிய தச்சுவேலை செய்தவர்; அதன் பின், லண்டன் நகரத்தில் இருந்த அங்காதிபாத வியாக்கியானம் செய்த சகோதரனுடன் போய்ச் சேர்ந்தார். சேர்ந்து பிரேத சேதன சகாயரானார். யாதி விசேஷ குணமத்திறனும், முக்கியமாய்ப் பொறுத்துச் செய்

செலுத்திச் சலிப்புற முயன்றதனாலும் விரைவில் தமயனைக் காட்டிலும் அதிக ஸாமர்த்தியசாலி ஆனார். ஸர்வ ஸ்ரீ அக்காரி பாத்து ஆங்கிலம் அதிக சிரமத்தையேற்று முதல் முதல் இங்கிலாந்தில் கற்றவர் அவர் தாம். அவர் சேகரித்துப் பார்த்துச் சேர்த்து வைத்த வெவ்வேறு ஜாதி அங்கங்களை இனக் கிரமமாய் வகுத்து வைக்க, பண்டித சிரோமணியாகிய ஓவன் என்பவருக்குச் சரியாய்ப் பத்து வருடம் சென்றது. ஹண்டர் அங்கங்கள் உருப்படி இருபதினாயிரம் காணும். ஒருவர் தம் முயற்சியால் இத்தனை திரளாய் உபயோகமான பிருகாங்க பேதங்களை சேர்த்து வைத்ததில்லை. ஹண்டர் அன்றன்று அறுவைத்தொழிலை எட்டு மணிவரையும் அதிசயவஸ்துசாலையில் அலுவல் பார்த்துக் கொண்டிருப்பார். அப்புறம் பகல் முழுதும் இரணமான ரோகிகளுக்கு வைத்தியம் பார்ப்பார் – செயின்ட் ஜார்ஜ் வைத்திய சாலையில் ரணவைத்தியர் உத்தியோகம் வகிப்பார் – ராணுவ வகுப்பில் ஸ்டாஃப் ரண வைத்தியர் உத்தியோகம் செய்வார் – வைத்திய வித்தியார்த்திகளுக்குப் பிரசங்கம் செய்வார். தமது வீட்டில் வியாசங்களுக்கு உதவுமாறு அங்காதி பாத வித்தை கற்கும் ஒரு வகுப்பு மாணாக்கரை மேல் விசாரணை செய்தார். இத்தனை வேலைகளும் இருக்க முடித்து, அவகாசம் கண்டு ஜீவோற்பத்தி அபிவிருத்திக் கிரமத்தைக் குறித்து வெகு வெகு பரிசோதனை செய்தார்; அன்றியும் சாஸ்திரார்த்தமான பிரசங்கங்களும் அநேகம் எழுதினார். முயற்சித் திறத்தில் அசாத்தியசாலி அவர் இத்தனை வேலைகள் எல்லாம் செய்ய முடிவதற்கு நித்திரையைக் குறைத்தார். ராத்திரி ஒன்பதிலிருந்து அவர் வேலை செய்வது ஆக நாலு மணி நேரம். பகலில் போஜனம் செய்ததும் உடன் ஒரு மணி நேரம். வேலைகளையும் அவர் நித்தியமாக முடிக்கத் தாம் அனுசரித்தும் வந்த போதனை. எவரோ கேட்டதற்கு அவர், "நான் கைக்கொள்ளும் விதி இது. ஒன்றே கருமமும், செய்யத் தொடங்குமுன் இது செய்-

வது சாத்தியமா என்று சிந்தையில் சீர்தூக்கிப் பார்ப்பேன். பார்த்து அசாத்தியமென்று கண்டால் அதைச் செய்யத் தொடங்குகிறதேயில்லை. சாத்தியமென்று கண்டால், சற்றுச் சிரமப்படவேண்டியிருந்தாலும் சலிக்க மாட்டேன். ஒன்றைச் செய்யத் தொடங்கினால் முடிக்கிறவரையில் நிறுத்தி விடுகிறதேயில்லை. இவ் விதியை அநுசரித்தே எனக்கு இவ்வளவு சித்தி உண்டாயிற்று" என மொழிந்தார்.

முன் மிகவும் அற்பமென்று பலரும் எண்ணியிருந்த சில விஷயங்களை வரையறுத்தறிவதில் ஹந்தர் வெகு காலம் போக்கினார். மான்கொம்பு வரவர வளரும் இயற்கையை அவர் வெகு கவனமாய்ப் பார்த்துப் பரிசோதித்துக் கொண்டு வந்தார். அதைப் பார்த்திருந்தவர்கள் வெகு பெயர் அவர் காலமும் கருத்தும் அவமே போக்கப்படுவதாக நினைத்தார்கள். அதைத்தொட்டு ஹந்தர் சலிப்புறவில்லை. வித்தியா விஷயம் எதையும் வரம்பாய் ஆய்ந்து அறுதியிட்டிருந்தால், அதற்குரிய பயன் விளையாதிராதென அவருக்குள் தெளிவு பிறந்தது. மான்கொம்பு வளரும் இயற்கையை ஆய்ந்தறிந்திருந்ததனால், உதிர தாரைகள் சமயத்திற்கு ஏற்ப அகலும் மர்மம் அவருக்குத் தெரிந்தது. இந்தச் சூக்ஷமம் தெரிந்ததனால், ஒரு உதிரநாளம் ஒன்றில் கட்டி புறப்பட்டிருந்த ஒரு ரோகிக்கு அதை பயப்படாமல் உதிரப் போக்கைத் தடுக்கப் பெரு காரியம் செய்தார். அவருக்கு முன் உள்ள வைத்தியர் எவர்க்கும் உதிரத்தைக் கட்டும்படியான தெளிவு பிறந்ததேயில்லை, உதிரநாளத்தில் கட்டி புறப்பட்ட ரோகிகள் தப்பிப்பிழைத்ததேயில்லை. பூர்வ விவேகிகள் பலரைப்போல் அவரும் பகுத்தறிவுக்கெல்லாம் தளராத் திட உழைப்பே. அவர் சித்தத்தைச் செலுத்த வேண்டுகால் போட்டார். அவர் தமது புத்தியைச் செலுத்தி தன்னைத்தனியே இருந்து உழைத்த நிபுணர். ஜெயத்தில் தொடங்கிய கருமம் அனைத்தையும் விட்டுவிடாமல் செய்துகொண்டுவந்தவர். நல் வார்த்தை சொல்லி அவருக்கு உற்சாகம் கொடுத்தவரா

எவரும் இல்லை. அவர் கையிட்ட கருமங்களின் கடைப்பிடி இன்னதென்று அவர் காலத்திலிருந்தவர்களுடைய புத்தியில் படவில்லை. சிரத்தையாய் உழைக்கும் எவர்க்கும் அவ்வுழைப்பிற்குத் தக்க உன்னத பிரயோஜனம் முக்கியமாய்ப் பிறரைச் சார்ந்து வருவதல்ல, அவரவர் உள்ளத்திலிருந்து பிறக்கும் உவப்பே. செவ்வையான சிந்தையுள்ள ஒருவன் தன் செய்கடமை உண்மையும் ஊக்கமுமாய்ச் செய்வானானால் இந்த உவப்பு உண்டாகாதிராது. சித்த உவத்தல் எனும் இந்தப் பிரயோஜனம் ஜென்னருக்குக் குறைவற அமைந்தது.

எதையும் கோராது பாருக்குப் பெருநன்மை செய்து புகழ் பெறச் சாதித்த மற்றொரு பிரபல பிராஞ்சிய ரண வைத்தியர் உலகப்பிரசித்த அம்ப்ரோஸ் பாரே (Ambrose Pare). அவர் பிறந்தது 1509-ம் வருஷம், மேன் மாகாணத்தைச் சேர்ந்த லாவல் எனும் ஊரில். அவர் தகப்பன் சவரகன். எளியோராதலால் தாய் தந்தையர் அவனைப் பள்ளிக்கு வைக்கவில்லை. நாளாவர்த்தியில் எழுத வாசிக்கக் கற்றுக் கொள்வானென்று ஒரு கிராமக் குருவிடத்தில் குற்றேவல் செய்ய விட்டார்கள். குரு அவனை சிறிதும் படிக்க விடவில்லை. கோவேறு கழுதை மேய்ப்பது முதலிய எளிய வேலை செய்வித்துக் கொண்டிருந்தார். இப்படி இருக்கும் பொழுது படிக்க அவகாசம் எங்கிருந்து வரும். சிறுவன் குரு இட்ட ஏவல் செய்துவரும் காலை ஒரு நாள் சபையாரில் ஒருவனுக்கு அடைப்பில் கல் அடைத்து வெகு கஷ்டம் உண்டாக, இவ்வகை ரண வைத்தியத்தில் நிபுணனென்று பெயர் பெற்ற கொலோ என்பவனை வரவழைத்துக் காட்டினார்கள். அவர் அடைப்பைக் கீறிக் கல்லை எடுத்து சவுக்கியமாக்கினார். அந்த அரிய வித்தை வைத்தியர் செய்யும் பொழுது அருகிலிருந்து பார்த்துக் கொண்டு நின்ற பெடியன் இவ்வகைச் சஸ்திர ரண வைத்தியம் கற்கவேண்டுமென்று அன்றே சங்கற்பம் செய்தானாம்.

பின்பு குருவீட்டில் வேலைசெய்வதை நிறுத்திவிட்டு, பெயர் என்பவன் ரணவைத்தியம் அறிந்த சவரகன் ஒருவனிடத்தில் தொழில் பழக ஒப்புக்கொண்டான். அச்சவரகன் நாமம் வயலந். அவனிடத்தில் சேர்ந்து, ரத்தம் குத்தி வாங்குவது முதல் பிறகுள்ள முதலிய சாதாரண ரணவைத்தியம் பழகினான். சவரகனுடைய பழகியபின் பாரிஸ் நகரத்திற்குப் போய்ப் பட்டசாலையில் சேர்ந்து அங்கபாடாதமும் ரணவைத்தியமும் கற்றுக்கொண்டுவந்தான். ஒழிவு கண்டு சவரகன் வேலை செய்து அன்றன்று தேடிய பணம் அவனுக்கு அன்னவஸ்திராதிகளுக்கு உதவிற்று. கற்றுத் தெளிந்தபின் ஒரு சத்திரத்தில் ரணவைத்தியர் சகாயர் உத்தியோகம் படைத்து அங்குள்ள பிரதான ரணவைத்தியர் கோபில் என்பவர் அவ்வாலிபனுடைய கைத்திறத்தையும் கல்வித் தெளிவையும் சாமர்த்தியத்தையும் கண்டு, தம்மால் நிர்வகிக்க மாளாத ரோகிகளை அவனிடத்தில் ஒப்பித்தார். முறைமைப்படி கற்க வேண்டிய துறை அனைத்தும் கற்றுத் தெளிந்தபின், பெயர் இராஜரீக ரணவைத்தியர் பதவி பெற்றுச் சிறிது காலத்திற்குள் பீத்மோந்தில் மந்தமொன்டலி நெசாத்தீர் விகாரங்களுக்கு உட்பட்ட பிரான்ஸிய சேனைவீரர்க்கு வைத்தியராய் அமர்ந்தார். அவர் தாம் கற்ற துறையில் முன்னோர் வழக்கத்தை முறைமையான வழியென்று எண்ணி அவ்வழி நிலைமாறு ஒழுகும் இயற்கையுடையவரல்லர். அவர் அதிக சொற்கதையும் இயற்கை விவேகமுமுடையவர். அவ்வரிய வரம் இரண்டும் அவருக்கு வாய்ப்பெற அமைந்திருந்தமையால், அன்றன்று செய்வதை ஆதித் தேறித் திருத்தம் செய்தார். அதனுடைய முதிர முதிர, ரோககாரணத்தையும் அதன்முடிவு தன்மைத்தையும் நினைத்து கண்டுபிடித்தார். அவர் துப்பாக்கிக் குண்டுபட்டுக் காயமப்பட்டவர்களுக்கு ரணவைத்தியமாய் உண்டாகும் பீடை அவர்கள் பிராணனைச் சத்துருக்களால் சேரிக்கும் அபாயத்திலும் பெரிது. துப்பாக்கி ரவை-குண்டு பட்ட காயத்திலிருந்து

பெருகும் உதிரத்தைத் தடுக்க முன்னுள்ள வைத்தியர் இரக்கமற்றுத் அடிக்கடி பழுக்கக் காய்ச்சிய எண்ணெயைக் காயத்தில் ஊற்றுவார்கள்; பழுக்கக் காய்ந்த இரும்பாற் சுட்டு இரத்தப் பெருக்கைத் தடுப்பார்கள்; கை-கால் முதலிய அவயவங்களைத் துண்டிக்கவேண்டும்பொழுது கத்தியைக் கொல்லுலையிற் பழுக்கக் காய்ச்சித் தறிப்பார்கள். ஆதியில் பெயரும் அம்முறையை அனுசரித்துவந்தார். ஒரு சமயத்தில் [illegible] அகப்படவில்லை. அகப்படாதது நோயாளியுடைய அதிர்ஷ்டந்தான். அதனால் பெயர் மருந்தொன்று உபசாந்தி செய்தார். அந்த [illegible] சிகிச்சை வாய்க்காதுபோமோவென நினைந்து அன்றிரா முழுதும் அவருக்கு உறக்கம் பிடிக்கவில்லை, பெரு விசாரம் உண்டாயிற்று. மறு நாட் காலையில் நோயாளிகளைப் போய்ப் பார்த்தார். அதனை சிகிச்சை செய்தவர்களுக்கு வேதனை சிறிது தணிந்திருந்தது; பழைய சிகிச்சை செய்தவர்களோ தீவிர வேதனையால் வருந்தி உழன்றார்கள். அப்பாக்கிச் சூண்டுக் காயத்திற்கும் பெயர் வைத்தியர் [illegible] சடிதியிற் பரமனையும் கண்டு பிரயோகித்த வரலாறு இதே. அன்றுமுதற்கொண்டு அவர் இந்த உபசாந்தியே செய்துகொண்டுவந்தார்; காயம் சுட்டும் முறையின்றி உதிரம் தக்கும் முறையிலும் அவரால் திருத்தம் ஏற்பட்டது. பெருகும் உதிரத்தை முன்பு பழுக்கக் காய்ந்த இரும்பால் சுட்டுத் தடுப்பார்கள். அவர் அந்த வழக்கத்தை நிறுத்திவிட்டு நரம்பைக் கட்டி இரத்தத்தைத் தடுத்தார். இதைத்தொட்டு அவருக்கு பெருமை [illegible] தொன்றுதொட்டுள்ள [illegible] காட்டிய [illegible] எவர்க்கும் [illegible] இயற்கை தானே. [illegible] செய்தது; இவர் [illegible], இப்படிச் செய்வது [illegible], இது பாமரவைத்தியம் ஆதலால் இவர்முறையை அங்கீகரிப்பதில்லையென்று ச

தும் சொன்னார்கள். அவர் கல்விமான் அல்லவென்றும், முக்கியமாய் லத்தீன் கிரேக்க பாஷைகள் அறியாரென்றும் அவரைத் தாழ்த்தினார்கள். ஆங்கில ஆசிரியர்கள் எழுதிய கிரந்தங்களில் தங்கள் பக்ஷத்திற்கு அனுகூலமாக மேற்கோள் எடுத்துக் காட்டினார்கள். அவ்வாக்கியங்களை அவர் மெய்ப்பிக்கவும் அறியார் ஆக்ஷேபிக்கவும் அறியார். அவர் சிகிச்சையோ வெகுவெற வாய்த்தது. அதனால் அவ்விரோதிகள் கேட்ட கேள்விக்கும் அதுவே சுயம் மிகு மறுமொழி. அன்றுமுதல் காயப்பட்ட ராணுவசேவகர் பெயர் வைத்தியரையே விரும்பி அழைத்தார்கள். அழைக்கும் பொழுதெல்லாம் ஆஜராகி அவர் காயத்தை ஆற்றினார். அவர்களைப் பெற்ற தாயைப் போல் பேணிப் பரிவுடன் உபசரித்தார். அன்றன்று அவர்களைப் பார்த்துப் பரிகரித்து விடைபெற்றுப் போகும்பொழுது, "நான் காயம் கட்டினேன் — தெய்வம் அதை ஆற்றிக் கொடுக்க வேண்டும்" என்று சொல்லிப் போவார்.

பட்டணத்தில் மூன்று வருஷம் ரணவைத்தியர் உத்தியோகம் செய்தபின், பெயர் பரீஸ் நகரத்திற்குப் புகழ்மாலை சூடித் திரும்பினார். அங்கவர் போய்ச் சேர்ந்த உடனே அரண்மனை ரணவைத்தியர் உத்தியோகம் படிந்தது. ௫-வது சார்லஸ் அரசன் காலத்தில் ஸ்பானிய ராணுவவீரர் மெத்ஸ் கோட்டையை முற்றுகை செய்து சண்டை நடந்த பொழுது, கோட்டை ராணுவ வீரர் வெகு பேர் காயம் பட்டார்கள். அவர்களைக் காக்க வேண்டிய தகுந்த ரணவைத்தியர் இல்லை; உள்ளவர்களும் அசமர்த்தியர். ஸ்பானியருடைய சத்துருக்கள் வெட்டின காயங்களைவிடவும் அவ்வைத்தியருடைய சிகிச்சையினாலேயே இறந்தவர்கள் அனேகர். கோட்டை ராணுவத்தலைவன் கைஸ் டியூக் பிரபு அரசனுக்குக் கடிதம் போட்டு, பெயர் வைத்தியனை மனதிரங்கி அனுப்பவேண்டுமென்று பிரார்த்தித்தார். ராஜ உத்தரவு பிறக்கவும், தைரியசாலி ஆகிய அந்த ரண வைத்தியர்

புறப்பட்டுப் போய் எத்தனையோ சங்கடப்பட்டு மாற்றான் பாளயத்தைத் தாண்டி ஒரு படி வெந்தல் கோட்டையில் க்ஷேமமாய்ச் சேர்ந்தார். அவ்வளவு பேருக்கும் தளபதிகளும் தளவகுப்புத் தலைவரும் பரிவு காட்டி உபசரித்தார்கள். அவர் போய்ச் சேர்ந்த செய்தி கேட்டவுடன் ராணுவ வீரர் "இனி நாம் காயப்பட்டு இறந்துபோவோமென்று அஞ்சவேண்டியதில்லை. நமது அன்பர் நம்மிடத்தில் வந்து சேர்ந்தாரே" எனக் களி கூர்ந்து மொழிந்தார்கள். அடுத்த வருஷம் ஸெவோய் டியூக் பிரபு [illegible] நகரத்தை முற்றுகை செய்தபோழுது, அந்நகரத்தின் இருந்த ராணுவ வீரருக்கு உதவியாகப் பெயர் வைத்தியரும் போயிருந்தார். சில தினத்தில் அந்நகரத்தை மாற்றான் கட்டிக்கொண்டு வெகு பெயரைச் சிறைபிடித்தான். பெயர் வைத்தியரும் சிறைப்பட்டார். சிறையிருக்கையில் எதிரி பக்ஷத்து ராணுவ பதி ஒருவர் பக்ஷமாய்ப் பட்டு வருந்த, பெயர் அவரை ஸ்வஸ்தப்படுத்திச் சிறைமீட்சிப் பணம் கொடாமல் விடை பெற்றுப் பரீஸ் நகரத்தில் க்ஷேமமாய்ப் போய்ச் சேர்ந்தார்.

அப்பால் காலத்தையும் அவர் கல்வி கற்றதும் ஈடு முயற்சியால் தேறித் தெய்வ சித்தம் செய்து நற்செய்கைகளில் காட்டப்போகிறார். அவர் காலத்தில் உள்ள வித்வஜனர் சிலர் வருத்திக் கேட்டதனுக்கு, சனவைத்தியம் செய்யத் தொடங்கிய பின் [illegible] அறிந்தவர்களையும் எழுதி இருப்பக்கட்டிப் பாகங்களாய் வெவ்வேறு காலத்தில் அச்சிட்டுப் பிரசுரஞ்செய்தார். அப்புஸ்தகங்களில் முறிவுகளைப் பற்றியும் அவற்றைச் சேர்க்கும் முறைகளையும் காயம் கட்டும் வகைகளையும் அவர் காணாமல் அறியாமல் ஒன்றையும் எழுதிவைக்கவில்லை. ஆனால் [illegible] அந்தச் சிகிச்சையை அறிந்தவர்கள். பெயர் அரசினர்ப்போல ரோமான் வழங்காமல், பிரான்தெய்த் தாந்தர்-ஆகிய அரசனுக்கு சனவைத்தியர் உத்தியோகம் செய்

வதை அவர் விட்டு விடவில்லை. அர்ச்சிய செயின்ட் பார்த்தல மியூ சர்வ சங்காரம் நடந்த சமயத்தில் பெயர் அதற்குத் தப்பிப் பிழைத்தது அவருக்கு அதிருஷ்டமாயிருந்த ஒன்பதாவது சார்லஸின் உதவியால். அந்தச் சார்லஸுக்கு முன் ஒரு சமயத்தில் ரத்தம் குத்தி வாங்கும் வைத்தியரான ரணவைத்தியன் ஒருவன் நரம்பைப் பிளந்தபொழுது பெருங்காயம் பட்டது. அதனால் கொடிய வருத்தம் உண்டாயிற்று. பெயர் வைத்தியர் அத்தருணத்தில் முற்பட்டுக் காயங்கட்டி அரசனைப் பிழைப்பித்தனர். பிரான்டோம் எழுதிய சரித்திர புஸ்தகத்தில் அர்ச்சிய செயின்ட் பார்தலமியூ உற்சவம் நடந்த ராத்திரி அரசன் பெயரை மரணத்தினின்றும் தப்புவித்ததைச் சுட்டி, 'அரசன் பெயரை அழைப்பித்துத் தன் அரண்மனைக்குள் வஸ்திராலயத்தில் விட்டுவைத்து பொழுது விடியுந்தனையும் வெளிப்படவேண்டாமென்று இட்டம் செய்தான். இராஏரான மனுஷரை மரணத்தினின்றும் தப்புவித்துப் புண்ணியம் கட்டிக்கொண்ட இவரை எண்ணிறந்த பிறருடன் சங்கரிக்கப்படவிடுவது அதர்மம்' என மொழிந்தானென்று கண்டிருக்கின்றது. இவ்வாறு பெயர் வைத்தியர் அன்றிராத்திரி நடந்த பயங்கரமான சர்வ சங்காரத்திற்குத் தப்பிப் பிழைத்து மெத்த வருஷகாலம் ஜீவியராயிருந்து கடைமுதிர் வயதில் அச்சமற்றிறந்தார்.

மேலே எடுத்துக்காட்டிய பெயரைப்போல் ஹார்வி (Harvey) என்பவரும் கஷ்டப்பட்டு உழைத்தவரா. உடலில் உதிரம் சென்று செல்லும் அதிசயத்தை விளக்கி ஒரு கிரந்தமெழுத அவர் குறையாமல் எட்டு வருஷம் அதுபற்றிப் பல விஷய சோதனைகள் ஆராய்ந்து பார்த்து அளவிட்டார். அவர் அக்காலமாய்ப் பிடித்த தப்பங்களை வெளியிட்டபொழுது இதர வைத்தியர் ஆக்ஷேபிக்கத் துணிவார்களென்று முன்னமே பரிசோதனை செய்து சந்தேகமற மெய்ப்பித்திருந்தார். அதனில் அவர் தம் அபிப்பிராயங்களை எழுதிப் பிரசுரிக்கப்படுத்திய இரு புஸ்த

கம் மிகவும் அவையடக்கமானது, எளிதில் பொருள் விளங்குவது, மயக்கமறத் தெளியத் தோன்றுவது, தாஷ்டாந்த திர்ஷ்டாந்தங்கள் பொருந்த முடிவது. இத்தனை நயமுற்றிருந்தும், அப்புஸ்தகத்தைப் பித்தம் பிடித்த பெடிசக்காரனுடைய பிதற்றென்று எல்லோரும் இகழ்ந்தார்கள். சிறிது காலமளவும் ஒருவராவது அவர் புஸ்தகத்தை ஒப்புக்கொள்ளவில்லை. எவ்வளவோ வருந்தி உழைத்து எழுதியதற்கு அவர் பெற்ற பிரதிபலன் நிந்தையும் அவமானமுமே. யாவரும் தலைமேற்கொள்ளும் மூன்றோர் ஆட்சியை அவர் தள்ளத் தகாதென்றும், அவர் படும் தப்பபிப்பிராயத்தால் சத்திய வேத அதிகாரம் தலைகீழாய்க் கவிழ, சன்மார்க்கமும் பக்தியும் அடியற்று ஒழியுமென்றும் வெகு பெயர் குறைகூறினார்கள். பின்பு அவரைக்கொண்டு ஒருவரும் வைத்தியம் செய்விக்கவில்லை. அவர் பிழைப்புக் கட்டோடே கெட்டுப்போயிற்று. அவருக்கு அறுதலிகள் எங்கும் இல்லை. இந்தப்படி பல துன்பமும் துக்கமும் இன்னும் இழிக்கவும் நேரிட்டும் வறுமை எனும் பிணியால் வருந்தியும் ஹார்வி தாம் பிடித்த பிடியை விடவில்லை. அவர் காட்டி நாடிய கொள்கையை யுக்திபுத்தியுடையோர்கள் பொருத்தி நினைத்து மனத்தாலில் சீர்தூக்கிப் பார்த்தார்கள். பார்க்கப் பார்க்க அது மெய்யென்று பின்னும் பல திருஷ்டாந்தங்களால் தெரியவந்தது. அக்கொள்கை சாஸ்திர சம்மதமென்று யாவரும் அறிந்து குறைகூறுதலைவிட்டு அங்கீகரிக்க ஏறக்குறைய இருபத்தைந்து வருஷம் சென்றது.

அம்மை குத்துதல் அம்மை ரோக நிவிர்த்தி சாதனமென்று இங்கிலாந்து தேசமெங்கும் பிரசித்தஞ்செய்த பெரியோராகிய ஜென்னர் வைத்தியருக்கு (Dr. Jenner) நேரிட்ட துன்பத்தை விசாரிக்கும்போது ஞாபகத்துக்கு வந்த அயர் பெரிதெனத் தோன்றுகிறது. அவருக்கு முன் உள்ளவர்கள் அனேகர் கோவசூரி வந்தவர்களைப் பார்த்திருந்தனர். அந்த ரோகம் வந்தவர்களுக்கு அம்மை வியாதி வராதென்று

க்ளாஸ்டர்ஷயர் மாகாணத்திற் சஞ்சரிக்கும் இடைச்சியருக்குள் பிறந்துலாவும் வதந்தி கேட்டதும் உண்டு. அவ்வதந்தி அறிவிலிகள் பேச்சு, இதனை நம்புவது, விபரீதமானது என்று எல்லோரும் நினைத்திருந்தார்கள். ஜென்னர் அதைச் சிந்திக்கும்படி தற்செயலாய் நேர்ந்தது. அதுவரையில் அது ஆய்ந்தறியத் தகும் விஷயமென்று எவரும் எண்ணவில்லை. அப்பொழுது ஜென்னர் வாலிபர்; ஸாட்பரியில் வைத்திய சாஸ்திரம் கற்றுக்கொண்டுவந்தவர். அவர் ஆசிரியரிடத்தில் ஏதோ நோய்க்கு மருந்து கேட்கக் குப்பக்காட்டுப் பெண்ணொருத்தி போயிருந்தாள். யாதோ பேச்சுத் தொடர்பில் அம்மை வியாதி எனும் பெயர் வைத்தியர் வாக்கினின்று பிறந்தது. அது கேட்டவுடன் அந்தப் பெண் "எனக்கு இனி அம்மை வியாதி வராது. கோவசூரி வந்ததே" என்று சொன்னாள். அவள் வாய்மொழி ஜென்னருடைய சிந்தையில் ஆணி அறைந்தது போலப் பதிந்தது. அன்று தொட்டு அவர் பலவாறு இவ்விஷய விசாரணை செய்யத் தொடங்கினார். கோவசூரியின் சம்பந்தமான குணத்தைப்பற்றித் தமது அபிப்பிராயங்களைத் தமக்கு இஷ்டராகிய வைத்தியர் சிலருக்குச் சொல்ல, அவர்கள் அவமானைத்தார்கள்; அம்மாத்திரமோ, அன்றி "இவ்விஷயத்தை இன்னம் தொடர்ச்சியாய்ப் பேசிக்கொண்டு போவாயானால் எங்கள் சபையினின்று உன்னைத் தள்ளிவிடுவோம். பத்திரம்" என்று பயம் காட்டவும் துணிந்தார்கள். லண்டன் நகரத்தில் ஜென்னர் வைத்தியம் கற்றது ஜான் ஹண்டரிடத்தில்; அதை அவர் அறிந்திருந்தார். மேற்குறித்த அபிப்பிராயத்தை அவ்வாசிரியருக்குச் சொன்னபொழுது, அவர் "ஊகித்திருந்தால் பயன் இல்லை, பரீக்ஷித்துப்பார்; பொறுத்துச் செய், செவ்வையாகச் செய்" எனப் புத்தி புகட்டினார். இப்புத்திமதியை நினைக்க நினைக்க ஜென்னருக்குத் துணிவு பிறந்தது. வித்தியாவிமரிசை செய்வோர் அனுசரிக்கத் தகும் சத்திய உபாயத்தை இப்புத்தி அவருக்கு

உணர்த்தியது. பின்பு அவர் நாட்டகத்திற்குத் திரும்பிப் போய் இருபது வருஷகாலம் அங்கிருந்து வைத்தியம் செய்தார். அநேக தடவைகளை ஞானார்த்தியில் கண்டறிந்து பரீக்ஷை செய்துகொண்டுவந்தார். அவர் அநுதினமாய்க் கண்டறிந்த அதிசயத்தைச் சிதாபூர்வமாய் நம்பித் தமது சொந்த மைந்தனுக்கு மேலுமேலும் மூன்று முறை அம்மை குத்தினார். இவ்வாறு திட்டபாரதபூர்வமாய் அறிந்த விஷய வரலாறுகளை அச்சிட்டுப் பிரசித்தப்படுத்தினார். அவர் இயற்றிய இந்தக் கிரந்தம் நான்காய் மடித்த எழுபது பக்கம் வரையும் உள்ளது. இருபத்துமூன்று பெயருக்கு அம்மை குத்திப் பால் கன்றுக் கொப்புளித்து உடைந்ததும், அப்பால் தொத்து வைத்தும் தோலுக்குள் பாலைப் புகுத்தியும் அவர்களுக்கு அம்மை வருவிக்கச் செய்த எத்தனம் ஒன்றும் பலிக்காமற்போனதும் ஆகிய வரலாறெல்லாம் அப்புஸ்தகத்தில் வெளியிடப்பட்டன. அது பிரசுரமானது 1798-ம் ஆண்டு. இவர் அபிப்பிராயம் வாய்ப்பாய் உருப்பெறத் தொடங்கியதோ 1775-ம் ஆண்டு. அன்று தொட்டு அவர் அதைச் சாதித்துவந்தார்.

அவர் கண்டறிந்து அறிக்கை செய்த மர்மத்தை உலகம் ஒப்புக்கொண்டதா இல்லையா? முதலில் எல்லாரும் உபேக்ஷையாயிருந்தார்கள், அப்பால் விரோதிக்கத் தலைப்பட்டார்கள். அம்மை குத்தும் முறையையும் அதன் சித்தியையும் வைத்தியருக்குக் காட்டும்படி ஜென்னர் லண்டன் நகரத்திற்குப் போனார். அங்குள்ள வைத்தியர் ஒருவரும் அதைப் பரீக்ஷித்துப் பார்க்க இணங்கவில்லை. அவசரத்தில் உடன்படுவோர்களென்று தேடிக்கண்டு மாசகாலம் அங்கிருந்தும் எவரும் வரத் திரும்பவில்லை. அதன் பின் ஜென்னர் தமது ஜனம தேசத்திற்குத் திரும்பினார். பசு மடியில் கொப்புளத்து சீழை எடுத்து மனுஷருடைய தேகத்திலுட் புகுத்தி மனுஷரை மாடாக்கத் துணிந்தவனென்று வெகு பெயர் அவர்மேல் பழிபோட்டுத் திட்டத் தலைப்பட்டார்

கள். அம்மை குத்துவது பேயாட்டம், பேய்த்தொழில் எனக் குருக்கள் ஆலயந்தோறும் கூறினார்கள். அம்மை குத்துவிக்கும் பிள்ளைகளுக்கு முகம் மாட்டு முகமாய்ப் போமென்றும், கொம்பு முளைப்பது போலப் புருபுறப்படுகிறதென்றும், முகம் எருமை முகமாய்ப் போக, குரல் எருது முக்காரம் போலவது போல மாறுபடுமென்றும் சொன்னார்கள். எவரெவர் எதைச் சொல்லினும் மெய்யைப் பொய் வெல்லலாகுமா? விரோத பலம் முறிந்ததென்று அம்மை குத்துவதை விளையும் சித்தியை மனுஷர் நம்பாதொழியவில்லை. வரவர வெகு பேருக்கு அதில் நம்பிக்கை ஏறியது. ஒரு கிராமத்தில் துரை ஒருவர் இந்த நூதன வழக்கத்தை அநுசரிக்கத் தொடங்கினார். முதலில் அவரைக் கொண்டு அம்மை குத்துவித்தவர்களைக் காணும் இடந்தோறும் ஊரார் கல்லால் எறிந்து கலகித் துரத்தி, அவர்கள் அவரவர் வீட்டிற் புகுந்து கதவைப் பூட்டிக்கொண்டிருந்தார்கள். பட்டப் பெருமாட்டிகள் இருவர் ஊரச்சம் பாராட்டாமல் தம் பிள்ளைகளுக்கு அம்மை குத்துவித்தார்கள். அம்மட்டில் அக்காலத்தில் தலைப்பட்ட துரபிப்பிராயம் ஒழிந்தது. அந்தக் கௌரவமுள்ள தேசோபகாரிகள் ட்யுவில் பெருமாட்டியும் பெர்லி கௌண்ட் பிரபு பத்தினியாருமே. படிப்படியாய் வைத்தியரும் மனம் திரும்பி வழிக்கு வந்தார்கள். ஆதனமாய்க் கண்ட இவ் விஷயத்தின் அருமைபெருமை தெரியத் தொடங்கியபொழுது, இதனைப் வரும் பிரதிஷ்டையை ஜென்னருக்கு விடாமல் தாமே அபகரித்துக்கொள்ள வகை பார்த்த வைத்தியரும் சிலர் உண்டு. ஜென்னர் மக்களும் மட்டு மீறு அறுமம் அடைந்திருந்து. உலகிய அவருக்குக் கௌரவம் உண்டாயிற்று, உழைப்பிற்கு ஏற்ற வெகுமானமும் பெற்றார். ஆண்மையில் வருத்திய பொழுது அவருக்கு உள்ள பண ஆட்சியே செல்வம் வந்து பிரதபித்தபொழுதும் இருந்தது. லண்டன் நகரத்தில் வாசமாயிருந்து வைத்தியம் செய்தால் வாரவாரி லக்ஷம்

னுமாய் சம்பாதிக்கலாமென்று சிலர் அவரை வருந்தி அழைக்க, அவரோ, "வாழ்நாள் உதயத்தில் தாழ்ந்தொதுங்கிய அறைகளை, பருவத சிகரத்தை அல்ல, பள்ளத்தாக்கை நாடித் திரிந்தேன். இந்த இயற்கையுள்ள நான் வாழ்நாள் அஸ்தமன காலம் வந்திருக்கும் இப்பொழுது திரவியமும் கீர்த்தியும் பெறப் பணைக்கும் மனுஷன் நான்தானென்று நால்வரும் காண ஸ்திரயமாய் வந்து நிற்பது தகுதியல்ல" என்று உத்தரம் சொன்னார். அவர் இருக்கும் பொழுதே அம்மை குத்தும் வழக்கத்தை நாகரிகத்தில் முதிர்ந்த சர்வ தேசத்தாரும் அநுசரித்தனர். இறந்தபின் எங்கெங்குள்ளவர்களும் அவரை லோகோபகாரியென்று பாராட்டினார்கள். "இக்கால வகுப்பில் கண்ட அதிசயம் அம்மை குத்துவது ஒன்றொழிய மற்றொன்றும் இல்லாதிருப்பினும், அவ்வொன்றே இக்காலத்தை என்றென்றைக்கும் சிறப்பித்து விளக்கப் போதும்; போதியதாயிருக்கும் அது வித்தியாலயங்களின் கதவை ஒரு முறை இரு முறை அல்ல, மேலுமேலும் இருபது முறை தட்டத் தட்ட எவரும் திறக்கவில்லை" என கவுவியர் மொழிந்தார்.

தாதுக்கிரம குத்மங்களைக் கருத்தாய்க் கண்டு வெளியிடுமுயற்சியை மேன்மேலும் செய்த ஸ்ரீ சார்லஸ் பெல் (Sir Charles Bell) பொறுமையிலும் நிர்ணயத்திலும் விடாப்பிடியிலும் ஜென்னருக்கு எள்ளளவும் இளைத்தவரல்ல. அவர் காலத்திற்குமுன் உள்ள வைத்தியருக்குத் தாதுகரணங்களைக் குறித்து வாய்ப்பாய் ஒன்றும் தெரியாது. அவர்கள் அறிந்தவெல்லாம் கலக்கமும் மயக்கமாயிருந்தன. இக்கல்வித்துறையில் மூவாயிர வருஷத்திற்குமுன் டிமாக்ரிதஸ், அனக்ஸகோராஸ் என்பவர்கள் பயின்றிருந்த அளவிற்கு அதிகம் எவரும் பயின்றிலர். இது அபிவிருத்தியற்று இருந்தது. ஸ்ரீ சார்லஸ் பெல் இவ்விஷயத்தைப்பற்றிக் கருத்துக் கூர்ந்து ஆறுக்கிழமை வெகுகாலம் ஆராய்ந்தோதிப் பலவாறு பரீக்ஷை செய்து தீர்த்த கொள்கைகளை 1821-ம் ஆண்டு

தொடங்கித் தொடர்ச்சியாகப் பிரசுரஞ்செய்துகொண்டு வந்தார். அக்கொள்கைகள் புத்தம்புதியவைகள், மிகவும் எளிய ஜந்துமுதல் ஜீவஜந்துக்களுக்கெல்லாம் சிரேஷ்டமாய் விளங்கும் மானிடப்பிறவி ஈறாகத் தசதுக்கிரமம் பெருகிப் பெருகி அமைந்திருப்பதை அவர் பொறுத்து வருந்திக் கண்டறிந்து வெளியிட்டார். நமது ஜன்ம பாஷையில் விவரித்து எழுதியிருக்கக் கண்டவர்போல அத்தனை தெளிவுற அதைக் காட்டினரென்று அவர் தாமே எழுதினார். அவர் கண்டறிந்த மர்மம் இது:—முதுகெலும்பின் அகத்தில் உள்ள மூளையில் இரு மூலத்தினின்று முளைத்தெழும் நாதுக்களுக்கு இருவிதகாரணம் உண்டு. ஒரு மூலத்தினின்று எழும் நாதுக்கள் சித்ததாதுக்கள், மற்ற மூலத்தினின்று உற்பத்தியாகுமவை பரிச நாதுக்கள். 1840-ம் ஆண்டு ஸ்ரீ சார்ல்ஸ் பெல் ராஜரீக சங்கத்தில் கடைசிப் பத்திரம் அரங்கேற்றியபொழுது இவ்விஷயம் அவர் நெஞ்சிற் குடிகொள்ளத் தொடங்கி நாற்பது வருஷம். ஆதியில் அவர் தாம் கண்டறிந்த சித்தாந்தங்களைப் பிரசித்தப்படுத்தியபொழுது அவைகளை ஆக்ஷேபித்து நிந்தை சொன்னவர்கள் அனேகர். அவர்கள் சொல்லை அவர் இருணமும் பொருள்செய்யவில்லை. வரவர அச்சித்தாந்தங்களின் தத்துவம் அவர்கள் சித்தத்திற் புலப்பட, அவைகளை முதலிற் கண்டவர்கள் தாம்தாமென்று உள்ளூரிலும் புறவூரிலும் வெகு பெயர் வாதாடத் தலைப்பட்டார்கள். முன்பு ஹார்வி, ஜென்னர் என்பவர்களுக்கும் இந்தப்படிதான் சங்கடம் நேரிட்டது. அவர்களைப்போல் இவர்க்கும் வைத்தியம் செய்து பிழைக்கப் பிழைப்பு பிரசாரம் செய்த பத்திரிகைகாரர் கெடுதிசெய்தனர். தமது நூதன சித்தாந்தங்களைப் படிப்படியாய்க் காணக்கண்ட தம் பெயருக்குப் பங்கம் வராவண்ணம் நீங்களுமே முயன்று வைத்தியம் செய்தேனென்று அவர் எழுதிவைத்தார். கடைசியில் ஸ்ரீ சார்ல்ஸ் பெல்லுடைய அருந்திறத்தை யாவரும் பூர்த்தியாய்க் கண்டு வெகுமானித்தார்கள். பிரக்கியாத

ராஜ்ய வைத்தியருமே சாயங்காலத்தில் தம் முகம் ஒஞ்சரித்துக் கோணிப்போனதைக் கண்டு தம்முடன் இருந்தவர்களைப் பார்த்து, இக்குறி ஸ்ரீ சார்ல்ஸ் பெல் காட்டிய சித்தாந்தம் தப்பற்றதென்பதற்குத் திருஷ்டாந்தமெனக் குறிப்பித்தார்.

பின்னிட்டுக் காலஞ்சென்ற மார்ஷல் ஹால் வைத்தியரும் (Dr. Marshall Hall) இக் கல்வித்துறையை இவனைப்போல் அத்தனை சிரத்தையாய் ஆராய்ந்துகொண்டுவந்தவரே. பின்னோர் தரம்பார்த்து இவரை ஹார்வி, ஹண்டர், ஜென்னர், பெல் என்பவர்கள் வகுப்பில் சேர்த்துக்கொள்வார்கள். அவர் வெகு காலம் உலகத்திற்கு அனுகூலியாயிருந்தவர்; இருக்குமளவும் கருத்துச் செலுத்தாமல் அணுக்கமாய் விஷய அவதானஞ்செய்துகொண்டுவந்தவர். அற்ப விஷயங்களும் அவர் கருத்துக்கு அகப்படாமற்போகவில்லை. இசைவதாய் விரியும் இரத்தத்தை முதலில் கண்டறிந்த அவர் பெயர் வெகு காலம் வித்தியாவினோதருக்குத் தெரிந்திருக்கும். மிகவும் அற்பவதயினால் முதல் முதல் இவ்விஷயம் அவருக்குத் தெரியவந்தது. ஒருவகைப்பிராணியின் சுவாசாசயத்தில் வாயுசஞ்சார விமரிசை செய்யும்பொழுது சிரம் சேதிக்கப்பட்ட அதன் உடல் மேசையின் மேல் வைத்திருந்தது. வாலை வெட்டி எடுத்து அதன் புறத்தோலில் ஊசியாய்க் குத்தவும் வால் ஆடிப் பல வடிவாகச் சுளித்து வளைந்து சுழன்றது. ஒரு தசைநாராயாவது தசை நார்த்திரளையாவது அதைத் தீண்டவில்லை. பின்னை இந்த இயக்கத்தின் தன்மை என்ன? இவ்வகைக் காட்சியை மற்ற பெயர் ஒருவரும் கண்டிருப்பார்கள். ஆனாலும் இவற்றின் காரணவிசாரணை செய்ய முதலிற் கவிப்பட முயன்றவர் ஹாலவைத்தியரே. அச்சமயத்தில் அவர் இதை நான் குறைவறக் கண்டு விளங்க வைக்குந்தலையும் விசாரமற்று ஓய்ந்திரேன் என்று சபதம் செய்தார். அவர் இவ்விஷயத்தை ஓயாமல் அவதானித்துக்கொண்டுவந்தார். அவர் வாழ்நாளில் இவ்விஷய பரீக்ஷையிலும் ரசாயன விமரிசையிலும் குறையாமல் 25,000-மணி நேரம் சென்றதென

க் கணக்கு நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இம் முயற்சியுடன், அவர் அன்றன்று வெகு பெயருக்கு வைத்தியமும் செய்துகொண்டுவந்தார். இம்மாத்திரமல்ல, ஸேந்து தோமாஸ வைத்தியசாலையிலும் வேறு வைத்திய வித்தியாசாலைகளிலும் பிரசங்கமும் செய்துகொண்டுவந்தார். நூதனமாய்க் கண்டுபிடித்தவைகளை அவர் விபரமாய் எழுதி ராஜரிக சங்கத்திற்கு அனுப்ப, சங்கத்தார் அங்கீகரிக்கவில்லை. இது கேட்பவர்களுக்கு ஆச்சரியமாயிருக்கும். அந்தேசத்திலும் புறத்தேசத்திலும் உள்ள வித்வஜனர் அவருடைய சித்தாந்த சத்தியத்தைக் கண்டுணர்ந்து பாராட்டியதை சங்கத்தார் அவர் அனுப்பிய பத்திரத்தை அங்கீகரிக்கப் பதினேழு வருஷம் சென்றது.

ஸ்ரீ வில்லியம் ஹெர்ஷெலுடைய (Sir William Herschel) சரித்திரம் மற்றொரு கல்வித்துறையில் கடைப்பிடி வலிமையை நயம்பெற விளக்கும் திருஷ்டாந்தம். ஜர்மானியாவில் அவர் தகப்பன் சங்கீதம் பயின்று பிழைத்த ஏழை. அவருக்குப் புத்திரர் நாலு பெயர். அந்நாலவர்க்கும் அவர் சங்கீதமே பயிற்றுவித்தார். அவர்களில் மேற்குறித்த வில்லியம் பிழைப்பைநாடி இங்கிலாந்திற்குப் போய் டர்ம் குடிப்படையின் இசைக்குப்பில் எக்காளக்காரனாக அமர்ந்தார். பட்டணம் டொங்காஸ்தரில் இருக்கையில் ஒரு நாள் ஹெர்ஷெல் வெகு விசித்திரமாய் வீணை வாசித்ததைக் கேட்கக் கேட்க மில்லர் வைத்தியருக்கு ஆனந்தமாயிருந்தது. வைத்தியர் அவருடன் வார்த்தையாடிப் பிரியமடைந்து பட்டணத்தை விட்டு வந்து தமது வீட்டிற் சிறிது காலம் தங்கும்படி வேண்டி அழைப்பித்தார். அவர்களுக்குப் பரிச்சயம் அங்ஙனமுண்டாகிவிட, ஹெர்ஷெல் டொங்காஸ்தரில் மில்லர் வைத்தியர் வீட்டில் வசிக்கும்பொழுது பெரும்பாலும் சங்கீத காலக்ஷேபம் நடக்கும் இடங்களில் வீணை வாசித்துக்கொண்டிருப்பார். ஓய்வாயிருக்கும் பொழுதெல்லாம் வைத்தியருடைய புஸ்தகசாலையில் உள்ள புஸ்

தங்களை வாசித்துக்கொண்டுவருவார். இப்படி இருக்கையில், ஹலிபாக்ஸ் கோவிலில் நூதன சாமண்டல யந்திரம் ஒன்று செய்வித்துவைத்து, அதை வாசிக்கப் பழகின ஒருவன் வேண்டுமென விளம்பரம் செய்யப்பட்டது. கேட்டவர்களில் அவ்வுத்தியோகம் ஹெர்ஷெலுக்குக் கிடைத்தது. இத்தொழில் பழகினவர்கள் பெரும்பாலும் ஓரிடத்தில் நிலையாய் இருக்க வாய்க்காது. ஹெர்ஷெல் டோன்காஸ்டரிலிருந்து பாத்துக்குப் போய் ஆக்டகன் தேவாலய யந்திரவாத்ய கோஷ்டியிற் சேர்ந்து தொழில் செய்தார்; அன்றியும் அங்குள்ள அஷ்டகோண தேவாலயத்தில் சாமண்டலம் வாசிக்கும் சேவகமும் அவர்க்கு அமர்ந்தது. ககோள சாஸ்திரத்தில் நூதனமாய்க் கண்டு வெளியிடப்பட்ட சில நுட்பங்கள் அவர் மனதைக் கட்டிக்கொள்ள அவருக்கு அவைகளில் அடங்காத ஆசை உண்டாயிற்று. உண்டாகவே, அவர் அங்கங்கே விசாரித்து இங்ஙனம் ஒருவரிடத்தில் க்ரெகோரியன் தூரதிருஷ்டி யந்திரம் ஒன்று இரவல் வாங்கினார். வாங்கிப் பிரயோகித்து வரவர, வழிநடாத்திய அந்தச் சங்கீத வித்வானுக்குக் ககோளசாஸ்திர விசாரணையில் அதிகவிருப்பு உண்டாய், தூரதிருஷ்டி யந்திரம் ஒன்று கிரயம் கொடுத்தாயினும் சொந்தமாக வாங்கிக்கொள்ள நினைத்து கிரயம் என்னவென்று கேட்டார். லண்டன் நகரத்தில் திருஷ்டி யந்திர வியாபாரி சொன்ன விலை யானைவிலை குதிரைவிலையாயிருந்தது. அவர் அவ்விலை கொடுத்து வாங்க சக்தியில்லை. அதனால், தாமே ஒன்று நிர்மாணித்துக்கொள்ள நினைத்தார். பிரதிபிம்ப தூரதிருஷ்டி யந்திரத்தையும், அதற்கு முக்கிய அங்கமாகிய அசமனிந்த தாதுதர்ப்பணம் செய்யும் வித்தையையும் அறிந்தோர்க்குத் தெரியும் இம் முயற்சியின் அருமைபெருமை. நேர்ந்த சங்கடங்களையெல்லாம் பொறுமையாய் சகித்துக்கொண்டு கெடுதான் வருஷம் ஐந்தடிப் பிரதிபிம்ப திருஷ்டி யந்திரம் ஒன்று அவர் செய்து முடித்தார். அதைக் கொண்டு அவர் சனி என்னும் கிரகத்தைச் சுற்றிய வளையமும் உபக

கிரகங்களையும் கண்டு களிகூர்ந்தார். இம்மட்டிலே அவருக்குத் திருப்தி உண்டாகவில்லை-ஏழு - பத்து - இருபது அடிகளையும் வெவ்வேறு அளவான யந்திரங்களை அடித்துச் செய்ய ஆரம்பித்தார். ஏழடிப் பிரதிபிம்பதிருஷ்டியந்திரம் செய்யும்பொழுது அவர் பட்டபாடு மிகுதி. எவ்வளவு பலமும் தாங்கும் திறமுள்ள தாது தர்ப்பணம் செய்வது அசாத்தியமாயிருந்தது. செய்யச்செய்ய ஒன்றும் வாய்க்கவில்லை. பட்ட பிரயாசை எல்லாம் வியர்த்தமாய்ப்போயிற்று. குறையாமல் நூறு தர்ப்பணம் செய்து ஒன்றே ஒன்று கருமத்திற்கு உதவிற்று. இவர் மனம் சலிக்காது உழைத்து எதையும் சாதிக்கும் பிரகிருதியுள்ளவர் என்பதற்கு இது நல்ல திருஷ்டாந்தமே. அவர் தமது யந்திரங்களால் அண்டத்தை அளவிடும் அருந்தொழில் செய்துவரும் காலத்தில் தாம் பயின்றிருந்த ஜீவனோபாயத்தைக் கைசோரவிடாமல் மேற்குறித்த யந்திராலயத்திற்குவரும் வேடிக்கைபிரியருக்கு வேய்ங்குழல் ஊதிப் பிழைத்தார். என்ன கருமம் செய்யும்பொழுதும் அவருக்கு ஆசை அண்டகோள திருஷ்டியில். குழல் ஊதிச் சிறிது ஓய்ந்திருக்கும்பொழுதெல்லாம் அதை வைத்துவிட்டு வெளியே நழுவிப்போய் நொடிநேரம் திருஷ்டியந்திரத்தைச் சற்றுத் திருப்பிவைத்துப் பார்த்து நாழிகை ஆயிற்றோமென்று மீளவும் குழல் ஊத ஓடிப்போவார். இவ்வாறு சலிப்பற முயன்று ஹெர்ஷெல் பண்டிதர் ஜார்ஜியம் ஸைடஸ் எனும் கிரகத்தை நூதனமாய்க் கண்டு, அதன் பதத்தையும் கதியையும் தப்பறக் கணித்துக் கண்ட பலத்தை வயணமாய் எழுதி வித்தியா சங்கத்திற்கு அனுப்பினார்; அனுப்பவே, குழல் ஊதி வயிறு வளர்த்த அப்ரக்கியாதராகிய அவர் மகா பிரக்கியாதரானார். அடுத்துச் சிறிது காலத்திற்குள் அவர் சர்க்கார் ஜோதிஷ சாஸ்திரி ஆக நியமிக்கப்பெற்றார். இவரது ஜார்ஜ் அரசனுடைய கிருபையால் ஜீவனுள்ளளவும் [illegible] வருஷத்துக்கு உத்தியோகபதவி ஒன்று அவருக்குப் படிந்தது. இத்தனை கௌரவம் பெற்றும் அவர்

கர்விக்காமல், முன் வறிஞராயிருக்கையில் தமக்குள்ள சாந்தகுணமும் பணிவுமே ஒப்பரிய பூஷணமென்று அவைகளைச் சாந்தனேயும் மேற்கொண்டு நடந்தார். இத்தனை சாந்தமும் பொறுமையும் இடருக்கு இளைக்காத அதிசயவிடாப்பிடியும் வித்யாசித்தியுமுள்ளவர்களை எக்காலத்தேசங்களிலும் காண்பது அசாத்தியம்.

இங்கிலாந்தில் பிருதிவி வித்தையின் தந்தையாகிய வில்யம் ஸ்மித் (William Smith) என்பவர் மேற்சொல்லிய ஹெர்ஷெலைப்போல் அத்தனை பிரக்கியாதரல்லை. அப்படியிருப்பினும், பொறுத்து வருந்தி முயலும் முயற்சிக்கும், கிட்டும் சமயத்தை எட்டி விடாமற் பொட்டெனக் கையாடும் திறத்திற்கும் கட்டளை எனத் தகும் ஹெர்ஷெல் சரித்திரத்திற்கு இவர் சரித்திரம் எவ்வளவும் இளைக்காது. அவர் ஜனன வருஷம் 1769 - அக்ஸ்போர்ட்ஷியர் மாகாணத்தைச் சேர்ந்த சர்ச்ஹில் ஊரில் சாமானிய கிருஷிகராகிய தந்தை இளமையில் இறந்துபோனதனால் அவர் ஒரு கிராமப் பாடசாலையில் கற்றதெல்லாம் கூடி அம்பக் கல்விதான். அவ்வளவேனும் கற்க அவர் கிரமமாய்ப் பள்ளிக்குப் போகிறதில்லை, வியர்த்தமாய்த் தெரு உலாவித்திரிவார். மாதாவிற்குப் புனர்விவாகமாகவும், சிறிய தந்தை ஒருவர் அவனைத் தமது வசத்திற் கொண்டுபோய் வைத்திருந்து வளர்த்தார். அந்தச் சிற்றப்பனும் கிருஷிகர்தாம். கை இளைஞர் அயற்புலத்தில் அங்கும் இங்கும் சிதறுண்டிருக்கும் முட்டைக்கல் முதலாய் கற்களை அதிசயமானவைகளென்று பொறுக்கிக்கொண்டு வீணாய்ப் போகவிடாது திரிவார். திரிந்தாலும், சிற்றப்பன் அனுமதியாமலிராமல், க்ஷேத்திரகணிதம் சில அளவு எனும் கல்வித்துறைகளின் புஸ்தகங்களைக் கற்றுக்கொள்ளும்படி வேண்டும் புஸ்தகங்கள் சில சேகரித்துக் கொடுத்தார். இவ்விடம் அளந்து பிரிக்கும் பிரீதி அவருக்கு உண்டெனத் தோன்றியது. பால்ய காலத்திலும் கண் காணும் எதையும் கூர்ந்துக் கூர்ந்து கவனிப்பது அவர் ஜன்

ம லக்ஷணமாயிருந்தது; அவர் தேறத் தெளிய ஒரு முறை கண்டதை ஒருபொழுதும் மறப்பதில்லை. அவர் படம் எழுத, வர்ணம் கொடுக்க, நிலம் அளக்க, பரப்புக் கணிக்க இரம மாய் எவரும் போதிக்காமலே தாமாகச் சாதனைபண்ணிக் கொண்டுவந்தார். இப்படிப் பிறர் உதவியின்றித் தம் முய ற்சியால் கற்றுக் கொண்டதனால் விசேஷ விற்ப த்தியுடையவரானார். ஆகவே, அயலூரில் நிலம் அளக்கும் நிபுணர் ஒருவருக்குத் துணைவராக அவருக்கு அலுவல் படி ந்தது. அவர் நிலம் அளக்க அக்ஸ்போர்டுஷீயர் மாகாண த்திற்கும் அயல் நாடுகளுக்கும் அடிக்கடி போய்வருவார். அவர் போகும் மார்க்கத்திலும் அளக்கும் நிலத்திலும் கா ணும் வெவ்வேறு வித மண்பாறைகளையும் அடிப்படைத் தொ டரையும் கருத்தில் அழுந்தச் சிந்தித்துவந்தார். களிமண் சுக்காணும் அதன்மேல் கற்படையும் உள்ள நிலத்தில் செம் மண் நிலயத்தைத் திட்டமாய் ஆராய்ந்து பார்த்தார். அவர் எத்தனை எத்தனையோ நிலக்கரிக் கனிகளை அளக்கும்படி நே ரிட்டது. அவைகளிலும் நில இயற்கை விசாரத்தைக் காண க்காண அவருக்கு இவ்விஷயத்தில் அனுபவம் முதிர்ந்தது. அவர் பூமியின் அடிப்படைத்தொடரை விளக்கும் படம் ஒன்று சித்தஞ்செய்ய நினைக்கலானபொழுது அவருக்குப் பருவம் ஆக இருபத்தாறு.

ஸாமர்ஸெட்ஷியர் மாகாணத்தில் கால்வாய் ஒன்று வெட்டுவதற்கு திட்டம் எடுத்துக்கொண்டிருக்கையில் அம் மாகாணத்தரையின் அடிப்படைத் தொடர்ச்சியின் பொது க்கிரமத்தைப்பற்றி அவருக்குத் தெளிவு ஏற்பட்டது. நிலக்க ரிக்கு மேற்பட்டன தரை மட்டமாயில்லை, கிழக்கு முகமா ய்ச் சரிந்திருந்ததாக அவர் கண்டுபிடித்தார். ரொட்டி யைப் பிளவு பிளவாக வெட்டி வெண்ணெய் பூசி ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கும் அடுக்கு அதற்கு உவமை. அடுத்து விரைவில் ஒன்றுக்கொன்று இணையாயிருக்கு பள்ளத்தாக்கு இரண்டின் அடிப்படைத் தொடரைச் சோதித்துப்பார்த்துத்

தாம் எண்ணியபடி சரியாயிருந்தது கண்டு மனம் தேறினர். படைத் தொடர்ச் சிரமம் இதா—தென் முகம் செம்மண், அதன் அடிப்படை களிமண் சுக்கான்கல், அதன் கீழ்ப் படை மூட்டைக்கல். இப்படைகள் கிழக்கு முகமாய்ப் போகப் போகச் சரிந்திருந்தன. பிற்பாடு, இங்கிலாந்திலும் வேல்ஸிலும் நடந்தேனும் கால்வாய் வேலைத் திறத்தைப் போய்ப் பார்த்துப் பரிசோதிக்கும்படி நியதி பெற்றதனால், அவர் மனதிற் கற்பனா ரூபமாய்க் கொண்ட கொள்கை பெருக நிதரிசனப்பட்டது. அவர் பாத்தினின்று தைதன் கரையில் உள்ள நியூகாஸில் வரையிற் பிரயாணம்போய் ஷிராப்ஷியர்-வேல்ஸ் மார்க்கமாய்த் திரும்பிவரச் சென்ற காலம் எல்லாம் காணப்படுவதைக் கூர்ந்து பார்க்கும் அவர் கண் நொடிப்பொழுதேனும் சும்மா இருக்கவில்லை. கூட்டாளிகளுடன் போக வர இருந்த மார்க்கத்தில் உள்ள நாடுகளின் நிலப்பாங்கையும், அடிப்படைத் தொடர்ச் சிரமத்தையும் அவர் தீவிரமாய்க் கண்டு குறித்துப் பின்னுக்கு உதவுமென்று வைத்திருந்தார். யோர்க்கிலிருந்து நியூகாஸிலுக்குத் தபால் வண்டியில் அவர் சென்ற மார்க்கத்திற்கும், கிழக்குத் திசையில் உள்ள மாக்கல் - மூட்டைக்கல் மலைத் தொடருக்கும் தூரம் ஐந்து, பத்து, பதினைந்து மைல் வரையும் உண்டு. இப்படி எட்ட இருந்தும், அவர் அம்மலைகளின் சாயல் சரிவையும் நிலையத்தையும், அங்கங்கே மார்க்கத்தில் இருக்கும் களிமண் சுக்கானையும் செம்பாட்டு நிலத்தையும் கண்டு அவைகளின் இயற்கை இன்னதென்று தெளிவுறக் கிரகித்துக்கொண்டார். பூமி இயற்கையைக் காணும் திருஷ்டி அவருக்கு அத்தனை தீக்ஷணமாயிருந்தது.

அவர் கண்டு நிச்சயித்த சாதாரண சித்தாந்தங்கள் :— இங்கிலாந்தின் மேற்குப் பாகத்தில் உள்ள நாடுகளின் கற்படை கிழக்கு முகமாகவும் தென்கிழக்கு முகமாகவும் சாய்ந்திருக்கிறதென்பதும்; நிலக்கரிப் படைக்கு மேல் உள்ள செம்மணற் கல்லுக்கும் களிமண்ணுக்கும் மேலே களிமண் கல்

னும் சுக்கான கல்லும் விளைய, அதன் மேல் மணலும், மஞ்சட் சுக்கான் கல்லும் களிமண்ணும் படைபடையாயிருந்து கத்ஸ்வோல்ட் குன்றுகளைச் சார்ந்த மேட்டுச் சம பூமி ஆகிறதென்றும், இப்படைகளுக்கு மேல் இங்கிலாந்தின் கீழ் பாகத்தில் உள்ள விஸ்தாரமான மாக்கற்படை இருக்கிறதென்றும் அவர் நிதானித்தார். அன்றியும், களிமண்படை, மணற்படை, சுக்கான்கற்படை எனும் வெவ்வேறான இப்படைகளில் அததற்குரிய சிலாபலங்கள் அடைந்திருக்குமென்றும் அவர் கண்டார். மேலும், இவைகளை வெகுவாய்ச் சீர்தூக்கிப் பார்க்கப் பார்க்க, அப்படைகளில் உள்ள வெவ்வேறு ஜலசர சிலாபலங்கள் வெவ்வேறு கடலடித்தரையைக் காட்டுமென்றும், அடுக்காய்த் தொடர்ந்திருக்கும் களிமண்படை, மணற்படை, மாக்கற்படை, கற்படைகள் இந்தப் பூமி உற்பத்தியான காலமுதற் சென்ற வெவ்வேறு காலாவதிகளைக் குறிப்பிக்குமென்றும் அவர் அநுமிதி செய்தார். இவ்வநுமிதியை அதற்குமுன் எவரும் கேட்டதில்லை.

இந்நினைவு அவர் நெஞ்சில் நிலையாய்க் குடியேறியது. இவ்வொன்றைத் தவிர மற்றொன்றையும் அவர் பேசவுமில்லை, நினைக்கவுமில்லை. கால்வாய் முயற்சிக் கூட்டம், ஆட்டுரோமம் கத்தரிக்கும் கூட்டம், [illegible] கூட்டம், கிருஷி சங்கம் முதலிய எவ்வகைக் கூட்டங்களிலும் 'படை ஸ்மித்' (இது அவர்க்குக் காரணப்பெயராக வழங்கியது) தம் மனதில் நிலைகொண்ட இவ்விஷயம் ஒன்றையே எடுத்துச் சொல்லிவருவார். அந்நாள் வரையில் அவர் உயர்தியப் பெற்ற நிபுணரோ அல்ல. அப்படியிருப்பினும், அவர் ஞானமாய்க் கண்டறிந்த மகா ஆச்சரியம். இங்கிலாந்தின் நிலப்படைத் தொடர்க் கிரமத்தைக் காட்டும் படம் ஒன்று அவர் சித்திரிக்கத் தொடங்கினர். ஸமர்ஸெட்ஷயர் நிலக்கரிக் கால்வாய் வேலை ஒன்றே ஆறு மாசகாலம் அவர் கருத்தைக் கவர்ந்ததனால் படம் எழுதும் முயற்சி தடைப்பட்டது. ஆனாலும், சில இயற்கை சம்பந்தமாய் அவர் விஷய விபரிகை

விட்டு விடாமற் செய்துகொண்டேவந்தார். சாதனை ஆக ஆக எக்காட்டிலும் அணைமுகத்தின் சாயல் சரிவைப் பார்த்த க்ஷணமே அதன் அடிப்படைத் தொடர்க் கிரமம் இது என்றும், அச்சந்தப் படையின் இடை இத்தன்மைத்தென்றும் தப்பறக் கணிக்கும் அதிசய சாமர்த்தியம் அவர்க்கு உண்டாயிற்று. ஆகவே, விஸ்தாரமான பூஸ்திதி உடையவர்கள் அதில் மிகையாகத் தங்கும் நீரைப் போக்கும் உபாயம் செய்யும்பொழுதெல்லாம் அவரை யுக்தி கேட்பார்கள். நில இயற்கை அறிந்து அவர் சொல்லும் யுக்தியை அனுசரித்த யாவர்க்கும் காரியம் நன்றாக வாய்த்தது. இதனால் அவர் கீர்த்தி நாற்றிசையும் எட்டியது.

ஒரு நாள் பாத் நகரத்தில் கனம். ஸாமுயெல் ரிச்சார்ட்ஸன் போதகர் (Rev. Samuel Richardson) தமது கிரகத்தில் தேடி வைத்திருந்த திரளான சிலாபவங்களைப் பார்வையிட்டு ஸ்மித் என்பவர் வைடி போதகருக்குப் பிரமை உண்டாக, சடிதியில் அவற்றின் வகுப்பு வரையறைக் கிரமத்தை மாற்றிப் படை வரிசைக் கிரமமாய் வகுத்து, அவ்வவ் வகுப்புச் சிலாபவங்களைச் சுட்டி முறையே "இவைகள் நீலக்களி மண் கற்படைக்குள் இருந்தன, இவைகள் அதற்கு மேற்படையான மணலிலும் மாக்கல்லிலும் இருந்தன; இவைகளுக்கு இருப்பிடம் உவர்மண், இவைகளுக்கு பாத்தில் உள்ள கட்டடக்கல்" என ஸ்தான வகையறை சொன்னார். அது கேட்டுப் பிரமித்த போதகர் மனதில் மேகம் மின்னியது போலப் புதுக் கருத்தொன்று பளிச்சென்று தோன்றியது. தோன்றவே, அவர் விலியம் ஸ்மித் உணர்த்திய கொள்கையை விரைவில் மறுபிரசம்பி அனுசரித்தார். ஆனாலும், அக்காலத்தில் பூகோள லக்ஷணம் கற்றிருந்த பண்டிதர்கள் அதைக் கொஞ்சத்திலும் நம்பவில்லை. எவ்வளவும் பிரக்கியாதி இல்லாத நில அளவையன் ஒருவனைத் தமக்குப் பூகோள லக்ஷணம் உணர்த்தும் ஆசிரியன் ஆகும்படி அவர்கள் விடுவார்களா, விடுவது சக்கடத்தான். ஆனாலும், விலியம் ஸ்மித்தோ

சாமானியரல்ல, வல்லாளகண்டர். அவர் கண்ணும் மனமும் அம்புபோல் இந்தப் பூமியின் அகத்தை ஆழ ஊடுருவிப் பாயும். அவர் அதை கார்கரமாகவும் எலும்பெலும்பாகவும் பகுத்துக் கண்டு அதன் உருவமைதியை ஞானதிர்ஷ்டியாய் அறிந்தவர். பாத் நகரத்தின் சுற்றுப்பட்டு கீழ் அடிப்படைக் கிரமத்தை அவர் எள்ளளவும் தவறாது அறிந்தவர். இதற்கு ஒரு திர்ஷ்டாந்தம்:—ஒருநாள் சாயரக்ஷை ஜோஸெப் டௌன்ஸெண்ட் போதகர் வீட்டில் பந்தி போஜனம் செய்யும்பொழுது, அவர் ரிச்சார்ட்ஸன் துரைக்குத் தமாமுகத்தில் மாக்கற்படை தொடங்கிக் கீழே நிலக்கரிப்படை அறுதியாக உள்ள இருபத்து மூன்று படைகளை வரிசைக் கிரமமாய் எடுத்துரைத்தார். நிலக்கரிப்படையின் அடியில் வரும் படைத்தொடர் திர்ப்திகரமாய் நிர்ணயிக்கப்படவில்லை. அவர் அந்தந்தப் படைகளையும் அதில் கண்டெடுத்த வெவ்வேறு முக்கியமான சிலாபவங்களையும் விரித்துரைத்தார். இவ்வரலாறு 1801-ம் வருஷம் அச்சிட்டுத் தேசம் எங்கும் பிரசாரஞ்செய்யப்பட்டது.

பிற்பாடு அவர் தமது திரவிய நிர்வாகப்படி பாத் நகரத்திறங்க் ஆரம் தொலையில் உள்ள நாட்டகத்து நிலப்படைத் தொடரைச் சோதித்துப்பார்க்க நிர்ணயித்தார். இதன்பொருட்டு அவர் பல வருஷகாலம் சுற்றிலையும் பிரயாணம் செய்தார்; சில வேளை கால்நடையாய்ப் போவார்; சில வேளை குதிரைமேற் சவாரிபோவார்; சில வேளை அஞ்சல்வண்டிக் கூடாரத்தின்மீது ஏறிப்போவார். பகலில் எங்கேயாவது நின்று பரிசோதனை செய்துகொண்டாலும் தமது சாதாரண வேலைக்குப் பின்னம் உண்டாகாவண்ணம் இராத்திரிகாலத்தில் பிரயாணம் செய்வார். அவர் வீட்டை விட்டுச் சற்றுத் தூரம் அப்பாலேயுள்ள பக்கங்களுக்குப் போவதுண்டு. அவர் சோமர்ஸெட் நாட்டைச் சேர்ந்த கொல்கால்வாயில் கோசக் அணைபுடைய கிடங்கிற்கு நீர் பாய்ச்சுவதற்கும், தங்குகளைப் போக்குவதற்கும் உரிய கட்டட வேலை செய்

விக்கப் பாதசாரத்தினின்று குதிரை ஏறிப் பிரயாணம் போகுமார்க்கத்தில் அடிக்கடி நிலத்தின் சாயல் வரிசைக் கண்டு குறிக்கும்படி வழி விலகி அப்புறம் இப்புறம் சுற்றுப்பாதையாய்ப் போனார்.

அடுத்துச் சில வருஷகாலம் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் தூரம் தொலைக்குப் பிரயாணம் போகும் பொழுதெல்லாம் வழியில் அவர் காலம் இம்முயற்சியில் கழிந்தது. வருஷவாரி அவர் பிரயாணம் செய்த தூரம் பதினாயிரம் மைலுக்கு அதிகம் காணும். பூமி லக்ஷணம் புராதன வித்தையல்ல, நூதன வித்தையென்று அவர் கொண்டாடியது சரியே. மேற் சொல்லியவாறு ஓயாது வருந்தி உழைத்துக் கொண்டு பிரயாணம் போகுமார்க்கத்தில் அவர் பூமி இயற்கையைச் சோதித்தறிய அரிய வினாவிற் பெருகும் அவ்விலக்கணத்திற்குப் பொதுவிதி கட்டி எழுதிவைத்தார். அற்ப விஷயமாகிலும் அவர் கண் காணும் எதையும் கருத்தாய்க் குறிக்காமல் விட்டதில்லை, விஷயங்களை நுணுக்கமாய் அறியக் கிட்டும் சமயத்தை அவர் கவனமில்லாதவராயிருந்து விட்டு விட்டதுமில்லை; சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் அவர் தரை அகழ்ந்து கண்ட அதிசயங்களையும், இயற்கை செயற்கை இருவகைப் பிரிவுகளையும் எட்டுக் கஜத்தை ஒரு அங்குல விகிதம் குறுக்கித் தொடர்ச்சியாகப் படத்திற் சித்திரித்து வர்ணம் கொடுத்து வைத்திருந்தார். அவர் கருத்துக் கூர்மையைப் பின்வரும் திருஷ்டாந்தத்தால் அறிக:—பூமி பரீக்ஷைக்காக வேலையாளுக்குக் கட்டளையிட்டு காட்டகத்தில் செல்லும் பொழுது டன்ஸ்டேபில் மார்க்கத்துள்ள [illegible] சாரத்தின் அண்டையிற் சேர்ந்தார். சேர்ந்த சமயத்தில் [illegible] போன ஒருவனைப் பார்த்து, "இச்சுண்ணாம்புக்காரத்தில் [illegible] அகழ்ந்திருந்தால், [illegible] பெறுவாய்" எனமொழிந்தார். மொழிந்து [illegible] ஒரு புதுவேலி அதனின் வெண்கலக்கட்டையில் [illegible] கண்டெடுத்தார்கள். அதன் பிறகு அவர் கடமைச் சட்டம் சொல்லியது,—

"எதையும் கண்டு கவனிக்கும் சாதனை என்மேல் தொத்திக் கொண்டது, என் மனதிற் குடியேறியது, கணப்பொழுதும் விட்டுப் பிரியாமல் என்கூட வருகின்றது, பிரயாணம் போக நினைக்கவும் அது பிரவர்த்திக்கத் தொடங்குகின்றது. ஆகவே, பெரும்பாலும் புறப்படும்பொழுது படம் சித்தஞ் செய்துகொண்டு புறப்படுவேன். சில வேளை அதன் தாற்பரியங்களையும், சில வேளை செல்லும் மார்க்கத்தில் காணும் வஸ்துகளின் தாற்பரியங்களையும் எழுதி வைத்துக்கொண்டு போவேன். அதைப்பற்றி என் மனம் சித்திரகன் சித்திரம் இட்டும் கஷ்டத்தைப்போல் முதலிற் காணப்படாத நயம்பெற பதிவு செய்யப் பக்குவப்பட்டிருந்தது."

வில்லியம் ஸ்மித் மனத்திரமும் தளரா முயற்சியுமுள்ளவர். ஆனாலும், அவர் வாக்குப்படி, இங்கிலாந்து - வேல்ஸ் இரண்டின் நிலக்கீழ்ப்படைப் படத்தை முடித்துப் பிரசுரம் செய்வதற்கு அனேக தடைகள் நேரிட்டன. இருபது வருஷகாலம் அவர் இடையறாதுழைத்த உழைப்பின் பயனை இஷ்டர் சிலருடைய சகாயத்தால் அச்சிட்டுப் பிரசித்தப்படுத்த 1814-ம் ஆண்டுவரையிற் சென்றது. அதற்குமுன் அவரால் முடியவில்லை. விஷய விசாரணையை விட்டு விடாது செய்யவும், அதற்கு வேண்டும் விஸ்தாரமான வஸ்து நிச்சயத் தொடர்பையும் காணும் காட்சிகளையும் சேர்த்துத் திரட்டவும் அவர் வருந்தித் தேடிய திரவியம் எல்லாம் செலவிட்டார். இம்மாத்திரமல்ல, அந்தத் தீவில் எட்டாக் கையில் இருக்கும் இடங்களைப் போய்ப் பார்க்கும்படி வழிச் செலவிற்கு வகையின்றி, சேகரித்து வைத்திருந்த பூஸ்திதியையும் விற்றுப்போட்டார். இதன் இடையில் அவர் யாத்திரைச் சம்பத்தில் கல் [illegible] தொடங்கிய முயற்சி சிதறிப்போயிற்று. அதனுடனேயவர் பூமியில் அங்கங்கே கண்டெடுத்துச் சேர்த்து வைத்திருந்த பல்வகைத் தாது, சிலாபலமுதலிய அதிசய வஸ்துகளையும், விட்டுத்

தட்டுமுட்டுக்களையும் புஸ்தகங்களையும் விற்கும்படி நேரிட்
டது. மேற்குறித்த அதிசய வண்ணங்களைப் பிரித்தானிய
வஸ்துசங்கிரகசாலை அதிகாரிகள் கிரயம் கொடுத்து வாங்கி
னார்கள். அவர் எழுதிய சித்திரங்களையும் படங்களையும்
சில பிரிவுப் படங்களையும் மாத்திரம் வைத்திருந்தார்.
அவைகள் அவருக்கன்றி மற்றவர்களுக்குச் செல்லவில்லை.
அவர் தாம் பட்ட கஷ்ட நஷ்டங்களை அபூர்வ மனவலியு
டன் சகித்துக்கொண்டார். இத்தனை இன்னல் இடைஞ்
சற்படும்பொழுதும் அவர் மனம் குனிரத் துணிவு பெருகப்
பொறுமை தளர்வற உழைத்துக்கொண்டுவந்தார். 1839-ம்
ஆண்டு ஆகஸ்டு மாசம் பெர்மிங்ஹாம் நகரில் பிரித்தானிய
சங்கத்தார் கூடிய கூட்டத்திற்குப் போகும் மார்க்கத்தில்
அவர் நார்தாம்டனில் இறந்துபோனார்.

தைரியசாலியாகிய இந்தக் கலைமகன் அனுப்பற முயன்
று சித்தஞ்செய்த இங்கிலாந்தின் தனி இயற்கைப் படத்தை
எவ்வளவு பாராட்டினும் ஏற்கும். வித்தையில் முதிர்ந்த
கிரந்தகர்த்தர் ஒருவர் அதைச் சுட்டிச் சொல்லியது:—
"அது நேரத் தெளியச் சிந்தித்து இயற்றிய படம்; அதன்
சாதாரண ஆகிருதி வழுவற அமைந்தது. ஆகவே, காரி
யத்தனவில், பின்னிட்டு இயற்றும் பிரித்தானிய நிலத்த
ள இயற்கைப் படங்களுக்கன்றி, வேறு எந்தெந்தத் தேசத்
தனி இயற்கைப் படம் எழுத முயற்சி நடந்ததோ அத
ற்கெல்லாம் அதுவே அஸ்திவாரமாய் உதவியது. ஸ்பிரிங்
இயற்றிய காலங்கண்ட மறுசாதனமாகிய அந்தப் படம்
புதுமையற்றுச் சிதைவுற்று சிறப் மெக்கிட பூகோள விவரண
சங்கத்தின் சாலையில் இன்றளவும் இருக்கின்றது. இவ்
விஷயத்திற் பயிற்சியுள்ளோர் எவரும் அந்தப் படத்தை
யும் அதற்குப்பின் அவ்வகையாக எழுதிய படங்களையும்
இணையிட்டுப் பார்த்தால் அதன் அருமை தெரியும். முக்கிய
அம்சங்களில் அது மற்றப் படங்களுக்குச் சிறிதும் இளை
க்காது—அவர் வெளியிட்ட பொது விளக்கனத்திற்குமேல்

பின்னேறாகிய மர்ச்சிஸனும் (Murchison) ஸெட்ஜ்விக்கும் (Sedgwick) முக்கியமாய் விவரித்த விஷயம் ஒன்றே ஒன்று. அது வேல்ஸிலும் இங்கிலாந்தின் வடக்கிலும் செம்மணற் கற்படைக்குக் கீழுள்ள கற்படை அமைதியைச் சிறுத்துத் தெரிவித்ததே." அக்ஸ்போர்ட் ஷீயரில் நிலஅளவுத் தொழில் செய்த ஸ்மித்துடைய அரிய விசேஷதனத்தை அவர் காலத்தில் கல்விமான்கள் ஏற்றுமாறு நன்குமதித்து வெகுமானியாதுவிடவில்லை. "அவர் இங்கிலாந்தின் தரை இலக்கணத்தையும், முக்கியமாய்ப் படைகளின் பேதாபேதங்களையும் முதல் முதல் கண்டுணர்த்தியதையும், அந்தப் படைகளில் புதைந்திருந்த சிலாபலங்களைக்கொண்டு படைத் தொடர்க்கிரம நிர்ணயம் செய்ததையும் நினைந்து" லண்டன் பூகோளவிசாரசங்கத்தார் 1831-ம் ஆண்டு அவருக்கு வாலஸ்தன் பதக்க வெகுமதி கொடுத்தார்கள். வில்யம் ஸ்மித் அதிசயசாமர்த்தியம் இன்றிச் சிரத்தையாய் உழைத்துப் பெற்ற பெயர் அவர் சித்தபூர்வமாய் அன்புகூர்ந்து பயின்ற கல்வித்தை உள்ளளவும் நிற்கும். மேற் சொல்லிய ஆசிரியர் மீண்டும் கூறியது:—அடுத்து உரு அமைந்து வரும் ஜீவபேதங்களின் தோற்றமும் தோற்றத்தின் வருவழியும் தெளிவுறுத்தப்படுமெனவும், பூகோள வித்தையில் வில்யம் ஸ்மித் விவேகபூர்வமாய்க் கண்டு வெளியிட்ட ஆக்ஷமங்களுக்கு நிகரானவைகளைக் காணும் இடம் ஏதென்று எளிதில் உத்தேசிப்பது அசாத்தியம்".

ஹியூ மில்லரும் (Hugh Miller) வில்யம் ஸ்மித்தைப்போலக் கூர்ந்து பார்த்து மறைபொருளைக் கண்டறியும் மதிவல்லோர்; அவர் கல்விக்கியாளகலையன்றி, இலக்கிய இலக்கணங்களையும் கருத்தாய்க் கற்றுக் கை சித்தி பெற்றவர். அவர் தமது சரித்திர புஸ்தகம் ஒன்று எழுதிப் பிரசுரஞ்செய்தார். அதற்கு அவர் இட்ட பெயர் "என் பாடசாலைகளும் உபாத்தியாயர்களும்". இந்தப் புஸ்தகம் திவ்வியமானது, இதனால் வெகு ஜனப் பிரயோஜனம் உண்டாம். இதோராய

ட் பிறந்தவர்களுக்கு மேலோர்க்குரிய விழுமிய ஒழுக்கம் உண்டாம் வகையை இப்புஸ்தகம் தெளிய உணர்த்தும்; அன்றியும் தன்முயற்சி, தன்மனம், தற்சார்பு இவற்றின் தன்மையைக் கருத்தில் அழியாது அழுந்தும்படி போதிக்கும் விதினாலாம். கடலோடிப் பிழைத்த தந்தை சமுத்திரத்தில் முழுகியிறந்தபொழுது ஹியூ மில்லர் அறியாக் குழந்தை. விதவையாய்ப்போன தாய் அவனை வளர்த்து வந்தனள். அவர் பள்ளியிற் பயின்ற கல்வி வளமானதல்ல, ஒருவகையாயிருந்தது. அவருக்கு முக்கியமாய் அறிவு புகட்டிய உபாத்தியாயர்கள் விளையாட்டுத் தோழரும், கூட வேலை செய்த ஆடவரும், உற்றார் உறவினருமே. அவர் நானாவகைக் கிரந்தங்களையும் விஸ்தாரமாய் வாசித்தார். அவர் தொழிலாளர், தச்சர், கரையார், கடலோடிகள் எத்திறத்தோரிடத்திலும் எந்தெந்தத் துறையிலும் கண்ட கல்வியறிவை இனந் தொடர்பின்றிக் கண்டபடி பட்சி தானியம் பொறுக்கும் வண்ணம் பொறுக்கி வைத்துக்கொண்டார். முக்கியமாய்க் க்ரோமார்ததி கழிக்கரை நெடுக அங்கங்கே சிதறுண்டிருக்கும் கூழாங்கண்ட திரட்சியான பெருங் கற்களைப் பார்த்துப் பார்த்துப் பல குணங்களை அறிந்தார். கற்றுறை செய்து ஜீவனம் பண்ணின அவருடைய பெரிய பாட்டனார் வைத்து வழங்கிய பெருஞ் சம்பட்டி ஒன்று வீட்டில் இருந்தது. அதைக் கொண்டு இரிந்த கற்களை அடித்துடைத்து அப்பிரகம், தாமிரவர்ணக்கல், உதிரவர்ணக்கல் முதலிய தாதினங்களைச் சேர்த்துவைத்திருந்தார். சில வேளை அச்சிறுவர் காட்டுக்குப் போயிருக்கும்பொழுதும் கண்ணுக்குத் தட்டுப்படும் கல் முதலிய அநேகங்களைக் கவனியாது விட்டார். சட்கரையில் சமுத்திரத்தையும் அதனழகையும் பார்க்கும்பொழுது சில வேளை அடுத்தடுத்து வருவதைக் கொண்டுபோயிருக்கும் பண்ணைக்காரர் அவரைக் கண்டு "கடலுக்குள் வெள்ளி கண்டெடுக்கிறாயா" என்று பரிகாசம் ஒன்று மாக ஒன்றாய்க் கேட்பார்கள். ஆம் என்று அவர்களுக்கு உத்தரம்சொல்ல

ஒருபொழுதும் சந்தர்ப்பிக்கவில்லை. ஏற்கும்பருவத்தில் அவர் கற்சிற்பன் ஒருவனிடத்தில் தொழில் பழக ஏற்பட்டார். கற்சிற்பவேலை அவர் மனதிற்கு இதமாயிருந்தது. அவர் முதல் முதல் ஓரிடத்திற் கல் இளப்பத் தொடங்கினார். அங்கிருந்து பார்த்தால் க்ரோமார்த்தி கல் விளைநிலம் தெரியும். இந்நிலம் அவருக்குக் கல்வி பயிற்றும் உத்தமதாத்துக் களகம் ஆயிற்று. அதில் விளைந்த நூதன தாதுக்கள் அவருக்கு மிகவும் அதிசயமாயிருந்தன. மேற்படை நுரைக்கமற்ற செங்களிமண், கீழ்ப்படை அறச் சிவந்த கல். இவ்விரண்டையும் கண்டு அவ்வாலிபர் எத்தனையோ ஆலோசனைகளைச் சூழ்ந்து சிந்தித்தார். இதர வித்தியார்த்திகள் நூதனம் ஒன்றும் இல்லையென்று அலக்ஷியமாய் விலக்கும் பொருள்களில் அவர் ஒப்பு - விகாரம் - விசேஷகுண முதலியவைகளை நுணுக்கமாய்க் கண்டு நினைந்து வருவார். அவர் ஊனக்கண்-ஞானக்கண் இரண்டும் திறந்தவண்ணமாயிருந்தன; அவர் மனம் மயக்கற்று எப்பொழுதும் தெளிந்திருக்கும், அவர் முயற்சியில் அயர்வற்றுக் கடைப்பிடி சாதித்துவருவார். இதுதான் அவர் அறிவு முதிர்வின் அந்தரங்க காரணம்.

கடற்கரையில் அலைமோதி மேல் மண் கரைந்தடையில் சமைந்த அலைசன்னை, உள்ளிருந்த பூர்வ மச்சம், மூலவர்க்கம் முதலியவைகளின் உடற்கூறை பிதுங்கித்தோன்றும். அவர் அவைகளைச் சம்மட்டியால் தட்டி விழுத்தி எடுத்து அதிசயமாய்ப் பெயர்த்துப் பெயர்த்துப் பார்ப்பார். விஷயத்தில் அவர் எப்பொழுதும் திருஷ்டி வைத்துக்கொண்டேயிருந்தார். அவர் நூதனங்களைத் திரளாய்க் கண்டு, கண்ட உருக்களுக்கு ஒப்பு உயர்வு தாழ்வு பார்த்துக்கொண்டிருந்தார். அநேக வருஷம் சென்றபின் கற் இளைப்பும் தொழிலை நிறுத்தியபின் அவர் பூர்வ செம்மணற் கலைக் குறித்துச் சிறந்த கிரந்தம் ஒன்று எழுதிப் பிரகாசம் செய்தார். இது பூசோள வித்தியாதிறத்தைப்பற்றி அவருக்கு அழியாப்புகழ் நாட்டியது. இக்கிரந்தம் அநேக வருஷத்

காலம் கண்டு ஆய்ந்து ஆர அமரத் தேர்ந்த சூக்ஷ்மங்களை அமைத்தியற்றியது. இதை அவர் எழுதிய சரித்திரத்தில் அவையடக்கமாய்ப் பின் வருமாறு சொல்லுகிறார்:—"இவ் விஷயத்தில் என் செயல் என்று சொல்லத்தக்கது ஒன்றே ஒன்று—அது கண் கண்டதை ஆர அமரச் சீர்தூக்கிப்பார்த்ததே—சித்த நிர்ணயமுள்ள எவனும் இச்செயலில் எனக்கு இணையானாலும் ஆவான், என்னை மிஞ்சினாலும் மிஞ்சுவான். ஆர அமர உழைக்கும் இவ்வெளிய இயற்கை முறைமையாய் விகசிதமானால் ஜன்ம விவேகத்தைக் காட்டவும் மிக அபூர்வ புத்தியபிவிர்த்தியை உண்டாக்கும்".

இங்கிலாந்தில் பூகோள வித்தையில் வல்லவராயிருந்த ஜான் ப்ரௌனும் (John Brown) மில்லரைப்போல வாலிபப்பருவத்தில் கற்சிற்பராயிருந்தவரே. அவர் முதலில் கால்செஸ்தரில் தொழில் பயின்று தெளிந்தபின் நோரிச்சில் அங்கங்கே இருந்து கற்கட்ட வேலைசெய்து பிழைத்தார். பிற்பாடு அவர் தமது பாடாகக் கட்டடத்தொழில் செய்யத் தொடங்கினார். முயற்சியாய் உழைத்து மிதச்செலவு செய்து காலடைவில் அவர் முட்டின்றிக் காலம் தள்ளத்தக்க தனமுடையவரானார். இத்தொழில் செய்துவரும்பொழுது தான் சிலாபலங்களையும் கிளிஞ்சில்களையும் தேரும்படி முதல் முதல் அவர் சிந்தை திரும்பியது. தேரத் தேர அவர் சேகரித்த வெகு அருமை வஸ்துகள் காலடைவில் திரளாயின. கடைசியில் இங்கிலாந்தில் அவை சிறந்த அரும்பொருட்டொகுதி என வியக்கக் கூடத் தக்கவைகளாயின. எஸ்ஸெக்ஸ், கெந்து, ஸஸ்ஸெக்ஸ் கடற்கரை ஓரங்களில் அவர் விஷயமாய்ச் செய்துவந்த ஆராய்ச்சியாலே, காணாடாயிருக்கும் இயற்கையின் விசித்திரமான கூற்றுகள் அகப்பட்டன. அவற்றின் அரியவைகளை அவர் பிரித்தானிய அதிசயவஸ்து சாலைக்கு அனுப்பினார். கடைக்காலத்தில் சில வருஷம் மாக்கல்களைக் கருத்தாய்த் தேர்ந்து சில சூக்ஷ்மங்களைக் கண்டறிந்தார். அவர் உலகத்திற்கு உபகாரியாக

யிருந்து சுகித்து மானியாக நாள்கழித்தார். அவர் இறந்தது எஸ்ஸெக்ஸைச் சேர்ந்த ஸ்தன்லியில், 1859-ம் வருஷம் நொவெம்பர்மாசம். இறக்கும்பொழுது அவருக்கு எண்பது வயசு.

கொஞ்சக் காலத்திற்குமுன் ஸ்ரீ ரொடெரிக் மர்சிஸன் ஸ்கொத்லாந்தில் அறவடக்கே தர்ஸோஊரில் ராபர்ட் டிக் எனும் ரொட்டிக்காரன் பூகோள லக்ஷணம் முதிர உணர்ந்திருப்பதுகண்டு பிரமையடைந்தார். அவன் ரொட்டி சுட்டு விற்றுப் பிழைத்த வீட்டில் மேற்படி பூகோளவித்தியா சங்கத்தலைவர் அவனைக் காணப்போயிருந்த சமயத்தில் அவன் தன் ஜன்மதேசத்தின் தரைமுகத் தோற்றத்தையும் தரைக்கீழ் உருவமைதியையும் ஒரு பலகையில் மாவைத் தூவி விளங்கக் காட்டினான். ஓழிவுகாலத்தில் நாடெங்கும் உலாவிப்பார்த்துப் பரிசோதனைசெய்த அளவில் இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற படங்களில் தான் கண்ட குறை குற்றங்களை விரித்துரைத்தான். பின்பு ஸ்ரீ மர்சிஸன் துரை அந்த டிக்கைப்பற்றி ஊராரை அபிப்பிராயம் கேட்க, அவர்கள் "டிக் சாமானியனல்ல, ரொட்டிக்காரருக்குள் சிரேஷ்டன், பூகோள லக்ஷணத்தில் வல்லவன், தாவரநூலில் எவரையும் மிஞ்சத்தக்க நிபுணன்" என்று சாக்ஷிபகர்ந்தார்கள். ராபர்ட் டிக்கைச் சுட்டி அச் சங்கத்தலைவர் சொல்லியது "அந்த ரொட்டிக்காரன் தாவர லக்ஷணத்தில் என்னைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகம் அறிவான். இதைத் திருஷ்டாந்தமாய்க் கண்டு நான் கற்றது கையளவென்று நாணி ஒதுங்கினேன். ஆக இருபது முப்பது புஸ்தகங்கள்தவிர மற்றெல்லாப் புஸ்தகங்களையும் அவன் இனம் இனமாய்ச் சேர்த்துவைத்திருந்தான். சில புஸ்தகங்கள் அவனுக்கு உபகாரமாய்க் கிடைத்தன; சில புஸ்தகங்களை அவன் கிரயம் கொடுத்து வாங்கிவைத்திருந்தான். மற்றவைகள் எல்லாம் கேத்னெஸ் எனும் ஜன்மநாட்டில் அவன் அலைப்புற்றுத்திரிந்து அங்கங்கே கண்டு பறித்துக் கொண்டுவந்து சேர்த்தவை

களை. அம்மலர் அனைத்தையும் அதனதன் இலக்கணப்பெயர் எழுதி ஒட்டி இனக்கிரமப்படி வகுத்து வைத்திருந்தான்.”

ஸ்ரீ ரொடெரிக் மர்ச்சிஸனும் (Sir Roderick Murchison) மேற்குறித்த கல்வித்துறைகளையும் அவற்றிற்கு இனமாகிய துறைகளையும் நன்குணர்ந்த நிபுணர்தாம். க்வார்த்தர்லி ரிவ்யூ எனும் வித்தியாவிமர்சனிக்குப் பிரபந்தம் எழுதிய ஒருவர் ஸ்ரீ மர்ச்சிஸனைப்பற்றிப் பின் வரும் குறிப்புகளை எங்கேயோ கண்டு எடுத்துக் காட்டினார்:— “ஸ்ரீ ரொடெரிக் மர்ச்சிஸன் துரைக்குக் கல்லூரியிற் கற்றுப் பண்படுவதாகிய நயமும் இல்லை, கஷ்டமும் இல்லை. அவர் ஆதியில் ராணுவசேவகம் செய்தவர். அப்பால் நாட்டகத்தில் உல்லாசமாய் நரிவேட்டையாடி உண்டுடுத்துச் சுகித்திருக்க மனம் இருந்தால் இடமும் இருந்தது. அவரோ அப்படிச் செய்யவில்லை. இயற்கையாய் மனோபலமும் விவேகசக்தியுமுள்ள அவர் இளைப்பாறு முயன்று சிரத்தையாய்க் கற்றுக் கலைக்கியானத்தில் வல்லவரென்று நான்கு திக்கும் நீடித்து நிற்கத்தக்க புகழைச் சம்பாதித்துக்கொண்டார். முதலில் அவர் இங்கிலாந்தில் பூமியிலக்கணம் கண்டறிதற்கு அரிதாய் எவரும் இறங்கியாததாயிருந்த ஒரு நாட்டின் நிலவமைதியைப் பல வருஷகாலம் கஷ்டப்பட்டுப் பரிசோதித்து, விளையும் கற்படையினத்தை ஆர அமர ஆய்ந்து இனம் இனமாய் வகுத்து, அனைத்தின் நிலையைக் கணக்கைத் நிர்ணயித்துப் பூமி இலக்கணத்தில் இரண்டு முக்கிய அதிகாரங்களின் பொருளை ஆதியில் மயக்கமற விளக்கினார். ஆகவே பூமி இலக்கண புஸ்தகங்களில் அவர் நாமம் எப்பொழுதும் பதிந்திருப்பது திண்ணம். இம்மாதிரியாய், தாம் கஷ்டப்பட்டு அறிந்த கல்வியறிவின் உதவியால் தம்தேசத்திலும் பிறதேசத்திலும் பெருநாளிகளின் தலையமைதியை இனமினமாய்ப் பிரித்துப் பார்த்து மட்டும் அறிந்து முன் அறியாதிருந்த பெருந்தேசப் பிரிவிலக்கணங்களை அறிந்து வெளி

யிட்ட வித்தகரானார்". ஸ்ரீ ரொடெரிக் மர்சிஸன் பூமில க்ஷணவித்வான் மாத்திரம் அல்ல; பற்பல கல்வித்துறைக ளில் இளைக்காதுழைத்து நிறை கல்வியை ஆபரணமாய்ப் பூண்ட நிபுணருமானார்.

அத்தியாயம் - ௯.

சிற்பத்தொழிலில் உழைத்தவர்கள்.

"ஊரப்பார்வைக்கு மிகு மாண்புள்ளதாகத் துலங்கியது உன் கை படைச் சூனியமாய்ப்போனால், பின்னும் விடாது தொடர்ந்துபோ; பெறும் பேற்றில் அல்ல, அது பெறுதற் குப் படும் பாட்டில் இருக்கிறது சுகிர்தம்" ——ர். ம். மில்னீஸ் (R. M. Milnes)

"செய்தொழிலில் மூழ்கு சீமானாகவாழ்வாய்"—— ஜௌபர்ட் (Joubert)

மற்றத் துறைகள் அனைத்திலும் எப்படியோ அப்படியே சிற்பவித்தையிலும் மிக்க திறமை அடைவது வருந்தி உழைக் கும் உழைப்பின் வசத்தால். சிறந்த படம் சித்திரிப்பதும் திவ்வியமான பிரதிமை செதுக்குவதும் தற்செயலாய் அமைவனவேயல்ல. ஓவியத்திற் கைபோன ஒருவன் தூரிகைக் கோலால் தொட அவன் அமைத்த உரு பின்னும் சிறக்கும். பிரதிமை செதுக்கிச் செதுக்கி விசேஷ திறமைபெற்ற வித்த கன் ஒருவன் தான் பிடிக்கும் பிரதிமையைச் சிற்றுளி முனையால் தொடவே அதற்கு ஜீவகளை உண்டாம். இது விவேகமுகமாய்ப் பொறைக்குணங்களினும் சலிக்கா முயற்சி யால் விளையும் சித்தி.

ஸ்ரீ யோசுவா ரேனல்ட்ஸ் (Sir Joshua Reyuolds) முயற் சி எல்லாம் வல்லதென்று முதிர நம்பிக்கொண்டிருந்தவர். "வித்தகர்க்கு அமையும் அரிய கைத்திறத்தை இயற்கை

விவேகமென்றும், ரகசியானமென்றும், திவ்விய வரப் பிரசாதமென்றும் பலவாறு சொல்வது உண்டெனினும், அது சாதகவித்தையாய் அமையும்" என்பது அவர் தாற்பரியம். பரி என்பவர்க்கு எழுதிய கடிதத்தில் அவர் சொல்லியது:—"சித்திர வித்தையிலாகுலும், மற்றெவ்வித வித்தையிலாகுலும் விசேஷ திறமை அடைய நிர்ணயித்திருக்கும் எவனும் தூங்கி எழுந்திருக்கும் நாழிகைமுதல் துயிலப்போகுந்தனையும் அவ்வொரே ஒரு கருமத்தில் தன் உள்ளத்தை ஒருதலையாய் அழுந்தப் பொருத்தவேண்டும்". வேறொரு சமயத்தில் அவர் சொல்லியது,——"செய்கருமத்தில் சிறந்த விற்பத்தி அடையும் ஓர்ப்புள்ளவர்கள் சித்தானுகூலம் இருப்பினும் இல்லாதிருப்பினும் காலை-உச்சி-மாலை எனும் பேதமின்றி எப்பொழுதும் உழைக்கவேண்டும். உழைப்பு அவர்களுக்கு விளையாட்டாக வல்ல, மிகு சிரமமாகத் தோன்றும்" சிற்பவித்தையில் சிறந்த விற்பத்தி அடைவதற்குச் சலிப்பற முயலும் முயற்சியின்றித் தீராது. இது வாஸ்தவமெனினும், ஜன்ம இயற்கை விசேஷமின்றிக் கேவலமுயற்சி எவ்வளவிற்குச் சித்தம் ஒத்து வளமுறச் செய்யினும் அதன் வசத்தால் எவனும் வித்தகனாகான் என்பதும் வாஸ்தவமே. அந்த வரப்பிரசாதம் தெய்வத்தால் அமைவது-அது முதிர்வதோ அவரவர் செய்கை பயிற்சியால். பள்ளியிற் கற்கும் கல்வி அனைத்திலும் தான் தான் செய்து பட்டுத் தெளிவது வாசி.

மஹாவித்தகர்கள் சிலர் தரித்திரமுதலிய பல வகைத் தடைகளை முயற்சி வலியால் கடந்து எழுந்து உயர்ந்தவர்களே. அதிலேதான் சிலரில் இவ்வகைப் பிரதாபர்கள் எத்தனை எத்தனையோ பெயர் மின்போலப் பளிச்செனத் துலங்கித் தோன்றுவார்கள். அப்பவர்க்கம் சுட்டு விற்றுப் பிழைத்த க்ளாட் லொரேன் (Claude Lorraine), சாயக்காரனுகிய திந்தொரெத்தோ (Tintoretto), வர்ணம் இழைத்த கரவக்கியோஸ் (Caravaggios), பாய்ப்பு அரண்மனைக்கட்ட

த்தில் சிற்றன் வேலைசெய்த கரவக்கியோஸ் (Caravaggios) கள்வர் தோழனுகிய ஸல்வதோர் ரோஸா (Salvator Rosa), பருவம் எருப் பயிர்க்குடி ஆகிய ஜியத்தோ (Giotto), குழ குழிப்பைக்காரனுகிய ஜிங்காரோ (Zingaro), இரக்துன்னைத் தகப்பனுல் வீட்டினின்று துரத்திவிட்ட கேவ்டன் (Cavedone), கற்தச்சனுகிய கனேவா (Canova) எனும் இவர்களும், பின்னும் உலகறிந்த வித்தகர் பலரும் எத்தனையோ இடர் இடைஞ்சல்களைக் கிஞ்சித்தும் பொருள்செய்யாமல் வருந்தி உழைத்துப் பார்த்து பயின்று வல்லவர்களென்று பிரதிஷ்டை பெற்றார்கள்.

மேலும் நம்தேசத்தில் அருந்திறமுள்ளவர்களென்று பெயர்பெற்ற வித்தகர்கள் சிற்ப விவேக சித்திக்கு முக்கியமாய் அனுகூலிக்கும் ஸ்திதியிற் பிறந்தவர்களல்ல. கேன்ஸ்பரோவும் (Gainsborough), பேக்கனும் (Bacon) செய்வார் புத்திரர்; பரி (Burry) அயர்லாந்திற் பிறந்து இளமையிற் கடலோடப் பயின்றவன்; மக்லீஸ் (Maclise) கோர்க் நகரத்தில் சாகைக்கடையிற் கணக்கு எழுதப் பயின்றவன்; இனிகோ ஜோன்ஸ் (Inigo Jones) ஐடபோகல, ஓபையும் (Opie), ராம்னியும் (Romney) தச்சர்; வெஸ்த் (West) என்பவன் பென்ஸில்வேனியாவில் இறகு வியாபாரம் செய்த க்வேக்கர் வர்க்க இனத்தன் மகன்; நார்த்கோட் (Northcote) கைக்கடிகாரம் செய்வோன், ஜாக்ஸன் (Jackson) தையற்காரன், எத்தி (Etty) அச்சடிப்போன்; ரேனல்ட்ஸ் (Reynolds), வில்ஸன் (Wilson), வில்கி (Wilkie) இம்மூவரும் குருபுத்திரர்; லாரென்ஸ் (Lawrence) ஆயக்காரன் மகன், டர்னர் (Turner) நாவிதன் மகன். நமது தேசத்துச் சித்திரவித்தகர் சிலர் ஆதியில் தாம் தாழ்ந்த கைத்தொழிற் சம்பந்தம் சிறிது உள்ளவர்களே யாம்,—ப்ளாக்ஸ்மன் (Flaxman) உடைபட தகப்பன் அரசாங்கத்திற் சேர்மைசெய்து விற்றவன்; பர்ட் (Bird) தேயிலைத் தட்டு வர்ணக்காரன்; மார்ட்டின் (Martin) வண்டிக்கு வர்ணம் பூசிப் பிழைத்தவன்;

ரைட்டும் (Wright) கில்பினும் (Gilpin) மரக்கலவரிணைக் காரர்; சாந்திரி (Chantrey) பயின்றது செதுக்குவேலையும் மலாம்பூசும் வேலையும்; டேவிட் காக்ஸ் (David Cox), ஸ்தான்பீல்ட் (stanfield), ராபர்ட்ஸ் (Roberts) இவர்கள் தேசக் காட்சிப்படம் எழுதிப் பயின்றவர்கள்.

இவர்கள் பிரபலரானது அதிர்ஷ்டவசத்தாலுமல்ல, ஆகஸ்மீகமாகவுமல்ல, உற்று முயன்று வருந்தி உழைத்ததனால். சிலருக்குத் திரவியமும் சேர்ந்தது மெய்தான். ஆனால் பெரும்பாலும் அவர்கள் திரவியம் தேட நாடி உழைத்தவர்களல்ல. வித்தகரானோர் ஆதியில் தம் சுகத்தை மறந்து வாயைக் கட்டி வயிற்றை ஒடுக்கி முயற்சி செய்திருப்பார்களே. திரவியாபேக்ஷை ஒன்று தவிர வேறு நோக்கம் ஏதுமின்றி இருப்பார்களானால் அவர்கள் முயற்சி நிலைநிற்காது. எப்பொழுதும் செய்தொழிற்பயனே அதனால் விளையும் இன்பமே; அதனோடு அணைந்து வரும் செல்வம் வந்தேறியாய் அடைவது. உதாரமதியுள்ள வித்தகர் பலர் வாங்காக்கூலி வாங்க வாதிடாமல் மனம் சென்ற துறையில் செய்வதைத் திருந்தச் செய்தார்கள். வெனபதுடைய சிறந்த வட்டுகளை ஸ்பாக்நொலெத்தோ (Spagnoletto) வின் சரித்திரத்தில் எழுத்தெழுத்தாகப் பலித்தது. அவன் பெருவாழ்வின் வருவழிகளைக் கைக்கொண்டபின் அவற்றின் வசப்படாமல் விலகி மனம் பொருந்தி மீளவும் தரித்திர நிலையில் இருந்து பெயர்பெருக்கி உழைத்தான். ஒரு சித்திரக்காரன் கட்டணம் வாங்கி அதிசயம் பார்ப்பவர்க்குக் காண்பித்துக்கொண்டிருந்த சித்திரம் ஒன்றைக்குறித்து மைகேல் அஞ்ஜிலோ (Michael Angelo) வைச் சிலர் அபிப்பிராயம் கேட்க, அவர், "திரவியவர்த்தனமும் ஆசைப் பெருக்கமும் உள்ளளவும் இவன் [illegible] என்னவே நினைக்கிறேன்" என மொழிந்தார்.

ஸ்ரீ யோசுவா ரேனல்ட்ஸைப்போல, மைகேல் அஞ்ஜிலோவும் உழைப்பு எல்லாம் வல்லதென்று உள்ளம் தேற நம்பி

யருந்தார். உள்ளத்தில் உருக்கொள்வதை கை முதிரத் திருந்
திய ஒருவன் சிலையில் உரு அமைக்கமாட்டாதிரான் என்பது
அவர் கொள்கை. அதுப்பற்று ஓயாதுழைத்தவர்களில் அவ
ரும் ஒருவரோ. மற்றவர்களைக்காட்டிலும் அதிக காலம் உழை
க்கத்தக்க பெருவலி தமக்கு உண்டானது உண்டியைச்
சுருக்கிக்கொண்டுவந்ததனாலேயேயென்று அவர் மொழிந்
தார். பகலில் உழைக்கும்பொழுது அவர் உண்பதெல்லாம்
கூடி ஒரு துண்டு ரொட்டியும் சிறிது திராக்ஷாரசமுந்தான்.
அடிக்கடி அவர் அர்த்தராத்திரியில் எழுந்திருந்து விட்ட
குறையினின்று வேலைசெய்வார். இப்படிப்பட்ட சமயங்
களில் தீபம் ஏற்றித் தமது காகித அட்டைக்குல்லாவின் உச்
சியில் வைத்துவிட்டு இழைப்புளி கொண்டு செதுக்குவேலை
செய்வார். சில வேளை கை கால் அயர்ந்து இளைப்புற்று உடு
த்த ஆடையைக் களையும் சிந்தனையற்று ஆயாசம் தீரப் படுத்
துறங்கி எழுந்தவுடன் மீளவும் வேலை தொடங்குவார். உள்
ளம் உவக்கும் சின்னம் ஒன்று அவர் ஊகித்துச செய்து
வைத்திருந்தார். அச்சின்னம் இது:—குழந்தைகள் நடைப
ழகும் வண்டி ஒன்று செய்து அதன்மேல் ஒரு கடிகாரம்
அமைத்து அதில் "இன்னம் பழகிவருகிறேன்" எனும் வாக்கி
யம் வரைந்து கிழவன் ஒருவன் அதைப் பிடித்து நிற்கும்
பாவனை.

டிஷியன் (Titian) என்பவனும் இளைப்புறாது உழைத்தவ
னே. அவன் அமைத்த வியப்புரிய "Pietro Martire" என்
பது வேலைமுடிந்து அவன் கைவிட்டு நீங்க எட்டு வருஷம்
சென்றது. "கடை இரா உண்டி" எனும் பிரதிமை வேலை
குறையற முடியச் சென்ற காலம் ஏழு வருஷம். ஏழு வரு
ஷம் நித்தமும் வருந்தி உழைத்து முடித்த "கடை இரா
உண்டியை மஹாராஜ சமுகத்திற்கு அனுப்புகிறேன்" என
ஐந்தாவது சார்லஸ் அரசனுக்கு அவன் அனுப்பிய கடிதத்
தில் எழுதியிருக்கிறான். அரிய பெரிய வேலைகளை வித்தகர்
செய்து முடிக்கப் பதைப்பற்று அடங்கி உழைத்த உழைப்

யையும், அப்படி உழைக்கும் பக்குவதாமை வருதற்கு ஆறுயில் கெடு நாள் பயின்று பண்பட்டதையும் நினைப்பவர் இல்லை. இவ்வுழைப்பும் பக்குவமும் எளிதில் விளைந்துண்டாமெனக் காண்பவர்க்குத் தோன்றும்; தோன்றுமெனினும், ஒன்றை எளிதிற் செய்யும் பக்குவதாம் உண்டாக முன் எத்தனை சிரமமும் சங்கடமும் பட்டிருக்கவேண்டும். "பத்துத் தினத்திற் செய்துமுடித்த ஊர்த்துவாங்கப் பிரதிமைக்கு இருநூற்று முப்பது ரூபாய் கேட்கிறுயோ" என்று வெளிவழிய குலமகன் சொல்ல, அது கேட்டு ஒரு சிற்பி, "அவ்வூர்த்துவாங்கப் பிரதிமையைப் பத்துத் தினத்திற் செய்துமுடிக்க முப்பது வருஷம் பயின்றேனே - இதை எண்ணுமற் பேசுகிறீர்கள்" என்று எதிர்மொழி சொன்னான். டொமெனிசினோ (Domenichino) என்பவன் கிரயம் பேசித்தீர்ந்து ஒருவருக்குப் படம் எழுதத் தொடங்கினான். வேலை மிகு தாமதகதியாய் நடந்தது. அதனால் கொடையார் அவனைக் குறைகூறினார். அது கேட்டு அவன் "உமது படத்தை இடையருது எப்பொழுதும் என உள்ளத்தில் எழுதின மணியமாயிருக்கிறேனே" என்று உத்தரம் சொன்னான். கொஞ்சக் காலத்திற்குமுன் இருந்த ஸ்ரீ ஆகஸ்தஸ் காஸ்கட் (Sir Augustus Callcott) அருந்தொழிலெனப் பல்லோர் வியந்து உவக்கும் "ராசெஸ்தர்" படம் சித்திரிக்கக் கைதிருந்தும்படி முன்னூடிக் குறையாமல் நாற்பது படம் எழுதி எழுதிப் போட்டாராம். அவைப்போதும் முயற்சியுடையோர் பண்பிற்கு இதல்லோ அறிகுறி. எதையும் விட்டுவிடாமல் பெயர்த்துப் பெயர்த்துச் செய்வதே லௌகவியாபாரத்திலன்றிச் சிற்பவிர்த்தி சித்திக்கும் உதவும் முக்கிய சாதனங்களில் ஒன்று.

ஜன்ம விவேகம் எத்துணை வளம்பெற அமைந்திருப்பினும், சிற்பவிர்த்தி செய்வோர் சாட்பட சிரத்தையாய் உழைக்க வேண்டும். உழைக்காமல் [illegible] வித்தகர் அனேகருக்குப் புத்தி பருவமுன்னே முதிர்ந்திருந்தது. ஆனாலும் முயற்சி செய்யாவிடின், அவர்கள் புத்திவிர்த்தி காரியத்திற்கு உதவாமற்

போய்விடும். வெஸ்தைப்பற்றி ஒரு கதை லோகப்பிரசித்த மாயிருக்கிறதே. அவர் ஏழு வயசில் தொட்டிலில் நித்திரை செய்யும் மூத்த சகோதரி குழந்தைக்குக் காவலாயிருந்த பொழுது, கூர்ந்துபார்த்து அதன் ரூபலாவண்ணியத்தை அதிசயித்து, ஒரு காகிதம் எடுத்துக் கொண்டுபோய் அந்தக்ஷணமே அதன் உருவத்தைச் சிவப்பு மையினாலும் கறுப்பு மையினாலும் சித்திரித்தார். இதைக் கண்டு இவர் சித்திரவித்தகர் ஆவரென்று எல்லாருக்கும் தெரியவந்தது. மனமானது இயற்கையாய்ச் சென்ற இத்துறையினின்று அவரை விலக்கக் கூடாதிருந்தது. அதி பாலியத்திலேயே இவ்வாறு சித்தி பெற்றது சற்று வம்பாய் முடிந்தது. அல்லாவிடில் அவர் சித்திர வித்தியாசக்தியில் மெத்தவும் மிஞ்சினவராவார். அவர் பெரும் பிரக்கியாதி பெற்றும், அது அவர்க்குச் சிரமப்பட்டு வருந்தி உழைக்காது வந்ததனால் நீடித்து நிற்கவில்லை.

சிறு குழந்தையாயிருக்கும்பொழுது ரிச்சார்ட் வில்ஸன் (**Richard Wilson**) வீட்டுச் சுவரில் கரிக்கட்டியால் மனுஷர் படமும் மாடு குதிரை முதலாம் விலங்கின் படமும் எழுதிக்கொண்டுவருவார். ஆதியில் அவர் மனம் கூர்ந்து எழுதிப் பயின்றது இவ்வகை உருப்படம். பின்பு இத்தாலியாவிற்குப் போயிருக்கையில் ஒரு நாள் ஜுக்கரெல்லி (Zucarelli) யைக் காண அவர் வீட்டுக்குப் போனார். போய் வெகு நாழிகை நேரம் காத்திருந்து அலுப்புற்று, அவ்வலுப்பு நீங்க, பலகணிவாயில் வழியாகத் தோன்றிய ஊர்த்தோற்றத்தைச் சித்திரித்துக்கொண்டிருந்தார். அச்சமயத்தில் ஜுக்கரெல்லி அவ்வறைக்குள் வந்து, அச்சித்திரத்தைக் கண்டு மயங்கி, "நீர் ஊர்ப்படம் எழுதிப் பயின்றிருக்கவில்லையா?" என வினவ, வில்ஸன், "இல்லை" என்றார். "அப்படி ஆனால் உமக்குப் புத்தியாய்ச் சொல்லுகிறேன். எழுதிப்பாரும். மெத்தவும் சித்தி உண்டாம். இது மெய்" என்று ஜுக்கரெல்லி வற்புறுத்தி மொழிந்தார். அந்த நற்புத்தியை வில்

லைன் அங்கீகரித்து வருந்தி முயன்று எழுதிப் பயின்று ஊர்ப் படம் சித்திரிப்பதில் பிரபல வித்தகரென்று முதல் இங்கிலாந்தில் பெயர் எடுத்தார்.

ஸ்ரீ யோகசுவா ரெனைடன் சிறு பருவத்தில் பாடம் படிக்காமல் சித்திரம் எழுதும் முயற்சி ஒன்றிலேயே சிந்தையை வைத்திருப்பார். அது அவர்க்கு ஆனந்தமாயிருந்தது. இதைத் தொட்டுப் பிதா அவரைக் கண்டித்துவருவார். பருவம் ஏறியபின் பிதா அவருக்கு வைத்தியநூல் கற்பிக்க நினைத்திருந்தார். ஆனால் இயற்கையாய் அவர் சிந்தை சிற்பவித்தையில் அழுந்தியிருந்தது. அந்த நினைவை மறக்கடிக்க எவ்விதத்திலும் முடியவில்லை. வரவரத் தேறி அவர் சித்திரவித்தகரானார். பள்ளிக்குப் போகும் இளவயதில் கென்ஸ்பரோ ஸாத்புரிக் காட்டில் சித்திரம் எழுதிக்கொண்டு திரிவார். பன்னிரண்டு வயதில் அவர் தேர்ந்த சித்திர வித்தகரானார். காண்பதைச் சிந்தை கூர்ந்து காண்பதும், செய்வதைப் பார்த்து கை வருந்திச் செய்வதும் அவருடைய பிரசித்தி. ஒரு ஆவர்த்தியாவது காணும் கண்ணுக்கு அழகிய உரு எதுவும் அவர் தூரிகைக்கோலுக்குத் தப்பினதில்லை. பாதயோகக் கடைக்காரன் மகனாகிய வில்லியம் ப்லேக் (William Blake) கிரயச் சீட்டுப் பத்திரங்களின் புறத்திலும் பாதயோக பீடத்தின்மீதும் முறையே கட்டடப்படமும் சித்திரமும் எழுதிப் பயின்றார். மூன்று நாலு வயசுக் குழந்தையாயிருக்கையில் எட்வார்ட் பர்ட் (Edward Bird) சாக்கட்டியினால் நின்று சுவரில் சித்திரம் எழுதி இவை அங்கிலோ பிரான்சிய ராணுவ சேவகர் என்பார். சித்திர வித்தையில் பிரியமுள்ள அவருக்கு திருப்தி உண்டாக்குவிக்க தகப்பனார் ஒரு பெட்டி வர்ணம் வாங்கிக் கொடுத்துத் தேயிலைத் தட்டுச் செய்யும் ஒருவனிடத்தில் தொழில் பழக வைத்தார். இத்தொழிலில் கை தேர்ந்து சில காலம் ஜீவனம் பண்ணிவந்து அப்பால் சித்திர வித்தையை வருந்திப் பயின்று வல்லவராகி ராஜவித்தியாசனையின் ஓர் அவயவம் எனும் உயர் பதவி அடைந்தார்.

ஹோகார்த் (Hogarth) என்பவர் பள்ளியிற் படிக்
கும்பொழுது பாடம் ஒரு நாளும் ஒப்பித்ததில்லை. அவ
புத்தி மந்தபுத்தி. புஸ்தகத்தை வைத்துவிட்டு அவர் இங்
கிலிஷ் பாஷையின் அக்ஷரங்களை விசித்திரமாய்ச் சித்திரித்
துச் சிறப்புப் பார்ப்பார். பாடசாலையில் அவர் எழுதும்
பாடபத்திரம் முதலியவைகளின் உள்ளுறை எவ்வளவும்
எண்ணத்தக்கதல்ல, அப்பத்திரங்களில் அவர் சித்திரிக்கும்
சோடினை முதலியவைகளோ கண்ணைப் பகட்டும். எழுதும்
பத்திரங்களின் பொருள் நலத்தில் அவர் அப்பள்ளியில்
உள்ள மடையர் அனைவர்க்கும் பின்; சித்திர அலங்காரத்தி
லோ அவருக்கு ஒப்பு உயர்வு இல்லை. தகப்பனார் அவரைத்
தட்டான் ஒருவனிடத்தில் வேலை பழக விட்டார். அங்கவ
னிடத்தில் அவர் சித்திரம் எழுதவும், வெள்ளிக்கரண்டி
முன் இவற்றில் கவசப் பிரதிமைகளும் கூட்டாட்சரமும் செ
துக்கிச் சித்திரிக்கவும் பயின்றார். வெள்ளியில் நகாசு வேலை
செய்து கை திருந்தியபின் அவர் செம்பில் செதுக்குவே
லை செய்யவும் கற்பித விலங்கு ஜாதிகளும் வீரசூரர் முதலி
ய உருக்களும் செதுக்கவும் தொடங்கினார். இத்தொழில் பயி
ன்றுவரும் காலத்தில் மனுஷருடைய குணம் குறிகளின்
பேதாபேதங்களை விளக்கும் சித்திரங்களைச் செதுக்கிப் பயி
லும் ஆசைப்பெருக்கம் அவருக்கு உண்டாயிற்று. இத்தொ
ழிலில் எவர்க்கும் இல்லாத நைபுணியம் அவர்க்கு உண்
டானது முக்கியமாய் எதையும் கருத்துக் கூர்ந்து கண்டு
அநுப்பற்றுப் பயின்றதனாலேயே. காண்வரும் குறிக்கொள்
ளத்தக்க முகத்தைக் கண்டால் அவர் அதன் சாயல் சார்
சரிவைத் தவறாமல் ஞாபகத்தில் அழுந்த அமைத்திருந்து
பின்பு காகிதத்தில் சித்திரிப்பார். இந்த வரம் அவருக்கு
இயற்கை. இதை அவர் அநுப்பற்றப் பயிற்சிசெய்துவருவார்.
விகாரமான உரு எதாகிலும் எதிர்ப்பட்டால் உடனே அவர்
அதைப் பெருவிரல் நகத்திற் குறித்துவைத்து வீடு சேர்ந்
தபின் ஆர்ந்தமர்ந்து அதைப் பார்த்துக் கடிதத்தில் விவர

ணமாய்ச் சித்திரிப்பார். சற்று விகாரமும் ஊனமுமான எதையும் அவர் மனம் கவிந்து பார்க்கவிடாது. ரூபாதிசயம் பார்க்கும்படி அவர் போகாத இடங்களுக்கெல்லாம் போவார். இவ்வாறு அங்கங்கே கண்டவைகளைப் பத்திரமாய் உள்ளத்தில் அடக்கிவைத்திருந்ததனால், பின்னாளிற் சித்திரித்த படங்களில் அளவற்ற சித்தவிர்த்திகளையும் ரூபபேதங்களையும் கலப்படாமல் நிறைத்துக் காட்டினார். ஹோகார்த் சித்திரித்த படம் எல்லாம் அவர் காலத்திற்குரிய கோலம் குறிகளை அன்றிச் சித்தவிர்த்திகளைக் கூடத் தவறாமல் உள்ளபடி காட்டும் ஞாபகசின்னங்களாயிருப்பது இக்காரணத்தைப்பற்றியே. சித்திரவித்தையை ஸ்வரூபத்தோடே கற்கத் தக்க பாடசாலை ஒன்றே ஒன்று. அது இவ்வண்டப்பரப்பு. இது அவர் வாய்ப்பிறப்பே. ஆனாலும் அவர் தாம் பயின்ற அவ்வித்தை ஒன்றிலன்றி மற்ற வித்தைகளில் விசேஷமாய்த் தெளிந்தவரல்ல. அவர் பள்ளியிற் கற்றதெல்லாம் கூடிச் சொற்பம். பள்ளியிற் கற்கும்பொழுது அவர் பிழையின்றி எழுத்துக் கூட்டவும் அறியார். பின்னிட்டு அறிந்ததெல்லாம் அவர் தாமாகக் கண்டு கேட்டுப் பயின்றறிந்ததே. நெடு நாள்வரையில் அவர் மிடியில் அடியுண்டும், மனம் மலர்ந்து உழைத்துக்கொண்டிருந்தார். அவர் மிதவாவிற்குத் தக்க செலவு செய்து வறுமையிற் செம்மையாய் நாள்கழித்தார். "குறித்த அவதி தப்பாமற் சம்பளம் கொடுத்துவருவதாக" அவர் பெருமை பாராட்டினார். இன்னல் இடர் அனைத்திற்கும் தப்பிப் பிரக்கியாதராகி அவர் குடிவாழ்க்கை தொடங்கிய பொழுது ஆதியில் தாம் பட்ட பாட்டையும் பட்ட கேட்டையும் செவ்வனே நினைந்து, தமக்கு இத்தனை வைராக்கியமாகவும், தம்தொழிற் சிறத்திற்கு அனுகூலமாகவும் ஏற்பட்ட சங்கடங்களை நினைந்தும் செய்வதாக மனமகிழ்வார். ஒரு சமயத்தில் அவர் "மடியில் அரை ரூபாய்க்கும் வழியின்றி மனம் குன்றி நகரத்திற்குப் போய்ச் சித்திரம் தீர்த்த தட்டு ஒன்று விற்ற பணம் நூற்றைந்து

ரூபாய் கொண்டு வடபக்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தவுடன் கந்திகட்டிக்கொண்டு மடியில் ரொக்கம் இருபதினாயிரம் முப்பதினாயிரம் வைத்திருக்கும் சீமானைப்போல அச்சமற்று நான் வெளிப்பட்டது இன்னம் நினைவில் இருக்கின்றது” என மொழிந்தார்.

“முயற்சியும் கடைப்பிடியும்.” இது பாங்கஸ் (Banks எனும் சாஸ்திரியன் தலைமேற்கொண்டு ஒழுகிப் பிறருக்கு வலியுறுத்திப் போதித்த சிறியவாக்கியம். அவர் உள்ளப்பசையுள்ளவரென்று வெகுப் பிரசித்தமாய்த் தெரிந்தது. தொழில் பழகிப் பெரியோராக நாடிய வாலிபர் பெரு பெயர் அவரிடத்திற்குப் போய்ப் புத்திமதி சொல்லித் தமக்கு உதவி புரியக் கேட்பார்கள். ஒரு நாள் சிறுவன் ஒருவன் இத்தாற்பரியம் கொண்டு அவர் வீட்டு வாசலிற் போய் நின்று கதவிற் சற்று உரக்கத் தட்ட, வேலைக்காரி கோபித்து அவனைத் திட்டித் துரத்தப்பார்க்க, உள் இருந்த பாங்கஸ் அவள் சொற் கேட்டு எழுந்து கதவைத் திறந்து வெளியே வந்தார். சிறுவன் சித்திரித்த படம் சில வைத்துக்கொண்டு நின்றது கண்டு “என்னிடத்தில் உனக்கு என்ன வேண்டும்” என்று கேட்க, அவன், “ஐயா, பள்ளிக்கூடத்தில் படம் எழுதப் பயிலும் வகுப்பில் தலைகூட்டிச் சேர்த்துக்கொள்ளப் பிரார்த்திக்கிறேன்” என்றான். அது கேட்டு, அவர் தாம் ஒருவர் மாத்திரம் அவனைச் சேர்த்துக்கொள்வது சங்கடமென்று தெளியச் சொல்லி, படத்தைப் பார்க்கும்படி கேட்டு வாங்கினார். வாங்கிப் பார்வையிட்டு, ‘இங்கே வா அப்பா, பள்ளிக்கூடத்திற் சேர இன்னம் காலம் இருக்கிறது. வீட்டுக்குப் போய்ப் பொழுதுபோது பாடசாலையிற் கன்றாய்க் கற்றுக்கொண்டிரு. அப்பொல்லோவின் படத்தைச் செவ்வையாய் எழுதப்பார். ஒரு மாசம் கழித்து எழுதும் படத்தைக் கொண்டுவந்து காட்டு” என்று சொல்லிச் சிறுவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டார். அவன் போய்ப் பின்னும் ஒரு பங்கு அதிகம் முயன்று வருந்தி எழுதிப் பட

று ஒரு மாசம் சென்று அந்தச் சிற்பியைப் போய்க் கண்டான். எழுதிக் கொண்டுபோய்க் காட்டிய படம் முற்படத்திற்கு வாசியாயிருந்தது. மீளவும் பாங்க்ஸ் அவனை வருந்திப் பயிலும்படி புத்தி புகட்டி அனுப்பிவிட்டார். ஒரு வாரத்திற்குள் சிறுவன் திரும்பவும் சித்திரித்துக் கொண்டுபோய்க் காட்டினான். இம்முறை படம் மிகு பளிக்காய் அமைந்தது. பாங்க்ஸ் அவனைப் பார்த்து, "களிகூர்ந்திரு. ஆயுசு இருக்குமானால் பிரதாபமுறுவாய்" என்று உற்சாகம் கொடுத்தினார். அச்சிறுவன் மல்ரெடி (Mulready) எனும் சித்திரநிபுணன். சிற்பி கூறி மொத்தவும் பலித்தது.

க்லாட் லொரேன் சித்திரவித்தாரணனது பாரி சலிப்புறச் செய்த முயற்சியால். அவர் பிறப்பிடம் லொரேனைச் சேர்ந்த சாம்பேன் கிராமம்; பெற்றோர் தரித்திரர். முதலில் அவனை அப்பவர்க்கம் செய்யப் பயிலும்படி சயம்பாகி ஒருவனிடத்தில் விட்டார்கள். பிற்பாடு மரத்தில் சித்திரவேலை செய்யும் அவர் சகோதரன் அவனைச் சேர்த்து அவ்வேலை பழக்கினான். பழகும் காலத்தில் நுணுக்கமான கைவேலையில் அவர்க்குச் சதுர்ப்பாடு உண்டாமெனத் தோன்றியது. அது கண்டு, சகோதரன் அவனைச் சரக்குக் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரி ஒருவனுடன் இத்தாலியாவிற்கு அனுப்பச் சம்மதித்து விட்டான். ரோமை நகர் சேர்ந்து சொற்ப காலத்திற்குள் தேசதிருஷ்டி படம் சித்திரிக்கும் ஒருவன் வீட்டில் அவருக்குச் சேவகம் அமர்ந்தது. அங்கிருந்து ஏவல் புரியும்பொழுது அந்த க்லாட் முதல் முதல் தேசதிருஷ்டிப்படம் சித்திரிக்கப் பயின்றார். காலம் போகப் போக அவர் சித்திரித்த படங்கள் பளிக்காயிருந்தன. அப்பால் அவர் இத்தாலியாவிற்கும் பிரான்ஸ் தேசத்திற்கும் ஜர்மனியாவிற்கும் போனார். போகுமார்க்கத்தில் செலவிற்கு எடுக்க எடுக்கக் கைப்பொருள் குறையுமே. அக்குறையை நிறைவிக்கும்படி அவர் தங்கிநின்று தேசதிருஷ்டி படம்

சித்திரித்துக் கொண்டுபோய் விற்றுத் திரவியம் தேடுவார். ரோமைக்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தபொழுது அவர் சித்திரங்களுக்கு மெத்தவும் நாணயம் பிறந்தது. காலம் ஏற ஏற அவர் கீர்த்தி ஐரோப்பா எங்கும் எட்டியது. அவர் இப்பிரபஞ்சத்தை அதன் நானா ரூப பேதங்களோடும் அனுப்பறக் கண்டு கருத்துக் கூர்ந்து எழுதிப் பயின்றார். பெரும்பாலும் கட்டடங்கள், சிறுசிறு துண்டு நிலம், மரம், தழை முதலியவைகளை வேறு வேறாக எழுதி வைத்திருந்து தேசதிருஷ்டி படம் சிரத்தையாய்ச் சித்திரிக்கும்பொழுது அதில் சேர்த்துக்கொள்வது அவர் சாதகம். அன்றியும் அவர் வானத்தை மனம் சிதறாமல் அவதானமாய்ப் பார்த்துக்கொண்டுவருவார். உதயாதி அஸ்தமனபரியந்தம் பல நாளளவும் வானவெளியைக் கண் பதறாமற் பார்த்து மேக ஓட்டத்தாலும் ஒளி கூடுவது குறைவதனாலும் உண்டாம் விகாரம் அனைத்தையும் குறித்துக்கொள்வார். நித்தமும் இப்படிச் செய்து பயின்று வர வர, ஒன்றைக் காணும் கண்ணும், கண்டதை எழுதும் கையும் பூர்த்தியாய் அவர் வசப்பட்டன. இந்தச் சுவாதீனம் வெகு தாமசத்தில் உண்டாயிற்றும்; அறுதியில் தேசதிருஷ்டி படம் சித்திரிப்பவர்களுளெல்லாம் அவரே சிரேஷ்டரானார்.

இங்கிலாந்தில் க்ளாடுக்கு இணையென்று பெயர் பெற்ற டர்னரும் (Turner) இவ்வாறே வருந்தி உழைத்தவர் தாம். சவரகனாகிய தந்தை தன் மகனுக்கும் அத்தொழில் பயிற்ற நினைத்திருந்தான். அவன் லண்டன் நகரத்தில் இத்தொழில் செய்து வரும் நாளில் ஒரு நாள் அச்சிறுவன் வெள்ளித்தட்டில் எழுதிய மெய்க்கவசப் பிரதிமையைச் சவரம் செய்வித்துக்கொண்டிருந்த ஒருவன் கண்டு நாவிதனைப் பார்த்து இங்கே வா, உன் மைந்தனை அவன் மனம் செல்லும் துறை பழக விட்டுவிடு என்று ஆணையிட்டான். நாளடைவில் நாவிதன் மகனைச் சித்திரவித்தை கற்றுத் தேற விட்டான். சிற்பம் முதலிய சித்திர வித்தைகள் கற்கும்

இளைஞர் யாவரையும் போல் தர்ணருக்கும் பற்பல சங்கடங்கள் நேர்ந்தன. அவர் ஸ்திதி மெத்தவும் இக்கமாயிருந்தமையால், அச்சங்கடங்கள் அவருக்கு அசாத்தியமாயின. ஆனாலும் வருந்தி உழைக்க அவர் மனம் எப்பொழுதும் வணங்கியது. செய்வது எத்தனை சொற்பமாயிருப்பினும் அதையும் திருத்த முடிக்க வருந்துவது அவர் இயற்கை. பிறர் எழுதிய படத்திற்கு இந்திய மையால் வெளியில் இருந்து வர்ணம் இடும் வேலை அவருக்கு ராத்திரி காலத்திற் அகப்பட்டது. கூலி ராத்திரி ஒன்றுக்கு ஒன்றே கால் ரூபாயும் சாப்பாடும். இவ்வாறு அவருக்குப் பணமும் சேர்ந்தது, அதனுடன் கைச்சாதகமும் அமைந்தது. அதன் பின், இருப்புப்பாதைப் பிரயாணகால விளக்கப் புஸ்தகம், பஞ்சாங்கமுதலிய கூலி மிதமான நான்முகப்படம் வேண்டும் எல்லவைப் புஸ்தகத்திற்கும் அவர் சித்திரம் அமைத்துக் கொடுத்து ஜீவனம்பண்ணினார். இதைச் சுட்டி அவர் சொல்லியது:— "செய்வதற்கு இதனிலும் நயத்தது மற்றென்ன ? இச்சாதனை முதன்மையாயிருந்ததே". அவர் எதையும் பதனமாகவும் நெஞ்சறிய உண்மையாகவும் செய்தார். கூலி போதாதென்று அவர் வேலையை ஒருபொழுதும் ஒப்புக்குச் செய்தவரல்ல. அவர் பிழைப்பிலும் வித்தையிலும் சிந்தை வைத்துச் செய்வதை எப்பொழுதும் செவ்விதாகச் செய்தார். படங்களை ஒன்றுக்கொன்று வியப்புற அமைக்காது விட்டதில்லை. இவ்வாறு உழைப்பவன் வளம் பெறச் சாதிப்பதற்கு ஐயம் இல்லை. "ஆதித்தனுடைய ஒளி உதயகாலந் தொட்டு வரவர வளர்வதுபோல" அவர் வலியும் புத்திகோசரமும் வளர்ந்தன. இது ரஸ்கின் மொழிந்தது. ஆனாலும் தர்ணருடைய விவேகத்தைப் பாராட்டாமலிருந்ததும் இல்லையே; அவர்க்கு உத்தம ஞாபக சின்னம் சாங்காலத்தில் தந்தேசத்திற்கென்று வைத்த சிறந்த சித்திரங்களே, அவர் கீர்த்தியைக் காலம் நீடிக்க இருந்து குறிப்பிக்கும் சின்னமும் அதே.

கலைகளுக்கெல்லாம் நிலயமாகிய ரோமை நகரத்தைப் போய்ப் பார்ப்பது கலை வித்தியார்த்தியின் ஆசை அனைத்தினுள்ளும் மேலானது. ஆனால் ரோமைப் பிரயாணத்திற்குச் செல்லும் செலவு அதிகம், கலா வித்தியார்த்திகளுமோ பெரும்பாலும் தரித்திரர். நேரிடும் இடர் எதற்கும் நிலைகுலையாமல் கடைத்தேறும் நிர்ணயசித்தம் மாத்திரம் இருந்தால் ரோமைக்குப் போய்ச் சேரலாம். பூர்வகாலத்தில் பிரான்சு தேசத்தில் சித்திர வித்தகனாயிருந்த பிரான்கோயிஸ் பெரியர் (Francois Perrier) அந்த நித்திய புரத்தைப் போய்ப் பார்க்கும் ஆசை மீறி அந்தகனாகிய நாடோடி ஒருவனைக் கைலாகு கொடுத்துக் கொண்டுபோகச் சம்மதித்துப் போனான். வழியில் அலைந்தலைந்து வெகு நாட்சென்று அப்புண்ணிய க்ஷேத்திரத்திற் சேர்ந்து சித்திர வித்தை கற்றுக் கீர்த்திவந்தனானான். ரோமாபுரியைப்போய்ப் பார்க்க நிர்ணயித்துச் சாதித்த ஜாக்வீஸ் காலோ (Jacques Callot) என்பவன் காட்டிய வைராக்கியம் இதிற் குறைந்ததல்ல. சிறுவனாயிருக்கும்பொழுது சித்திரம் எழுதிப் பயின்று வல்லவனாக நினைத்த அவனுக்குப் பிதா இடங்கொடுக்கவில்லை, தடுக்கப் பார்த்தார். சிறுவனோ ஒரு பிடியாய் நின்று, இத்தாலியாவிற்குப் போக வீட்டை விட்டு வெளிப்பட்டான். வழிச் செலவிற்கு ஒரு காசும் இல்லை. மிகவும் தவதாயப்படும்பொழுது குடுகுடுப்பைக்காரர் சிலரைக் கண்டு அவர்கள் கூட்டத்தில் சேர்ந்து சந்தை கூடும் இடந்தோறும் திரிந்து ஆளோட்டானாக அவர்கள் பாடு பறப்புகளில் தானும் பங்கனுபவித்தான். இவ்வரும் பிரயாணத்தில் ஆளுரு, முகச்சாயல், சரிவு, குணம் குறிகளைப்பற்றி அவனுக்கு அபூர்வஞானம் உண்டாயிற்று. அதற்கு அமைந்து வைத்திருந்த யாவையும் பின்னிட்டு அவன் எழுதிய விகடையான சித்திரங்களில் சிறுபான்மைப் பெருக விளக்கினான்.

காட்பட்டு காலோ ப்ளாரென்ஸ் நகரிற் சேர்ந்தபொழுது குலமகன் ஒருவர் அவன் விவேகத்தையும் மனோவேகத்தை

யும் கண்டு உவப்புற்று ஒரு வித்தகனிடத்தில் சித்திரவித்தை கற்கவிட்டார். இளைஞனுக்கு ரோமாபுரிக்குப் போகாமல் அங்கிருக்க மனமே இல்லை. அதனால் சில இனத்தினருள் அவ்விடத்திற்கு வழி கொண்டான். ரோமையிற் சேர்ந்து பெரிஜி (Porigi), தாமேஸன் (Thomassin) எனும் இருவரோடு அறிமுகமாகி, அவர்கள் தாதுடைமைத்தால் அவன் எழுதியைத்திருந்த படங்களைப் பார்த்து நீ பிரபல சித்திரவித்தகனுவாய் என மொழிந்தார்கள். ஆனால் அவன் குடும்பத்தார்க்கு இஷ்டன் ஒருவன் அங்கே போயிருக்கையில் ஒரு நாள் அவனைக் கண்டு தேசாந்தரியாகத் திரியவிடாமல் பலாத்கரித்து வீட்டுக்கு அனுப்பிவைத்தான். இத்தனை காலம் தேசாந்தரம் போய்த் திரிந்து ருசிகண்டவனுக்கு வீட்டிலே நிலையாயிருக்க மனம் ஒப்புமா - ஒப்பாது. மீளவும் சமயம் கண்டு வெளிப்பட்டுப் போய்விட, அவன் தமையன் ஊரின் நகரில் அவனைக் கண்டு பிடித்துக் கொண்டுபோய்ச் சேர்த்தான். பிதா எத்தனையோ புத்திமதிகள் சொல்லியும் அந்தப் பிடிவாதி கேட்கவில்லை. அவன் மனதைத் திருப்ப எவராலும் இல்லையென்று கண்டு இனிச் செய்வது என்னவென்று வியசனமுற்றுத் தகப்பனார் அவனை ரோமாபுரியில் வித்தை பயில விட உடன்பட்டார். இம்முறை போய்ச் சில வருஷகாலம் நிலையாய் அங்கிருந்து, தெளிந்த நிபுணரிடத்தில் கட்டடமுதலிய உரு அமைக்கும் முறையும் சித்திரம் செதுக்கும் வகையும் முயற்சியாய்க் கற்றுக்கொண்டுவந்தான். அங்கிருந்து அவன் பிரான்ச தேசத்திற்குத் திரும்பி வருகையில் 2-வது காலமோ பலாசொனாவில் அவனை மறித்துக்கொண்டான். அவன் அங்கிருந்து பின்னும் சில வருஷம் வித்தை பயின்று தொழில் செய்தான். பிரஞ்டானை இறந்துபோக, அவன் நான்ஸிக்குத் திரும்பித் தன் குடும்பத்தாருடன் வாசஞ்செய்து தொழில் கருவிப் பிரயோகத்தால் பொருட்செல்வம் புகழ்ச்செல்வம் இரண்டும் சம்பாதித்தான். ஸார்ச் சண்டைகள் நடக்கையில் நான்ஸியை முற்றுகை செ

ய்து பிடித்துக்கொண்டபொழுது அதைக் குறிப்பிக்கும் பட்
டமும் செதுக்குச் சித்திரமும் அமைத்துக் கொடுக்கும்படி
ரிக்லூ கேட்க, காலோ தன் ஜன்மஸ்தலத்திற்கு நேர்ந்த அப
த்தை ஞாபகத்திற் பூட்டும் பிரதிமைகள் அமைக்க மனமின்
றி மறுத்தான். செய்த நிர்ணயத்தை அசைக்கப் பார்த்து
முடியாததனால் ரிக்லூ அவனைச் சிறைக்கூடத்திற் போட்
டான். ரோமாபுரிக்கு முதற் பிரயாணம் போகு மார்க்கத்
தில் சமயத்தில் உதவி புரிந்து தன் குறை தீர்த்த பழைய
சிநேகராகிய குடுகுடுப்பைக்காரர் சிலரை காலோ அச்சி
றைக்கூடத்திற் கண்டான். அவன் சிறையிருப்பது கேட்டு
பதின்மூன்றுவது லூயி அரசன் அவனைச் சிறை நீக்கியது
மன்றி, கேட்டுக்கொள்ளும் உபகாரம் எதுவும் இல்லை என்
னமற் செய்வதாகவும் வாக்கிட்டான். அக்கணமே கா
லோ முன்னாளில் தனக்கு இன்னுயிர்த் தோழராயிருந்த குடு
குடுப்பைக்காரரையும் சிறை நீக்கிப் பரீஸ் நகரில் அச்சமற்று
யாசகம் செய்ய மனதிரங்கி இடம் தரவேண்டுமென்று
பிரார்த்தித்தான். இப்பிரார்த்தனை முறைமையானதல்லவே-
அல்லாதிருந்தும், அவர்களைப் பார்த்துச் செதுக்குச் சித்திர
ப் பிரதிமைகள் செய்து கொடுத்தால் சிறை விடலாகுமென
ராஜ உத்தரம் பிறந்தது. அவன் செதுக்கி அச்சிட்டு "யாச
கர்" என விகாரகாமம் சூட்டிப் பிரசுரம் செய்த புஸ்தகத்
தின் வருவழி இதுதான். பரீஸ் நகரத்தை விட்டு நீங்காதிரு
ந்தால் காலோவிற்கு உபகாரச் சம்பளம் 1500-ரூபாய் கொ
டுப்பதாக ராஜ வாக்குப் பிறந்தது. அதற்கு அவ்வித்தகன்
உடன்படவில்லை. அவனுக்கு பொலீமியாவின சார்பு அதி
கரித்திருந்தது. அவன் பிறர் சார்பற்றுத் தானும் தன் பாடு
மாயிருப்பதே பெருமையென்று கொண்டாடினான். கொ
ண்டாடி மீளவும் நான்ஸிக்குப் போய்ச் சாந்தனையும் அங்கி
ருந்து தொழில் செய்துகொண்டிருந்தான். செதுக்கிச் சித்
திரித்தும் இராவகப் பிரயோகத்தால் சித்திரித்தும் அவன்
சிரஷ்டித்த படங்கள் அனேகம். இத்தனை ஏராளமான சித்

இரங்களைத் தோற்றுவித்த அற்புதகரமாகிய அவ்வல்லாளன் அதிசய முயற்சியுள்ளவனென்று யாவரும் எளிதில் அநுமானப் பிரமாணமாய் அறிந்துகொள்ளலாம். காருவிதத்திலும் அவன் அமைத்த சித்திரங்கள் 1600 - க்குக் குறையா. விகாரமான விஷயங்களைச் சித்திரிப்பதுதான் அவனுக்கு விசேஷ பிரீதி. அவன் அவைகளை வெகு விக்ஷையாய்ச் சித்திரிப்பான். திராவகம் பிரயோகித்துச் சிற்றுளிமுனையால் விளக்கித் தடை தாமசமின்றி அவன் முடித்த சித்திரங்கள் மிகு சொகுசாகவும் சூக்ஷமமாகவும் அமைந்திருந்தன.

காலோவைக் காட்டிலும் பென்வெனுதோ செல்லினி (Benvennto Cellini) என்பவன் எந்தெந்தத் துறையிலும் அதிக துணிவோடு இறங்கி அபூர்வ முயற்சி செய்து சித்தி பெற்றவன். அவன் அதிசய சாமர்த்தியமுள்ள பொன்வினைஞன், ஓவியன், சிலையிலும் மரத்திலும் பிரதிமைசெய்வோன், செதுக்குச் சித்திரவித்தகன், யாத்திரிகன், கிரந்தகர்த்தன். அவன் எழுதிய தற்சரித்திரம் அபூர்வ சரித்திரம். அதற்கு உவமை என்றும் கண்டதில்லை. அவன் தகப்பன் கியோவானி செல்லினி ப்லாரென்ஸில் மெடிஸி லொரென்ஸோ அரண்மனைக் கத்தருவரில் ஒருவன். தன் மகன் தீங்குழல் ஊதுவதில் விசேஷ சாதகனாக வேண்டுமென்று மிகு ஆவலோடு எண்ணமிட்டிருந்தான். இப்படி இருக்கையில், அரண்மனைச்சேவகத்தை இழந்துபோனதனால் அவன் தன் மகனை எதும் தொழில் பழக விடாமல் தீராதென்று கண்டு பொற்றட்டான் ஒருவனிடத்தில் விட்டான். சிறு பருவத்திலேயே அவன் மைந்தனுக்கு ஓவியம் எழுதவும் நுணுக்கமான கைத்தொழில் செய்து பழகவும் ஆசை உண்டாகத் தோன்றியது. தட்டானிடத்தில் கருத்துடன் கற்று வேலைசெய்யத் தொடங்கிச் சிறிது காலத்திற்குள் அவனுக்கு நன்றாய்க் கைவளம் அமைந்தது. ஊதாரி சிலருடன் சண்டையிற் கலந்ததனால் அவனை ஆறு மாசகாலம் ஊரைவிட்டு அகற்றி ஸியென்னாவில் வைத்தார்கள். அவ்வாறு மாசம் அவன் அங்கொரு

பொற்றட்டானை அண்டிப் பொற்பணிதிகள் செய்யவும் மணி இழைக்கவும் பின்னும் நன்றாய்ப் பழகினான்.

இத்தொழில் பழகி வரும்பொழுதும் தகப்பன் அவனைக் குழல் ஊதிப் பயின்றிருக்கச் சொல்வான். குழல் ஊதச் சிறுவனுக்குச் சற்றுமது இஷ்டம் இல்லை. இல்லாதிருந்தும் தந்தை சொல்லைத் தட்டாமல் அதையும் பயின்றுவந்தான். முக்கியமாய் அவனுக்கு இஷ்டம் சித்திரவேலைகளில். அவ்வேலைகளைப் பத்திசிரத்தையோடு செய்துகொண்டுவந்தான். ப்லாரென்ஸ் நகரத்திற்குத் திரும்பிப் போய், லீயனார்டோ டாவின்ஸி, மைகெல் அஞ்ஜிலோ எனும் நிபுணர் இருவர் செய்துவைத்த பிரதிமைகளை மனம் கூர்ந்து பார்த்துச் செய்து பழகினான். பொன்வினையாண்மையில் பின்னும் தேறும் பொருட்டு ரோமாபுரிக்குப் பாதசாரியாகச் சென்று அங்கே பற்பல அருந்தொழில் செய்தான். மிகவுயர்ந்த லோகங்களில் சித்திரவேலை செய்து கைதேர்ந்த நிபுணனென்று பெயர் பெற்றுப் பின்னும் ப்லாரென்ஸ் நகரத்திற்குத் திரும்பிப்போனான். அத்தனை சாமர்த்தியமுள்ளவன் கைவேலைக்கு மெத்தவும் நாணயம் உண்டாயிற்று. அந்த ஸெல்லினியோ முற்கோபி; அடிக்கடி ஏதும் சண்டையில் மாட்டிக்கொண்டு தப்பிப்பிழைக்கத் தேசாந்தரம் போவான். அப்படிச் செய்யாமல் தீரவில்லை. அவன் சன்னியாசி வேஷம் எடுத்து ப்லாரென்ஸை விட்டகன்று மீளவும் ஸியென்னாவிற் புகலடைந்து, அங்கிருந்து அப்பால் ரோமாபுரியில் போய்ச்சேர்ந்தான்.

முன்னும் ஒருமுறை அவன் ரோமைநகர்வாசம் செய்தவனே. இந்த இரண்டாமுறை அங்கிருக்கையில் அவனுக்கு மெத்தவும் சலிகை உண்டாயிற்று. பொற்றட்டானுக்குப் பொற்றட்டானும் வாத்தியக்காரனுக்கு வாத்தியக்காரனுமாக அவனுக்குப் பாப்புவின் சேவகம் படித்தது. சிறந்த வித்தகர்கள் செய்த வேலைகளைப் பார்த்துப் பார்த்துப் பயி

ன்று விர்த்தியடைந்தான். மணி இழைத்தல், பளிங்குத் தளுக்கிடுதல், முத்திரை செதுக்கல், பொன்வெள்ளி வெண்கலத்தில் சித்திரவேலை பூசித்துச்செய்தல் ஆகிய இவ்வேலைகள் செய்யும் விசித்திரத்தில் இவனுக்கு நிகரான சித்திர வித்தகர் இல்லை. இன்ன பொற்றட்டான் இன்ன துறையில் வல்லவனென்று எவராவது எடுத்துரைப்பது கேட்டால், அவன் அத்துறையிலே மேற்படி துறையில் வருந்தி உழைத்து அவ்வல்லவனை வெல்லப் பார்ப்பான். எவராவது சிறந்த பதக்கம் செய்திருப்பது கண்டால் அதுபோலத் தானும் செய்வதும், பளிங்குத் தளுக்குவேலையில் வித்தையாளனென்று புலவர் பாராட்டுவதற்கு ஒப்பாகத் தானும் தளுக்கிடுவதும், அரும்பணிகளுக்குச் சமானமாகப் பணிசெய்வதும் ஆகிய சாதனைகள் அவனுக்கு அமைந்தது இவ்வாறே.

இவ்வகை நிர்ணய மனமுடையோனாக மெய் வருந்தி உழைத்த செல்லினி சிறந்த வேலைகளைத் திரளாகச் செய்து முடித்தது ஆச்சரியமல்ல. அவன் இளைக்கா முயற்சியுள்ளவன். எப்பொழுதும் சுட்டிதமணியமாயிருப்பான். இப்பொழுது அவன் எங்கேயென்று கேட்டால் ப்ளாரென்ஸில் இருக்கிறான் என்பார்கள். நாலு பத்து நாள் சென்று ரோமாபுரியில் இருப்பான், அப்பால் மந்துவாவிற்குப் போயிருப்பான், மீளவும் அவனை ரோமாபுரியிற் காணலாம். அவ்விருந்து அப்புறம் நப்போலிக்குப் போயிருப்பான், பின்பு ப்ளாரென்ஸுக்குத் திரும்பிவிடுவான், பின்பு வெனீஸில் இருப்பான் — அப்பால் பாரீஸ் நகரத்தில் இறங்கியிருப்பான். அவன் கெடுத்தூரம் போகும்பொழுதெல்லாம் குதிரை ஏறிப்போவான். அதனால் சாமான் அதிகம் கொண்டுபோக வாய்க்காது. ஆகவே, போகும் இடந்தோறும் முதலில் வேலைக்குரிய கருவிகளை அங்கங்கிருந்து தானே செய்துகொள்வான், செய்யும் [illegible] பூசித்துக் கற்பித்த பின், கைவேலையை அவன் பிறனைக்கொண்டு செய்வித்ததே யில்லை. சித்திரவேலை, செதுக்கு வேலை, வடிவமைத்துப்

பணிக்காப்முடிக்கும் வேலை எல்லாம் அவன் ஒருவனே கையாலேயே முடிந்தன. அவன் கைவேலைகளில் விவேகம் முதிர்ந்தாற்போலக் காணும் எவர்க்கும் ஐயமறத் தோன்றும். அதனால் அவ்வேலைகளை அவன் புத்தி சொல்லக் கேட்டு மற்றொருவன் செய்து முடிப்பது அசாத்தியம். மகளிர் இடைக்கச்சப்பூட்டு, முத்திரை, கழுத்திரைக்கடைப்பூட்டு, சிந்சிராஞ்சி, மோதிரம், தெறிமுதலிய எவ்வகை எளிய வேலையும் அவன் கையில் விசித்திர வேலைப்பாடாய் அமையும்.

கைவேலையில் செல்லினி விசேஷ வினாவும் சாதுரியமுமுள்ளவன். ராப்பெல்லோ டெல் மோரோ எனும் தட்டானுடைய புத்திரிக்குக் கையில் சத்திரம் வைக்க ரணவைத்தியர் ஒருவர் ஒரு நாள் அவன் கம்மசாலைக்குப் போனார். போனபொழுது அங்கே நின்ற செல்லினி வைத்தியர் வைத்திருந்த கருவிகளைக் குறிப்பாய்ப் பார்த்தான். அக்காலத்தில் ரணவைத்தியர் வைத்து வழங்கிய சத்திரமுதலிய கருவிகள் நாணயமானவைகளல்ல, மட்டித்தரமானவைகள். சத்திரப் பிரயோகத்தை இம்மட்டில் நிறுத்திக்கொள்ளும், கால் மணி நேரத்திற்குள் வந்துசேர்வேன் என செல்லினி வைத்தியருக்குச் சொல்லித் தன் கம்மசாலைக்கு விரைந்து போய் ஆணித்தரமான எஃகுத்துண்டு ஒன்று எடுத்துச் சத்திரம் ஒன்று நொருசாய்ச் செய்துகொண்டுபோய்க் கொடுத்தான். வைத்தியர் அதை வாங்கி வளம்பெறப் பிரயோகித்து மகிழ்ந்தார்.

செல்லினி உரு அமைத்த பிரதிமைகளில் சிரேஷ்டமானவைகள் ௧-வது பிரான்ஸிஸ்-க்குப் பாரிஸ் நகரத்தில் நிர்மித்துக்கொடுத்த வியாழபகவான் வெள்ளிப்பிரதிமையும், ப்லாரென்ஸின் மஹா ட்யூக் பட்டவர்த்தனர் ஆகிய காஸ்மோவிற்கு வெண்கலத்தில் வார்த்துக்கொடுத்த பெர்ஸியஸ் பிரதிமையுமே. அன்றியும், அவன் வெண்கல்லில் செய்த அப்பொல்லோ, ஹையஸிந்தஸ், நார்ஸிஸ்ஸஸ், நெப்டியூன்

பிரமைகள் பணிக்காய் அமைந்தன. அவன் பெர்ஸியஸ் பிரதிமையை உருக்கிவார்த்து உருவமைந்த வரலாறுகள் அவ்வருக்தொழிலாளனுடைய ஆதிக்கொள்ளத்தக்க திறமையை முக்கியமாய் விளக்கும்.

செல்லினி இப்பிரதிமையை மெழுகிற் செய்து காட்ட, மஹா பட்டவர்த்தனர் ட்யூக் பார்வையிட்டு, வெண்கலம் உருக்கிவார்த்து இத்தப் பிரதிமை அமைக்க முடியாதென்று தீர்த்தறுத்துச் சொன்னார். முடியாதென்று அவர் சொல்லியது கேட்கவும், செல்லினிக்கு அதை முயன்று முடிக்கும்படி உற்சாகம் பிறந்தது. முதலில் அவன் களிமண்ணில் அந்தப் பிரதிமையை வனைந்து சுட்டு, அப்பால் அதற்கு மெழுகுறையிட்டுச் செவ்விதாக்கினான். பின்பு ஒரு வகை மண்ணால் அதற்கு மேலுறை இட்டு அதையும் சூளையில் வைத்துச் சுட்டான். சுடும்பொழுது உள்ளிருந்த மெழுகுறை உருகி வழிந்துபோய் விட்டது. அப்பால் களிமண் உறைக்கும் மேல்மண்ணுறைக்கும் இடையில் வெண்கலம் உருக்கிவார்க்க வெற்றிடம் இருந்தது. சூளையின் அடியில் குழி பறித்து அக்குழியில் மேற்சொல்லிய ஈரடுக்கு மண்ணுறைப் பிரதிமையைப் பதித்துச் சூளையில் உருகும் வெண்கலம் அவ்விருறைக்கு இடைவெளியில் பாயும்படியாய் வழி, கொளைவழி வைத்தான்.

பிரதிமை உருக்கிவார்க்கச் சூளை போடும்படி முன்னடியே செல்லினி ஜாதிக்காய் மரம் சுமைசுமையாய் வாங்கி அடுக்கிவைத்திருந்தான். அப்புறம் சூளையில் எங்கும் நிறையப் பித்தளையும் வெண்கலமும் துண்டுதுண்டாய் வைத்து நெருப்பு மூட்டினான். அக்கினியும் வடியவடிய நெருப்புச் சீறி ஜ்வாலித்து [illegible] பற்றி [illegible] எரிந்து போயிற்று. இந்த அவதியில் காற்று மோதி மழை வருஷிக்க, சூளை சிறிது [illegible] வெப்பம் தணிந்தது. தணியவே பித்தளையும் வெண்கலமும் உருகவில்லை. செல்லினி வெகு நாழிகைநேரம் மேன்மேலும் விறகு இட்டிட்டுச் சூடேற்றப் பா

பெட்டான். பட்ட பாட்டால் அவன் பலம் ஒடுங்கிக் களைத்து வருந்தினான். பிரதிமை வார்க்குமுன் தன் பிராணன் போய் விடுமென்று அவன் கெடிகலங்கித் தன் கையாட்களைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டுப் பள்ளியறையிற் போய்ப் படுத்துக்கொண்டான். சூழ நின்றவர்கள் அவனுக்கு இந்த அவஸ்தை வந்ததைத் தொட்டுத் துக்கம் கொண்டாட, சடிதியில் வேலைக்காரன் ஒருவன் பள்ளி அறைக்கு விரைந்து போய், "இந்தப் பாவி பொன்வெய்யுதோ உழைத்ததெல்லாம் பழுதாய்ப் போயிற்றே" என்று பரிதபித்துச் சொன்னான். அவன் சொற் கேட்டவுடன் ஸெல்லினி படுத்த படுக்கையினின்று திடீரென்று எழுந்து ஒரு க்ஷணத்தில் கம்மசாலைக்குப் பறந்துபோய்ப் பார்த்தான். தீ அவிந்து உருகின லோகம் மீளவும் இறுகிக் கட்டியாயிருந்தது.

அயலகத்தான் ஒருவனிடத்தில் ஒரு வருஷம் நன்றாய் ஈரம் வற்றி உலர்ந்த விறகு இருந்தது. அது முதிராமரத்தில் வெட்டியது. ஸெல்லினி அவ்விறகு ஒரு சுமை எடுப்பித்துச் சூளையில் அடுக்க, நெருப்பு மீளவும் பற்றித் திகுதிகென்று எரிந்து லோகம் உருகிப் பளிச்சென்று எறித்தது. காற்று வேகமாய் மோத மிகு மழை பொழிந்துகொண்டேயிருந்தது. அதனால், அவன் சில மேசைகளை எடுப்பித்துத் துணியாலும் இரட்டாலும் மூடி மழைக்குப் பிடித்துக்கொண்டு சூளையில் விறகுக்கட்டைகளை வீசிக்கொண்டிருந்தான். அன்றியும் வெண்கலத்திற்குமேல் வெள்ளீயமும் தகளைதகளையாக வீசினான், இருப்புச்சலாகையாலும் நெடுங்கோலாலும் கிண்டிக் கிளறியிட்டுச் சீக்கிரத்தில் லோகத்தைக் குழையுற உருகப்பண்ணினான். இந்நிலையில் நினைத்த கருமம் வாய்ப்பதாய் சித்தமுவந்தும் வெளிவரும் சமயம் கிட்டியிருக்கையில் இடியதிர்ச்சிகளுக்கு ஒப்பாய்ச் சடுதியில் வெடியொலி கேட்டு, ஸெல்லினியின் கண்ணெதிரில் மின்னொளியும் வெளிச்சம் பளிச்செனத் தோன்றியது. சூளைமூடி வெடித்து உருகின வெண்கலம் பெருக்கெடுக்கிறது; அது தீவிரமாய் ஒழுகவில்லை.

அதனால் செல்லினி மடைப்பள்ளிக்கு ஒரு தாண்டிலே போய் அங்கிருந்த வட்டில், கும்பா, கிண்ணம், விதவிதமான கொப்பரை முதலிய செம்பு-வெள்ளியம் இவற்றினால் செய்த பாண்டம் இருநூறு வரையில் கூட்டி வாரி அள்ளிக் கொண்டுபோய்ச் சூளையில் இறைத்தான். அதன்பின்புதான் உருகிய லோகம் தங்கு தடையின்றித் தாராளமாய் வடிந்தது, வடிந்து ஒப்பு உயர்வு இல்லா அத்யத்புதமான பெர்ஸியஸ் பிரதிமை அமைந்தது.

இருந்தாற்போல் இருந்து ஈஸ்வர சித்தமாக யுத்தி பிறக்க, செல்லினி சன்னதங்கொண்டு மடைப்பள்ளிக்குத் தாண்டிலே போய் அங்கிருந்த பாண்டம் பாத்திரம் அனைத்தையும் கூட்டி வாரி அள்ளிக் கொண்டு திரும்பிச் சூளையிற் போட்ட வரலாறுகளை வாசிக்கிறவர்களுக்கு, இதே பிரகாரம் பல்லிஸி மட்பாண்டம் சுடும்பொருட்டு வீட்டில் உள்ள நாற்காலி - பீடம், பெட்டி, கட்டில் முதலாம் தட்டுமுட்டுகளை முறித்து உடைத்துச் சூளையில் வைத்த கதை ஞாபகத்தில் வரும். வைராக்கியத்தில் இவ்விருவரும் இணையாவார். குணம் குறிகளிலோ ஒருவர்க்கொருவர் அசகாந்தரம். இஸ்மவேலைப்போல செல்லினியையும் எல்லாரும் அடிக்கக் கை ஓங்கினவண்ணமாயிருந்தார்கள். இது அவன் வாய்ப்பிறப்பு. ஆனாலும் சித்திர வேலையில் அவன் கைவளத்தையும் வித்தையில் விவேக நுட்பத்தையும் யாவரும் மனம் வாக்கு ஒத்து வியந்து பாராட்டுவார்களே தவிர அபிப்பிராயத்தில் இரண்டுபேர் இல்லை.

நிக்கலஸ் பௌஸின் (Nicolas Poussin) என்பவனுடைய சரித்திரம் இத்தனை கோலாகலமானதல்ல. அவன் சித்திர வித்தியா தாற்பரியத்திலும் ஒழுக்கத்திலும் சுத்தனென்று பெயரெடுத்து உயர்பதவி பெற்றவன்; புத்திசக்தி, நெறி நேர்மை, உள்ளத்தில் கள்ளமற்ற உதாரமதி இம்மூன்றினாலும் குறிக்கொள்ளப்பட்டவன். அவன் சௌஜன்யக்

குக் கிட்ட அந்திலீஸ் என்னும் ஊரில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவன். அவ்வூரில் அவன் பிதா சிறு பள்ளிக்கூடம் வைத்திருந்தான். சிறுவனும் அப்பள்ளியில் படித்துவந்தான். கல்வியில் அவன் கருத்துச் செல்லவில்லை. சென்றால் தகப்பன் கற்பித்தமட்டும் விற்பத்தி உண்டாயிருக்கலாமே. அவன் பாடத்திற் சிந்தனையற்றுப் பாடபுஸ்தகத்திலும் கற்பலகையிலும் சித்திரம் எழுதின மணியமாயிருந்து பொழுது போக்குவான். அவன் புஸ்தகங்கள் சித்திரமயமா யிருக்கும். ஒரு நாள் அச் சித்திரங்களைக் கண்டு களிகூர்ந்த நாட்டகத்து ஓவியன் ஒருவன் இளைஞன் மனதைச் செல்லும் துறையில் செல்ல விடுவதன்றி செல்லாத் துறையில் திருப்ப நினைக்கவொண்ணாதென்று பிதா மாதாவிற்கு வருந்திச் சொல்ல, அவர்கள் தம்மகனுக்குச் சித்திரவித்தை கற்பிக்க அவனைக் கேட்டு உடன்படுத்தினார்கள். சிறுவன் அவ்வோவியனுக்குத் தெரிந்ததெல்லாம் சிறிது காலத்திற்குள் தேறத் தெளியப் பயின்று அப்புறம் நூதனமாய் ஏதாயினும் கற்கப் பதைத்தான். பதினெட்டுப் பருவத்தில் அவன் பரீஸ் நகரத்திற்குப் போனான். போகுமார்க்கத்தில் அங்கங்கே தங்கிக் கடை விவரம் குறிக்கும் பலகைகளைச் சித்திரம் எழுதிச் சிங்காரித்துக் கொடுத்து வாங்கும் கட்டணத்தைக்கொண்டு வயிறு வளர்த்தான்.

பரீஸ் நகரம் எங்கும் அவன் கண்ணுக்குச் சித்திரமயமான நூதன உலகமெனத் தோன்றியது. அங்குள்ள விந்தையான வேலைப்பாடுகளைக் காணக்காண அதிசயித்தனனை அவனுக்கு ஓவியத்துறையிற் கை தேர்ந்த வித்தகனாகும் ஆசை மேன்மேலும் மூண்டது. அவன் அங்குள்ள பெரு சித்திரசாலைகளில் மெத்தவும் பிரவர்த்தியாய்ச் சித்திரித்தும், பூர்வ சித்திரங்களைப் பார்த்து எழுதியும், எழுதியவைகளுக்கு வர்ணம் கொடுத்தும் பலவாறு பயின்றான். சிறிது காலம் சென்று, சாத்தியமானால், ரோமாபுரிக்குப் போய்வர நினைந்து பிரயாணப்பட்டான். பிளாரென்ஸ் நகரத்திற் சேர்ந்து அப்பால்

செல்ல முடியாமல் அவன் மீளவும் பரீஸ் முகமாகவே திரும்பிவிட்டான். மீண்டும் ஒரு முறை அவன் ரோமைக்குப் போக வழிகொண்டு இம்மாத்திரமும் போகவில்லை. இம்முறை அவன் சென்றதெல்லாம் கூடி லயன்ஸ் வரையில். இவ்வாறு தொடுத்த பிரயாணம் அடுத்தடுத்துக் குந்தகப்பட்டும், அவன் எப்பொழுதும் கருமத்திற் கண்ணாயிருந்து இடும் சமயத்தை எட்ட விடாமல் வித்தையில் தேற வகை பார்த்து முன்போல் ஓயாமல் விஷயவிசாரணை செய்வதும் சாதனை பண்ணுவதுமாயிருந்தான்.

இம்முயற்சியில் பன்னிரண்டு வருஷம் சென்றது. இந்தக் காலமும் அவன் சிறுமை அடைந்து சிரமப்பட்ட காலம், கருமம் சிதறி ஏமாறிய காலம், உண்ண உடுக்க வகையற்று வருந்திய காலமென்றும் சொல்லலாம். இருந்திருந்து கடைசியில் பௌஸின் கருதியவாறு ரோமாபுரி போய்ச் சேர்ந்தான். அங்கவன் பண்டைக் கால வித்தகருடைய சித்திரங்களையும் பூர்வ பிரதிமைகளையும் கண்டு வித்தியாசக்தி குறை அற நிறைந்து விளங்கிய அவைகளைக் குறித்து விம்மித சிந்தனை முயற்சி குன்றாமல் ஓய்ந்து ஆய்ந்து பயின்றான். சிறிது காலம் அவன் தன்னைப்போலும் ஏழையாயிருந்த ட்யூக்வெஸ்னோய் (Duquesnoi) எனும் சற்சித்திர வித்தகனை அண்டி அவனுடன் வாசஞ்செய்து அவன் உதவியால் பூர்வகாலத்தில் வழங்கிய முறைமைப்படி பிரதிமை செய்யப் பழகினான். அவனோடு கூடப் போய் ரோமையில் உள்ள அந்திநௌஸ் முதலிய அபூர்வாலங்காரப் பிரதிமைகளென்று பெயர்பெற்ற சிலைகளை ஆர்ந்து அமர்ந்து அளவிட்டுப் பார்த்தான். பின்னிட்டு அவனுக்கு அமைந்த கைவளத்திற்கும் கலைத்திறத்துக்கும் இச்சாதனையே முக்கிய காரணமாயிற்றென்று உத்தேசிப்பார் உண்டு. அவன் கற்ற துறை சித்திரம் ஒன்று மாத்திரமன்று. அங்காதியாதமும் கற்றான். ஒன்றைப் பார்த்து அச்சச் அதுபோலச் சித்திரிக்கப் பழகினான். தன் கண்ணுக்கு எதிரில் காண்பவர்கள் நின்றாலும்

இருந்தாலும் படுத்தாலும் நடந்தாலும் மற்றென்ன செய்தாலும் அதே மாதிரியாக எத்தனையோ படம் எழுதிவைத்திருந்தான். நாகரிகமான சம்பியத்தைப்பற்றி அப்பொழுது அகப்படும் அரிய புஸ்தகங்களை இஷ்டர்களிடத்தில் வாங்கிக் கவனமாய் வாசித்துக்கொண்டிருந்தான்.

இத்தனை காலமும் அவன் மொத்தமும் ஏழையாகவே இருந்தான். இடையறாது தேறித் தெளிவதே பெருஞ் செல்வமென்று அவன் இதயம் பூரித்திருந்தான். எழுதிய சித்திரங்களை வந்த விலைக்கு விற்றுத் தொலைப்பதே அவனுக்கு எப்பொழுதும் இஷ்டம். பின் நடப்பவைகளை முன் உரைக்கும் முனிவன் படம் ஒன்றை அவன் நாலு ரூபாய்க்கும் பெலிஸ்தர் கொள்ளை ரோகத்தை வர்ணித்தெழுதிய படத்தை நூற்றைம்பது ரூபாய்க்கும் விற்றான். பின் குறித்த படத்தைப் பின்னிட்டு ரிக்லூ கார்டினல் போதகர் இரண்டாயிரத்தைந்நூறு ரூபாய்க்கு வாங்கினாராம். சரித்திரதசையில் இருந்து வருந்தும்பொழுது போதாக்குறைக்கு அவன் கொடிய பிணி கண்டு அதிலும் அடியுண்டான். பலம் ஒடுங்கி அகதியாகி வருந்தும்பொழுது குலமகன் ஒருவர் அவனுக்குத் தகு அறிந்து பொருள் கொடுத்து உதவினார். அவர் செய்யாமற் செய்த உதவியை அந்தச் சித்திரவித்தகன் மறவாதிருந்து ஸ்வஸ்தம் அடைந்தபின் "பாலைவனத்தில் இளைப்பாற்றி" எனும் பணிக்கான சித்திரம் ஒன்று எழுதிப் பக்தி வினயத்தோடு சமர்ப்பித்தான். அவன் பிணியுற்று வருந்திய சமயத்தில் ஷெ பிரபு கொடுத்து உதவிய திரவியம் ஒரு பங்கானால் அச்சித்திரத்தின் கிரயம் ஐம்பது பங்கென மதிக்கலாம்.

அந்தத் தைரியசாலி துன்பத்திலும் [illegible]ப்பட்டு உழைத்துக் காதலுடன் விஷய விசாரணை செய்துகொண்டிருந்தான். பின்னும் மேலான விஷயங்களில் நாட்டம் வைத்து விவரணமாக வித்தை பயில நினைத்து ப்ளாரென்ஸுக்கும் வெனிஸுக்கும் போனான். நெஞ்சறிய நேர்மையாக அவன் உழை

த்த உழைப்பின் பயனாகிய பெருஞ் சித்திரங்கள் பல தொடர்ச்சியாகப் பிரசித்தப்பட்டன. முதலிற் பிரசுரமானது "ஜர்மானிகஸ் மரணம்" அதை அடுத்து வந்தவை "அவைபைதுபூசை", "பூதாயிதாஸ் எம்பாடு", "மன்னு", "ஸெபடயின் மாதர் சோரம்".

எத்தனைதான் சித்திரங்களை இணக்கமாய் அமைத்தும், பௌஸின் விரைவிற் கீர்த்தியடைந்தவன் ஆகவில்லை. அடக்கமாய்த் தன் பாட்டில் இருப்பது அவன் பிறவிக்குணம். நாலு பெயர் கூடும் இடத்தில் அவன் தலை காட்டான். ஊர் உலகம் அவனை அத்தனையாகச் சித்திரகனென்றல்ல, தீர்க்க சிந்தனையுள்ளவனென்று கொண்டாடும். சித்திரம் எழுதா வேளையில் அவன் அப்பால் எழுதத் தொடங்கும் சித்திரங்களின் தாற்பரியத்தை நீள நினைத்துக்கொண்டு காட்டகத்தில் தன்னந்தனியே நெடுந்தூரம் போவான். ரோமாபுரியில் இறங்கியிருக்கும்பொழுது அங்கவனுக்கு இஷ்டர்கள் ஆகக் கொஞ்சம் பெயர்தான். அவர்களில் ஒருவன் க்லாட் லொரேன். சிலவேளை பௌஸின் அவனுடன் ஒரு ஆலயத்தின் உப்பரிகை மேல் வெகு நாழிகைநேரம் வித்தையையும் பூர்வ சித்திரங்களின் கைத்திறம் திறமின்மையையும்பற்றி வார்த்தையாடிக்கொண்டிருப்பான். ரோமை நகரெங்கும் விகாரமற்று ஒரு கண்ட சீராகவும் அமைதியாகவும் இருந்ததே. இந்த இயற்கை அவன் மனதிற்கு ஏற்கும் இயற்கையாயது. காரியக்கோர பிரயோகத்தால் மித ஜீவனத்திற்கு வருவழி உண்டாக்கிக்கொள்ளக் கூடுமெனில், அந்நகரை விட்டு விலக அவனுக்கு மனமே இல்லை.

ஆனாலும் அவன் பெயர் பிரான்ஸ் ராஜனுக்கு அப்பாலும் எட்டியது. பரிஸ் நகரத்திற்குத் திரும்பி வரும்படி அவனுக்கு அநேகந்தரம் எழுதினார்கள், அரண்மனைச் சித்திரகர் தலைவனாயிருக்கும்படி அவனைக் கேட்டார்கள். முதலில் அவன் இருமனமாயிருந்தான்; "குணமது கைவிடேல்"

எனப் பொருள் தரும் இத்தாலிய பழமொழி ஒன்றை எடுத்துரைத்து, நான் பதினைந்து வருஷ காலம் ரோமாபுரியில் வாசமாயிருந்து இங்கொரு பெண்ணை மணம் புரிந்தேன். இருக்குமளவும் இங்கேதானே நிலைக்குடியாயிருந்து இறந்துபோவது எனது ஆசை என்று சொன்னான். மீளவும் அவனைத் தூண்டினார்கள். அதற்கு அவன் சம்மதித்துப் பரீஸ் நகருக்குத் திரும்பினான். இங்குள்ள சித்திரக்காரருக்கு அவனைக் காணவும் மிகு மாற்சரியம் மூண்டது. ஆனதுபற்றி அவன் மீண்டும் ரோமைக்குப் போய்விட விரும்பினான். பரீஸில் இருக்கும்பொழுது, "அர்ச்சிய சிஷ்ட ஸாவியர்" "ஞான ஸ்நானம்," "கடை இராப்போஜனம்" எனும் அரிய சித்திரங்களை அவன் எழுதினான். அவன் இடையறாது சித்திரம் எழுதியவண்ணமாயிருப்பான். ஆரம்பத்தில் அவன் எதைக் கேட்டாலும் எழுதிக் கொடுப்பான். அவன் எழுதிய சித்திரங்கள் சில அரசன் புஸ்தகங்களுக்கு முன்முகபடம், பித்திகைப் பலகணிப்படம், கம்பளச்சித்திரம் இவைகளே. பின்னிட்டு அவனை ஏககாலத்தில் பல வேலை செய்யச் சொல்லும்பொழுது, அவன் தடுத்து வழக்காடுவான். ம. டி. சாந்திலூப்பிற்கு அவன் ஒரு முறை இடித்துரைத்தது இது:—"முன்முகச்சித்திரம், கன்னி ஓவியம், லொந்துலூவித் திருச்சபைப்படம், சித்திர கூடத்திற்குரிய பற்பல சித்திரங்கள், அரண்மனைக் கம்பளச்சித்திரம் இவை எல்லாம் ஏக காலத்திற் செய்ய என்றால் ஆகாது. உள்ளதெல்லாம் கூடி எனக்கு இரு கையும் பலம் குன்றிய ஒரு சிரமுந்தானே. எனக்குக் கைத்துணை அமைவதும் அசாத்தியம். என் வேலையிற் சிறிதை மற்றொருவன் செய்து என் சுமையைச் சற்று லெகுவாக்குவதும் கூடாது".

அவன் சித்திரியைக் கண்டு சித்திரகர் வெகு பெயர் அவனுக்குத் தொண்டாட்டம் செய்தார்கள். அவர்களோடு இதம் சொல்லி உறவாட அவனால் மாளவில்லை. ஆனதன்மையால் பரீஸ் நகரத்தில் உழைக்கத் தொடங்கி இரண்டு வருஷம்

ஆகுமுன் அவன் ரோமைக்குத் திரும்பத் தீர்மானித்தான். அங்கே போய்ச் சேர்ந்து பின்ஷியோ குன்றில் தன் சிறு குடிசையில் வாசஞ்செய்து பெருவாழ்வைத் தவிர்த்துப் பிரசித்தியை நாடாமல் அடக்கமாயிருந்து கற்ற துறையைச் சாங்காலம் ஆமளவும் கையாடி வந்தான். அவனை வருத்திய ரோகத்தால் அவன் பட்ட பாடு மிகுதி. கருத்தைக் கல்வியில் செலுத்தி விற்பத்தியால் உயர் பதம் பெற விடாது முயன்று வியாதி உபத்திரவத்தை ஒருவாறு மறந்தான். "முதிர் பருவம் வந்து அமுக்கவும், பின்னும் அதிகம் கற்றுத் தேறி வித்தியா சம்பன்னனாகும் அபிலாசை எனும் தீ எனக்குள் மேலுமேலும் பற்றி எரிகின்றது" என்று அவன் மொழிந்தான். இவ்வாறு உழைத்து உழன்று வருந்தி அவன் அந்தியகாலம் கழிந்தது. அவனுக்கு மக்கள் இல்லை. மனைவி இறந்துபோனாள். உற்றார் உறவரும் போய்விட்டார்கள். ஆகவே விருத்ததசையில் ரோமையில் எங்கும் நிறைந்துள்ள பிரேதாலயங்களைக் கண்டு கண்ணாறக் காணும் உரியர் ஆருமற்றுத் தன்னந்தனியே இருந்து, 1665-ம் ஆண்டு இறந்தான். அவன் காலத்தில் தேடி வைத்திருந்த திரவியம் 2500-ரூபாய். அதை அந்நிலையில் உள்ள தன் சுற்றத்தார்க்கு மானசாதனம் எழுதிவைத்தான். மனுக்குலத்தார்க்குஅவன் வைத்துப்போன சொத்து புத்தி சூக்ஷமத்தால் சிருஷ்டித்த விந்தையான சித்திரங்களே.

பின்னிட்டு இருந்தவர்களில் இவனைப்போலும் உன்னத மதியுள்ள சித்திரவித்தகன் ஏரி ஷெப்பர் (Ary Scheffer). அவன் பிறப்பிடம் டோர்ட்ரெக்ட்; தந்தை ஜர்மானிய வித்தகன் ஒருவன். சித்திர வித்தகனுக்குப் புத்திரனாகப் பிறந்ததனால், சித்திரம் எழுதவும் வர்ணம் கொடுக்கவும் திறப்பாய் வருமென்று அபிப்பிராயமாயிருக்கும்பொழுதே கண்டு பெற்றோர் இத்துறையில் அவனுக்கு ஆசை புகட்டினார்கள். இளைஞனாயிருக்கும்பொழுதே தந்தை இறந்துபோக, தாய்

அற்று ஏழையாயிருந்தும், மைந்தனுக்கு வளம்பெறக் கல்வி கற்பிக்க வாய்க்குமென்று குடும்பத்தோடே பாரிஸ் நகரத்திற்குப் போய்விட நிர்ணயித்தாள். போய் இளைஞனை கெரின் எனும் சித்திரிகனிடத்தில் வித்தை பயில வைத்தாள். வேறு நினைவற்று வித்தை பயின்றுகொண்டுவர அவன் தாய் என்ன சீமாட்டியா — அல்லவே. முன்னமே தன் வசமுள்ள சிறிது பணிதிகளை விற்று வாயை வயிற்றை ஒறுத்து மற்றப் பிள்ளைகளைப் பள்ளிக்கு வைத்திருந்தாள். இதை எண்ணாது ஆரி என்பவன் நிர்விசாரமாயிருப்பானோ — அவனுக்கும் பருவமும் பதினெட்டு ஆயிற்று. தன்மட்டில் குடும்ப சம்ரக்ஷணைக்காகக் கைப்பாடுபட்டுத் தாயாருக்குத் துணை நிற்க விரும்பி எளிதில் அமையத் தக்க சித்திரங்கள் எழுதி விற்க ஆரம்பித்தான். எழுத எழுதச் சித்திரம் எல்லாம் மிக விலைக்கு விற்றுப்போயின. அவன் பிரதிமைகள் சித்திரிக்கவும் பயின்றான் — பயிலப் பயிலக் கையும் திருந்தியது, உழைப்பிற்குத் தக்க ஊதியமும் கிடைத்தது. வரவர அவன் சித்திரம் எழுதுவதிலும், வர்ணம் இடுவதிலும், வர்ணம் சேர்ப்பதிலும் தேறினான். "ஞான ஸ்நாந விவரம்" எனும் படம் அமைந்த காலத்தை அவன் சரித்திரத்தில் நூதன காலாரம்பம் என்று சொல்லலாம். அன்று தொட்டு எழுதிய சித்திரம் அனைத்தும் ஒன்றுக்கொன்று விசித்திரமாய் அமைந்தன. "பௌலஸ்து", "ரிமினி ப்ரான்ஸிஸ்கா", "இலேசம் தீர்க்கும் கிறிஸ்து", "சுத்த மாதா", "அர்ச்சியசிஷ்ட மோனிகாவும் அர்ச்சியசிஷ்ட ஔகஸ்தினும்" முதலிய அபூர்வ சித்திரங்கள் வெளிவரவும் அவன் பிரக்கியாதி உச்சத்திற்கு வந்தது.

ஷெப்பரைக் குறித்து மெஸ். க்ரோத் மொழிந்தது:—"ப்ரான்ஸிஸ்கா" எனும் சித்திரம் அமைக்க ஷெப்பருக்கு அபரிமிதமான உழைப்பும், யூகையும், அனுமானமும் சென்றிருக்கும். மர்மம் இது, சித்திர வித்தையில் அவன் கற்றது கிஞ்சித்து. அதனால் இயற்கையறிவு வலிமை ஒன்றையே துணைக்

கொண்டு அவன் சித்திர வித்தை எனும் செங்குத்துமலை ஏறும்படி லபித்தது. வேறு மார்க்கம் இல்லை. இப்படியே செய்தொழிலில் கையும் சித்திர வித்தையில் மனமும் பிரவர்த்தித்தன. அவன் கையனம் அமையும்படி பற்பல விதங்களாய்ப் பயின்று பார்ப்பான்; வர்ணம் இப்படி வெவ்வேறு பரீக்ஷைகள் செய்து பார்ப்பான். ஒருகால் சித்திரித்ததை உதவாதென்று கலைத்துக் கலைத்து அலுப்புற்று ஆர்ந்து அமர்ந்து பலதரம் சித்திரித்துக்கொண்டிருப்பான். ஆனாலும் அவனுக்குக் கல்வித் தெளிவு இல்லாத குறைக்கு அவன் இயற்கையறிவு ஒருவாறு தகுதியான ஈடாயிருந்தது. நெறிகுறி உடர்ந்து பிறர் துயர் துக்கத்தை உள்ளாழ்ந்து உணரும் இயற்கை அமைந்ததனால் அதன் துணையைச் சார்ந்து தொழிலினையால் பிறர் மனதைக் கவரத் தக்க நிபுணன் ஆனான்.

ஹைப்பர் மிக வியந்து சம்மானித்த சித்திரவித்தகன் ஒருவன் ப்ளாக்ஸ்மன். இஃதுடன் ஒருவனுக்கு ஒரு சமயத்தில் ஹைப்பர் "நான் 'ப்ரான்ஸிஸ்கா' சித்திரம் அமைக்க உபாயம் சூழும்பொழுது எவன் ஒருவன் எழுதிய சித்திரத்தையேனும் பார்த்து நெஞ்சறிய யுக்தி சொல்லியிருப்பேனாகில், அது ப்ளாக்ஸ்மன் எழுதிய ஒரு படத்தைக் கண்டே" என மொழிந்தான். ஜான் ப்ளாக்ஸ்மன் (John Flaxman) காவென்ட் கார்டனில் புதுத் தெரு எனப் பெயர் வழங்கிய வீதியில் இருந்து சுண்ணச்சாந்துப் பிரதிமை செய்து விற்ற ஒருவன் மகன். சிறுவனாயிருக்கும்பொழுது அவன் தேகம் மிகவும் பலஹீனமாயிருந்தது. அவனைத் தகப்பனுடைய கடையில் தலையாயிற்பீடத்தின் பின்னிருக்கில் தலையணை விட்டு உட்கார வைத்திருப்பார்கள். உட்கார்ந்து சித்திரம் எழுதியும் புஸ்தகம் வாசித்தும் பொழுது போக்குவான். இது அவன் மனதிற்கு இனிய பாங்கு. பரோபகாரியாகிய மெஸ். மத்தியூஸ் போந்தவர் ஒரு நாள் அந்தக் கடைக்குப் போனபொழுது அச்சிறுவன் பன்னிப் பன்னி ஏதோ ஒரு புஸ்தகம் வாசிக்கக் கண்டு அது என்ன புஸ்தகம் என்று கே

ட்டார். அது அற்ப விலைக்கு நான் ஒரு கடையில் கண்டு வாங்கிக் கொடுத்த கொர்னீலியஸ் நீப்பாஸ் எனும் புஸ்தகம் என்று அவன் தகப்பன் சொன்னான். அது கேட்டு அக்குல மகன் சிறுவனுடன் சிறிது சம்பாஷித்து, இது உனக்கு வாசிக்க ஏற்கும் புஸ்தகமல்ல; நான் ஒன்று கொண்டுவந்து தருவேன் என்று சொல்லிப் போய்விட்டார். மற்றுநாள் ஹோமர், டான் க்விகஸ்த எனும் கவிவாணர்கள் இயற்றிய புஸ்தகங்களின் மொழி பெயர்ப்பைக் கொண்டுபோய்க் கொடுத்தார். சிறுவன் ஆவலோடு வாங்கி வாசிக்கத் தொடங்கினான். வாசிக்க வாசிக்க, ஹோமர் காவியத்தில் ஜீவகளையுடன் விளங்கிய வீரியத்தால் அவன் இதயம் பூரிக்க, அகில்லீஸ், அஜாக்ஸ் என்பவர்களின் பாவனையாகச் சுண்ணச்சாந்தில் செய்து கடைப் பலகைத்தட்டில் வைத்திருந்த பிரதிமைகளைக் கண்டு, அம்மகத்தான சுத்தவீரர் உருவைத் தானும் சர்வாலங்காரத்துடன் உபாயம் சூழ்ந்து சித்திரிக்க வேண்டுமெனும் ஆசைப்பெருக்கம் அவன் உள்ளத்திற் குடிகொண்டது.

ஆதியில் அவன் எழுதிய சித்திரங்கள் பணிக்காய் அமையவில்லை, பரும்படியாயிருந்தன. இளமையிற் கையறியா மக்கள் செய்வதெல்லாம் சீரழிவது இயற்கைதானே. மைந்தன் எழுதிய சித்திரங்களைப் பார்க்கப் பார்க்கத் தந்தைக்குப் பெருமை உண்டாயிற்று. அவைகளிற் சிலவற்றை அவன் ஒரு நாள் அங்கே போன பொரபீலியாக் எனும் சித்திரகனுக்குக் காட்டினான், கண்டு அவன் சீச்சீ என்று முகத்தைத் திருப்பிக்கொண்டான். ஆனாலும் என்ன, மா இருந்தால் பணிகாரம் ஆகாதா; தொழில்முயற்சியும் பொறுமையும் நிறைந்துள்ள அச்சிறுவனுக்கு அச்சம் என்ன. அவன் இடையறாது புஸ்தகம் வாசிப்பதும் சித்திரம் எழுதுவதுமே மணியமாயிருந்தான். பின்பு அவன் தன் இளமதியை நற்சாந்து, மெழுகு, களிமண் இவற்றில் பிரதிமை செய்வதிற் செலுத்திப்பார்த்தான். ஆதியில் அவன் செய்த பிரதிமை

கள் இன்றளவும் பதனமாய் வைத்திருக்கிறார்கள். இவ்வாறு அவைகளைச் சூதானமாய் வைத்திருப்பது அத்தனை விசித்திரமானவைகளென்றல்ல, பதைப்பின்றி இயற்கை விவேகம் மிகுந்துள்ள இளைஞன் ஒருவன் ஆதியிற் செய்த தளரா முயற்சித்திறம் இத்தன்மையதென்று காண்பவர்கள் கண்டு அதிசயிக்கும்பொருட்டு. அவ்விளைஞன் நடக்க வெகு நாட் சென்றது. அவன் கக்கதண்டம் பிடித்துக் காலைத் தாங்கித்தாங்கி எடுத்து வைத்து நடந்து பழகினான். காலில் பலம் ஏறஏறக் கோலைப் போட்டுவிட்டு நடக்கத் தொடங்கினான்.

உள்ளப் பசையுள்ள மத்யூஸ்துரை அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் வைத்திருந்தார். அங்கவர் மனைவி ஹோமர் மில்த்தன் எனும் கவிவாணர் இயற்றிய காவியங்களை அவனுக்குத் தெளிய உணர்த்தினார். அவன் வீட்டில் இருந்து தன் முயற்சித்துணையால் கிரீக், லத்தீன் பாஷைகளும் கற்றுக்கொண்டுவந்தான். இவ்விரு பாஷைகளை அக்குலமகன் குலமகள் இருவரும் அவனுக்குச் சிறிது கற்பித்தார்கள். இளைப்புப் பதைப்பற முயலும் முயற்சித் திறத்தால் சித்திர வித்தையில் அவன் கை வெகு நன்றாய்த் திருந்தியது. அதறிந்து ஒரு பெருமாட்டி ஹோமர் காவிய வரலாறுகளைக் குறிப்பிக்கும் சித்திரம் ஆறு எழுதிக்கொடுக்க உத்தரவு செய்தார். இதுதான் பிறர் சிரயம் பொருந்தி அவனைக்கொண்டு எழுதுவித்த முதற் சித்திரம்! அவன் வாழ்நாளெல்லாம் அவனுக்கு இதுபோலக் கொண்டாட்டம் மற்றொன்று உண்டா! கீர்த்திப் பிரதாபனாக நாடி உழைக்கும் சித்திரகனுக்கு ஆதியில் அமரும் வேலை அரிதிற்கு அரிதாகத் தோன்றும். வைத்தியனுக்கு முதல்முதல் அகப்படும் கூலியும், வியாபாரிக்கு ஆதியில் கையேறும் கட்டணமும், சட்ட நிருபனுக்குக் கன்னிப் பிரசங்கமும், பாடகனுக்கு முதல்முதல் சபையேறிப் பாடும் பாட்டும், கிரந்தகர்த்தனுக்கு ஆதிகிரந்தமும் அத்தனை முக்கியமல்ல. அவ்

வாலிபன் மேற்குறித்த வேலையை வினாடி நேரமும் தாமசமின்றிச் செய்யத் தொடங்கி விரைவிற் பணிக்காய் முடித்துக் கொடுத்தான். கொடுக்கவே வேலைக்குத் தக்க கூலியும் கிடைத்தது, கைத்திறமைக்கு உரிய புகழ்ச்சியும் உண்டாயிற்று.

பதினைந்து பருவத்தில் ப்லாக்ஸ்மன் ராஜ வித்யாசாலையில் பிரவேசித்தான். அவன் சற்றுச் சடைக்கோழையானாலும், வித்தியார்த்திகளுக்குள் அவன் பெயர் விரைவிற் பிரபலப்பட்டது. அவன் அரியன செய்து பெரியவன் ஆவானென்று எல்லாரும் எண்ணமிட்டிருந்தார்கள். அவர்கள் எண்ணியபடி தவறாமற் பலித்தது. பதினைந்து வயசில் அவனுக்கு வெளிப்பதக்க வெகுமதி கிடைத்தது. அடுத்த வருஷம் அவன் பொற்பதக்கத்தில் நாட்டம் வைத்திருந்தான். வித்தியா சமர்த்திலும் முயற்சியிலும் அவனை மிஞ்சினவர்கள் இல்லை. அதனால் பதக்கம் அவனுக்கே அமையுமென்று எல்லாரும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் அவர்கள் சொல் வியர்த்தமாகி, மற்றொரு வித்தியார்த்திக்குப் பொற்பதக்கம் கிடைத்தது. அதற்குப்பின் அவ்வித்தியார்த்தி பெயர் பிரசித்தப்படவேயில்லை. ப்லாக்ஸ்மன் பொற்பதக்கம் இழந்தது அவனுக்கு அத்தனையும் அனுகூலமாகவே முடிந்தது. நிர்ணய சித்தனுக்கு அபஜயத்தால் உண்டாம் மனத்தளர்வு நீடித்திராது. உள்ள மனவலி முழுதும் வெளிவந்து உதவும். "சமயம் தந்து என் சமர்த்தைப் பாரும். வித்தியாதிகாரிகள் திவ்யமென்று பாராட்டி அங்கிகரித்துக்கொள்ளத் தக்கவைகளை இன்னம் சாதிக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்று ப்லாக்ஸ்மன் பிதாவுக்குச் சொன்னான். அவன் பின்னும் ஒரு பங்கு அதிக பிரயத்தனம் செய்தான். எவ்வளவு வருத்தமும் பாராட்டி இடையவில்லை, இடையறாது சித்திரம் விந்தை விந்தையாய் எழுதினான், பிரதிமைகள் செய்தான், இந்தச் சாதனையால் அவனுக்குத் தீவிரமாயல்ல, சற்றுத் தாமசத்தில்

நாளொரு மேனியாகத் தெளிவு பிறந்தது. இதன் இடையில் அவன் வீட்டார் தரித்திரதசை அகன்றதென்று ஏகம் பிடித்திருந்தார்கள்; சன்னக்காரைப் பிரதிமை வியாபாரம் செய்து வரும் ஊதியம் அவர்கள் ஜீவனத்திற்குப் பற்றாது. இதை நினைத்து அவ்விளைஞன் தன் விருப்பைத் தன் சுகத்தை மனம் பொருந்தி மறந்து, வித்தை பயிலும் நேரத்தில் சிறிது ஒழித்து, எளிய சில்லறை வேலைகளில் பிதாவிற்குக் கைத்துணையாக உழைத்துக்கொண்டிருந்தான். அவன் கொல்லறு கையாளும்படி நேராமல் காவியத்தை ஒரு பக்கத்தில் வைத்திட்டான். தன் வீட்டாரைப் போஷித்துத் தாங்கி மிடி தவிர்க்கும்பொருட்டுத் தரம் பாராமல் கிடைக்கிய கைத்தொழில் செய்ய அவன் சித்தம் வணங்கியது. கஷ்டப்பட்டு இவ் வித்தை பழக வெகு நாட் சென்றது. சென்றாலும் என்ன, அது அவனுக்கு அனுகூலமாகவே முடிந்தது. விடாது உழைக்கும் சாதனை அவனுக்குத் தனி ஒரு பண்பாடாயிற்று. பதைப்பறப் பொறுத்து உழைக்கும் நியமத்தை அவனுக்கு நன்றாய்ப் பண்பட்டது. இந்தச் சிறுமை அவனுக்கு மலையைக் கல்லி எலி பிடிப்பதுபோல இருந்தாலும் இருக்கும்; ஆனால் இதனால் அத்தனையும் வேஷமமே தவிர மற்றப்படி அல்ல.

இளைஞனாகிய ப்லாக்ஸ்மன் சித்திர வித்தியாசதுரன் என்னும் சத்தம் ஜோசையா வெட்ஜ்வுட் வரையில் எட்டியிருந்தது அவன் பாக்கியந்தான். அந்த வெட்ஜ்வுட் தான் தனம் தாதனமாகப் பீங்கானும் மட்பாண்டமும் வினைய மாதிரி கற்பிக்கும்படி ப்லாக்ஸ்மனைத் தேடிப் பிடித்தான். அவனைப்போலும் நிபுணனுக்கு அத்தொழில் இழிதொழிலாகத் தோன்றினும் தோன்றுமே - ஆனால் அது இழிதொழிலே அல்ல. சாமானிய தேயிலைக்குடிநீர்ப்பாண்டமானாலும் சரி, குண்டிகையானாலும் சரி அதை விசித்திரமாகப் புனைந்து உண்டாக்குவதும் சித்திர வித்தகருக்குரிய தொழிலே. நித்தமும் மனுஷர் கையாடிப் போஜனகாலத்தில் கண்ணெதி-

ரோகாணும் சின்னமுதலிய கலைகளைப் பார்த்து அறியாத சூக்ஷமம் எத்தனையோ யாவரும் அறியலாம்; அறிந்து அவர்களுக்கு உயர்ந்த சாதனை உண்டாகுதலும் ஆகலாம். சித்திரவித்தையை மெத்தவும் சிரத்தையாய்ப் பயின்ற ஒருவன் வெகு கஷ்டப்பட்டு விசித்திரமாய் எழுதி நாற்பது ஐம்பதினாயிரம் ரூபாய்க்கு விற்கும் அரிய சித்திரத்தைத் திரவியசம்பன்னன் வாங்கித் தன் சித்திரசாலையத்தில் வேடிக்கையாய் வைத்துப் பார்ப்பான் - ஊர் உலகம் அதைக் கண்டு களிகூரச் சந்தர்ப்பமில்லாது. அவர்களுக்கு அதனால் பயன் ஒன்றும் இல்லை. மேலே குறிப்பித்த தேயிலைக்குடிநீர்ப் பாண்டம், ஜலபாத்திரமுதலிய வஸ்துக்களை ஆதனமாகச் செய்து விற்றால் அவை யாவருக்கும் அனுதினமும் உபயோகப்படும். இவ்வாறு அவ்வித்தகன் சர்வ ஜனோபகாரியாவான். வெட்ஜ்வுட் காலத்திற்குமுன் பீங்கான்களிலும் கற்பாண்டங்களிலும் விளங்கிய பிரதிமைகள் கோரமானவைகளாயிருந்தன. வெட்ஜ்வுட் எவ்விதமும் அவைகளைத் திருத்தவேண்டுமென்று நினைத்திருந்தான். அவன் நினைத்தபடி முடிக்க ப்ளாக்ஸ்மன் தன்னால் ஆம் வகை அனைத்தும் செய்தான். அப்போதைப்போது அவன் விதவிதமான பாண்டங்களைச் செய்து கொடுப்பான் - படங்களைச் சித்திரித்துக் கொடுப்பான். முக்கியமாய்ப் பூர்வ கவிகளிலும் இதிகாசங்களிலும் கண்ட வரலாறுகளைக் குறிப்பிக்கும் சித்திரங்களை எழுதிக் காட்டுவான். அவற்றுள் அனேகம் இன்றளவும் அழியாதிருக்கின்றன. அவைகளில் சில அக்ஷத்திலும் சுத்தத்திலும் பின்னிட்டு அவன் வெண்சிலைப்பிரதிமைகள் செய்யச் சித்திரித்த படங்களுக்கு நிகரான சித்திரங்கள். பாத்திரங்கள் எங்கும் பெயர் போனவைகள். அதிசயவஸ்து சாலைகளிலும், அதிசயவிநோதர்கள் சேகரித்து வைத்திருக்கும் சித்திரகணத்திலும் அப்பாத்திரங்களைக் காணலாம். இவைகளைப் பார்த்து அவன் கல்லுரு அமைக்கும் மாதிரி பயின்று அம்மாதிரியைத் தன் புத்திக்குத் தோன்றியவாறு சிங்காரி

ந்தான். அவன் காலத்தில் அத்தேனே நகரத்தில் வழங்கும் பாண்டங்களைக் குறிப்பிக்கிற சித்திரபுஸ்தகம் ஒன்று ஸ்டூவர்ட் என்பவனால் இயற்றிப் பிரசுரஞ்செய்யப்பட்டது. அதில் அங்கே வழங்கும் ஸ்வச்சரூபமுள்ள கலங்களைக் கண்டு மாதிரி விசற்பம் வேண்டுமெனிற்கு அறிந்து உத்தமமானவைகளை அநுசரித்து அந்தமும் அழகும் பெருக விசித்த வித்தையாக உருவிகற்பம் செய்தான். தான் செய்து கொண்டுவரும் வேலை தேசத்தில் வித்தையை அபிவிர்த்திபிக்கும் மஹா இத்தியமென்று பிலாக்ஸ்மனுக்கு அப்பொழுது தான் தெரிந்தது. அவன் இளமையில் இத்துறையை வருத்திக் கற்றதனால் அவனுக்கு வளம்பெற அமைந்த நல்வரம் ஒன்றல்ல. அழகைக் கண்டு விரும்பிப் பயிலும் இயற்கை நன்றாய்ப் பண்பட்டது - தன் சித்திர வேலையைக் காட்டி அதன்மூலமாய்ப் பிறக்கும் அவ்வித்தையில் ஆசை புகட்ட வல்லவனானான் — ஏராள அவனுக்கு அளவறத் திரவியம் சேர்ந்தது - அதனால் அவன் சினேகனும் உபகாரியுமாகிய பிளேக்கூட்டும் கிருபைசெய்வானான். இத்தனை நற்பயனைத் தந்தது இளமையில் உழைத்த உழைப்பென்று அவன் பிற்பருவத்தில் எக்களித்துச் சொல்வான்.

அப்பால் பருவம் இருபத்தேழு ஆனபொழுது, 1782-ம் ஆண்டு பிதா வீட்டை விட்டு நீங்கி, லெஸ்டர் நகரத்தில் காரட்டர் வீதியில் சிறு வீடு ஒன்றும் சிற்பசாலை ஒன்றும் குடிக்கூலிக்கு அமர்த்தி வாசஞ்செய்து மணம் புரிந்தான். மணமகள் பெயர் ஆன் டென்மன். அம்மனைவி முகக் கிளர்ச்சியும் புத்தித் தெளிவும் உதாரமதியுமுள்ள உத்தமி. அவ்வுத்தமி தனக்கு வாழ்க்கைப்பட்டதனால் பின்னும் ஒரு பங்கு அதிக உற்சாகத்தோடு உழைக்கமாட்டுவேனென்று அவன் மனம் தேறினான். அவனைப்போல் அவன் மனைவிக்கும் செய்யுளிலும் சித்திர வித்தையிலும் பிடிமானம் உண்டு. அன்றியும் அந்தப் பாக்கியவதி தன் கணவனு

டைய அரிய விவேகத்தை வியந்து ஆனந்தாவேசமடைந்தவள். மர்மம் இவ்வாறிருக்க, பிரமசாரியாயிருந்த ஸ்ரீ ஜாஷுவா ரேனல்ட்ஸ் ப்லாக்ஸ்மனை மணம் செய்து சில தினத்திற்குள் கண்டு, "மெய்தானோ ப்லாக்ஸ்மன்; உனக்கு விவாகம் அமைந்ததென்று செய்தி கேட்டேன். ஒன்று சொல்லக் கேள் - இது மெய்யானால், இனி ஏது. உன் சித்திர நைபுண்யத்திற்கு நாசகாலம் வந்திட்டது" என மொழிய, அது கேட்டு ப்லாக்ஸ்மன் நேரே வீட்டுக்குப் போய், மனைவி பக்கத்தில் உட்கார்ந்து, அவள் கையைப் பற்றி, "பெண்ணே, என் சித்திர நைபுண்யத்திற்கு நாசகாலம் வந்திட்டது கேட்டையா?" எனச் சொல்ல, மனைவி, "என் பிராணநாதா, அதெப்படி? நாசகாலம் வந்த வகை என்ன? நாசம் செய்தவர் யாவர்?" என்று சிந்தாகுலித்துக் கேட்க, ப்லாக்ஸ்மன், "நாசம் இட்டியது தேவாலயத்தில் இருக்கும்பொழுது - நாசகாரணம் தூரம் தொலையினின்று வரவில்லை - உன்னாலேதான் நாசம் வந்தது" என மறுமொழி பகர்ந்தான். பின்பு வியாபகராகிய ஸ்ரீ யோஷுவா ரேனல்ட்ஸ் மொழிந்த லோகப் பிரசித்தமாயிருக்கும் அபிப்பிராயத்தை எடுத்துரைத்தான் - அது இது:—சித்திரத்தொழில் பயிலு மாணுக்கர் திறமையில் மிக்கோராக விரும்பில், உதயாதி அஸ்தமன பரியந்தம் தமது கருவி கரணம் அனைத்தையும் இத்துறை ஒன்றிலேயே செலுத்தவேண்டும். மேலும், ரோமாபுரியிலும், ப்லாரென்ஸிலும் ரப்பேல் - மிகேல் அஞ்ஜிலோ முதலிய நிபுணர்கள் அமைத்து வைத்திருக்கின்ற மகத்தான பிரதிமைகளைக் கருத்தைச் செலுத்திப் பார்த்துப் பயிலாதவன் சித்திரவித்தையில் வல்லவனாகான். பின்பு ப்லாக்ஸ்மன் தன் சிறு விரலை இழுத்துப் பிடித்துக்கொண்டு, "நான் சித்திரவித்தையில் வல்லவனாகாது விடுகிறதில்லை" எனப் பிரதிக்ஞை செய்தான். அது கேட்டு அவன் மனைவி "நீர் சித்திரவித்தையில் வல்லவராகத்தான் வேண்டும். வல்லவராதற்கு ரோமாபுரியைப் போய்ப் பாராமல் தீராதென்றால்

அங்கே போகவும் வேண்டும்" என மொழிந்தாள். "இதற்கு வகை என்ன?" என ப்லாக்ஸ்மன் வினவ, மனோகரமுள்ள மனைவி, "வருந்தி உழைத்து மிதச் செலவு செய்யும், ஜான் ப்லாக்ஸ்மனுடைய சித்திர நைபுண்யத்திற்கு ஆண்டென்மன் யமனாக வந்தானென்று உலகம் அறியும்படி ஒருபொழுதும் விடேன்" எனப் பிரதி உத்தரம் சொன்னாள். இவ்வாறே, செலவிற்குத் திரவியம் சேர்ந்தவுடன் ரோமாபுரிக்குப் பிரயாணப்படுவதென்று நாயகன் நாயகி இருவரும் ஒரு மனதாய் அறுதியிட்டார்கள். சொல் தவறாமல் நான் ரோமாபுரிக்குப் போய் எவனுக்கும் விவாகத்தில் பிரதிகூலமல்ல அனுகூலமென்று சபாசர்யகளுக்குத் திருஷ்டாந்தப்படுத்துவேன். சகி, நீயும் என்னொடு வரவேண்டும்" என ப்லாக்ஸ்மன் உறுதி சொன்னான்.

மனம் பொருந்திப் பரிவு கூர்ந்த மனோனன் மனாட்டி இருவரும் மேற் சொல்லிய வீதியில் அமைந்திய எளிய வீட்டில் இருந்துகொண்டு ஐந்து வருஷகாலம் இலேசமற்றுப் பொறுத்து உழைத்தார்கள். அவர்கள் கண்ணும் கருத்தும் ஆராய்தலமாகிய ரோமைப் பிரயாணத்தின்மீது நித்தமும் பிரவர்த்தித்திருந்தன. அது கணப்பொழுதும் அவர்கள் திருஷ்டிக்கு மறைந்திருக்கவில்லை. ஒரு காசும் வீணிற் செலவிடாமல் மிஞ்சின பணத்தைப் பிரயாணச் செலவிற்கென்று கைப்பிடி பத்திரமாய் வைத்திருந்தார்கள். தங்கள் கருத்தை அவர்கள் எவருக்கும் வெளியிடவில்லை. சித்திர வித்தியாபிவிர்த்தி சம்பந்தமாகத் திரவியசகாயம் கேட்கவுமில்லை. பதறாமற் பொறுத்து உழைத்து, நினைத்த கருமத்தை நெகிழவிடாமல் நிர்ணயித்தபடியிருந்து முடிக்கும் ஆசை ஒன்றே தமக்குத் தஞ்சமென மனம் தேறினார்கள். இக்காலத்தில் ப்லாக்ஸ்மன் நூதனமாக ஒன்றும் செய்யவில்லை. நூதனமாகப் பிரதிமை செய்துபார்க்கச் சலவைக் கல்லுக்கு வழி இல்லாதிருந்தான். அடிக்கடி அவனைக்கொண்டு ஞாபக சின்னப் பிரதிமைகள் செய்வித்தார்கள். அத

னால் வரும் ஊதியமே அவனுக்கு ஜீவனாதாரம். அவன் விட்டு விடாமல் வெட்ஜ்வுட்டுக்கு வேலை செய்துகொண்டிருந்தான். வேலை முடிய முடியக் கணக்குப் பார்த்துக் கூலி கொடுத்துவிடுவது வெட்ஜ்வுட்டின் பிரகிர்தி. நாலு விதத்திலும் அவன் நாளுக்குநாள் வாழ்வடைந்து கிலேசமற்றிருந்தான். பின்னுக்குப் பெருங்குடியாவான் எனத் தோன்றியது. இருந்த இடத்திலேயே மானியென்று எல்லாரும் அவன் பெயரில் லக்ஷியம் வைத்தார்கள். அதைத் தொட்டு ஏதல உத்தியோகமும் படிந்தது. ஸேன்ட் ஆன் எனும் கோவிற் பற்றுக் குடிகள் அவனைக் காவல்வரி சேர்த்து ஒப்பிக்கத் தெரிந்து நியமி செய்தார்கள். அவன் அங்கியில் தெறி பூட்டும் துவாரத்தில் மைப்புட்டி கட்டித் தொங்க, வரி வாங்கிக்கொண்டுவருவதை அடிக்கடி அங்குள்ளவர்கள் கண்டார்கள்.

இப்படி உழைத்துச் சேர்த்த திரவியம் திரண்டு தொகை ஏறவும், ப்லாக்ஸ்மனும் மனைவியும் ரோமைக்குப் பிரயாணப்பட்டார்கள். வழிகொண்டு க்ஷேமமாய்ப் போய்ச் சேர்ந்தவுடன் ப்லாக்ஸ்மன் தானாண்மையாய்த் தொழில் பயில ஆரம்பித்தான். அவன் மற்றுள்ள ஏழைச் சித்திரகாரரைப்போலப் பூர்வ பிரதிமைகளைப் பார்த்துச் சித்திரம் எழுதி விற்று வயிறு வளர்த்துவந்தான். இங்கிலாந்தினின்று ரோமைக்குப் போகும் பிரயாணிகள் ப்லாக்ஸ்மனுடைய சித்திரசாலையைத் தேடிப்பிடித்து அவனுக்கு வேலையிடுவார்கள். அங்கிருக்கும்பொழுதுதான் அவன் ஹோமர், எஸ்கிலஸ், டாண்ட் என்பவர்களைக் குறிப்பிக்கும் திவ்வியமான நூதன சித்திரங்களை எழுதினான். அவைகளுக்குக் கிடைத்த கிரயம் மிதம். ஒவ்வொன்றுக்கு ஆக ஏழரை ரூபாய். அதைத்தொட்டு அவன் மனம் இளக்காரிக்கவில்லை. அவன் மெய் வருந்தி உழைத்தது திரவியத்திற்கு மாத்திரமல்ல, திரவியத்திற்கும் சித்திர வித்தையிற் கைதேர்வதற்கும்

அவன் நூதனித்துச் சித்திரித்த ஓவியங்களின் அபூர்வ அந்தத்தைக் கண்டு கண்டு வெகு பெயர் அவனுக்கு அனுகூலிகளும் உபகாரிகளுமானார்கள்; இரயம் பொருந்தி அவனைக் கொண்டு சித்திரம் தீட்டுவித்தார்கள். ஒண்தாரிய புருஷரென்று லோகப்பிரசித்தரான தோமாஸ் ஹோப் துரைக்கு மன்மதன் பிரதிமையும், அரோரைய தேவி பிரதிமையும், பிரிஸ்தல் எர்ல் பிரபுவிற்கு ஆதமஸ் உக்கிரதேவி பிரதிமையும் அவன் எழுதிக் கொடுத்தான். அவன் சித்திர வித்தியாசாதுரியான விர்த்தியடைந்து அவதானமாய்க் கற்றுப் பண்பட்டபின் இங்கிலாந்திற்குத் திரும்பிப்போக எத்தனித்தான். அவன் இத்தாலியாவினின்று புறப்படுமுன் ப்ளோரன்ஸ், கரரா எனும் இடங்களில் ஏற்பட்டிருக்கும் சித்திர வித்தியாசங்கத்தார்கள் அவன் திறத்தை நயந்து வியந்து தங்கள் சங்கத்தின் அவயவமாக அவனைச் சேர்த்துக் கொண்டார்கள்.

அவன் போய்ச் சேருமுன் அவன் பிரக்கியாதி லண்டன் நகரத்தில் எட்டியது. சேர்ந்தபின் வேலை மிகு திரளாய் அமர்ந்தது. அவன் ரோமாபுரியில் இருக்கும்பொழுது மான்ஸ்பீல்ட் பிரபுவிற்கு ஞாபக சின்னப் பிரதிமை ஒன்று அமைக்கும்படி அவனுக்கு உத்தரவு செய்திருந்தார்கள். அந்தப் பிரதிமை மிகு நாணயமாய் அமைந்து அவன் பெயரை எங்கும் துலங்க விளக்கிற்று. அவன் லண்டன் நகரத்திற் போய்ச் சேர்ந்து சிறிது காலத்திற்குள் அந்தப் பிரதிமை வெஸ்ட் மின்ஸ்டர் தேவாலயத்தின் பக்ஷிரகத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அது ப்ளாக்ஸ்மனுடைய புத்தி சக்தி முதிர்ச்சியாகச் சாந்தம், சத்தியம், உக்கிரம் இம் மூன்றும் விளங்க மகத்துவ அலங்காரம் பொருந்தியிருக்கிறது. அந்நாளில் சித்திர வித்தையில் ஒப்பு உயர்வு இல்லாத கீர்த்திப்பிரதாபனாயிருந்த பாங்க்ஸ் அந்தப் பிரதிமையைக் கண்டு "இந்தக் குட்டி மனுஷன் நம் எல்லாரையும் வெ...

டித் தொலைக்கிறானே" எனப் பரிதபித்துக் கூறியது அதிசயமல்ல.

அரசனால் ஏற்பட்ட சித்திரவித்தியா சங்கத்தார் ஜன்ம தேசத்திற்கு ப்லாக்ஸ்மன் திரும்பிப்போய்ச் சேர்ந்த செய்தி கேட்டு, முக்கியமாய் அவன் கையால் உரு அமைந்த மானஸ்பீல்ட் பிரதிமையைக் கண்டு வியப்புற்று, தங்கள் சபையில் அவனைச் சேர்த்துக்கொள்ளப் பதைத்தார்கள். பின்பு வலியக் கேட்டுக்கொள்ளும்படி அவனைத் தூண்டி விட்டுச் சேர்த்துக்கொண்டார்கள். சேர்ந்து சிறிது காலம் சென்றபின் அவன் இயற்கை முழுதும் மாறித் தோன்றியது. காவெந்து தோட்டத்தில், புது வீதியில் சாந்துப் பிரதிமை செய்து விற்கும் தகப்பன் கடையில் பீடத்தின் மறைவில் இருந்து சித்திரவித்தையை பயிலத்தொடங்கிய சிறுவன் இப்பொழுது ராஜ வித்தியா சாலையில் கற்கும் மாணாக்கருக்குச் சித்திரவித்தை கற்பிக்கத்தக்க உன்னத விவேகமும் மேலான விற்பத்தியுமுள்ள பண்டிதனானான். அவ்வுயர் பதவிக்கு அவனிலும் சிறந்த யோக்கியனை எப்பொழுதும் கண்டதில்லை. பிறர் தூண்டாமல் தானாக முயன்று இறங்கிய துறையில் இளைக்காதுழைத்து மல்லாடித் தடையறுத்துத் தெளிந்தவனைப்போல அக்கலையைக் கற்பிக்க வல்லவன் இல்லையே.

நாட்டக் கிலேசமற்றுச் சிறந்து வாழ்ந்துவர ப்லாக்ஸ்மனுக்கு விருத்தகலை அடுத்தது. உயிர்க்குயிரான வாழ்க்கைத் துணைவி இறக்கவும் அவனுக்குத் தாங்கொணா அருந்துயர் உண்டாயிற்று. பின்னும் சில வருஷகாலம் அவன் பிழைத்திருந்தான். இக்காலத்தில் அவன் அமைத்த பிரதிமைகள் பலரும் கொண்டாடும் "அகில்லீஸ் வட்டணமும்" "மிகேல் எனும் மஹா தூதன் சாத்தானை ஜயித்த பாவனையும்". அவன் கைவேலைகளில் இவ்விரண்டுமே சிரேஷ்டமாயிருப்பினும் இருக்கும்.

சாந்த்ரி (Chantrey) என்பவன் இவனைப்போலல்ல, கல்வி
திண்ணியன்;— சற்றுத் தடுகுறும்பன், ஆனாலும் உள்ளப்
பகை மெத்தவும் உண்டு; பால்யத்தில் சேர்ந்த சங்கடங்களு
க்கு இடையாமல் கடைத்தேறியதைப்பற்றி ஏமாந்திருப்பது
அவன் இயற்கை. முக்கியமாய் ஸ்வாதீனன் எனும் அபிமா
னம் அவனுக்கு மெத்தவும் உண்டு. அவன் ஷெப்பீல்டுக்கு
கிட்டிய நார்ட்டன் கிராமத்தில் ஓர் எளிய குடியிற் பிறந்த
வன். சின்னஞ் சிறியனாயிருக்கையில் தந்தை இறந்துபோக,
அவன் தாய்க்குப் புனர்விவாகம் நடந்தது, பால் விற்று ஜீவ
னம் பண்ணுவது அவர்கள் குடும்பவிர்த்தி. பொதிக்கழுதை
செலுத்திக் கொண்டுபோய் ஷெப்பீல்ட் எனும் அயலூரிற்
பால் விற்று வரும்படி அச்சிறுவனைத் தாய் அனுப்புவாள்.
அவன் ஆரம்பத்திற் செய்த எளிய வேலை இது. அப்பால் இ
ழிவான இந்த நிலையினின்று அவன் வரவரத் தன் பலத்தால்
உயர்ந்து சித்திரவித்தையில் தேர்ந்த நிபுணனானான். மாற்
றுந் தகப்பனுக்கும் அவனுக்கும் ஒட்டவில்லை. அதனால் தாய்
அவனை ஷெப்பீல்டில் ஒரு பலசரக்குக் கடையில் வியாபா
ரஞ் செய்து பழக விட்டாள். அவ்வேலை அவன் மனதிற்குச்
சற்றும் இதமாயிருக்கவில்லை; ஆனாலும் செய்யாமல்
தீராது. இப்படி இருக்கையில் ஒரு நாள் வீதியிற் செல்லு
ம்பொழுது சித்திரவேலைக்காரன் ஒருவனுடைய கடைக்கு
ள்ளே பலகணிவாயிலாக எட்டிப் பார்த்தான். அங்கிருந்த
சிறந்து ஒளிரும் சித்திரங்கள் அவன் கண்ணைக் கவர்ந்தன.
தானும் செதுக்குவேலை பயின்று பிரபலனாக ஆவலித்து
வீட்டுக்குப் போய்த் தன் அபிப்பிராயத்தைச் சொல்லிப்
பலசரக்குக் கடைக்குப் போவதை நிறுத்திவிடக் கேட்டான்.
தாய் தந்தையர் சம்மதித்தார்கள். பின்பு அவன் ஏழு வரு
ஷத்திற்குப் பத்திரம் எழுதிக்கொடுத்துச் செதுக்குவேலை
யும் மூலாம் பூசும் வேலையும் நடந்துவரும் ஒரு தொழிற்சா
லையிற் சேர்ந்தான். அச்சாலைத் தலைவன் செய்யும் தொழில்
ஒன்றல்ல; மரப்பிரதிமை செதுக்குவதன்றி, சித்திரம் அச்

சிட்டு விற்பான், சாந்துப் பிரதிமைகளும் செய்துவிற்பான். சாந்திரி தாமசமின்றி விசேஷ முயற்சி செய்து மிகு ஊற்றத்துடன் இருதொழிலும் பயிலத் தொடங்கினான். ஒழிந்த வேளைகளில் எப்பொழுதும் அவன் மனதைச் சிதறவிடாமல் சித்திரம் எழுதி, பிரதிமைகள் செய்து விற்பத்தி அடைந்து கொண்டுவருவான். இரவிலும் வெகு நாழிகை நேரம் விழித்திருந்து வேலை செய்வான். தொழில் பழக எழுதிக் கொடுத்த காலம் நிறைவேறுமுன் இருபத்தொரு பருவத்தில் சித்திரவேலை செய்து பிழைக்க நினைந்து, தனக்கு வித்தை கற்பித்தவனுக்கு 500 - ரூபாய் கட்டி மேற்குறித்த உடன்படிக்கை நிர்ப்பந்தத்திற்கு விலகினான். அவனுக்குள்ள திரவியம் ஆகக்கூடி அம்மாத்திரந்தான். பின்பு கூடிய பிரயத்தனம் செய்து லந்தன் நகரத்திற்குப் போனான். புத்தியுள்ளவன் எங்கே போனாலும் புத்தியாய்த் தான் நடப்பான். லந்தனில் அவன் ஒரு சித்திரகனுக்குச் சகாயனாக அமர்ந்து, ஒழிந்த நேரத்தில் சித்திரம் எழுதவும் பிரதி செய்யவும் பயின்றுவந்தான். அவன் ஊருக்கூர் திரிந்து வேலை செய்துவரத் தொடங்கி ஆரம்பத்திற் செய்த வேலை ராஜர்ஸ் கவிராயருடைய போஜனாலய அலங்கிர்தம். பிற்காலத்தில் அவன் அவ்வாலயத்திற்கு விருந்தனாகப் போயிருந்து உபசாரனை பெற்றதும் உண்டு. அடி கவிராயர் வீட்டில் பந்தி போஜனத்திற்குப் போயிருக்கும் பெரிய மனுஷருக்கு அங்குள்ள சித்திர அலங்காரத்தைச் சுட்டி அது முதல் முதல் அமைந்த தன் கைத்தொழில் என்று களிகூர்ந்து சொல்வான்.

தொழில் முகாந்தரமாக லெப்பீல்டுக்குத் திரும்பிப்போயிருக்கையில் அவன் வங்கவேலினிச் சித்திரம், சிற்றுருவைதலச் சேர்க்கைச் சித்திரம் வேண்டுமவர்க்குச் செய்து கொடுக்கச் சித்தமாயிருப்பதாகப் பத்திரிகைகளில் பிரசித்தப்படுத்தினான். ஆரம்பத்தில் வங்கலேகினியால் எழுதிய ஓவியத்தைக் கத்தி முன் செய்து விற்கும் ஒருவன் பத்தரை

ரூபாய் கிரயம் கொடுத்து வாங்கினான். காதலைச் சோகசை யால் எழுதிய சித்திரத்திற்கு மிட்டாய்க் கடைக்காரன் ஒருவன் ஐம்பது ரூபாயும் செம்பு பாதரக்ஷை ஒரு சோடும் கொடுத்தான். ராஜ வித்தியா சாலையில் வித்தை பயிலும் படி அவன் மீளவும் விரைவில் லந்தன நகரத்திற்குத் திரும்பிப் போனான். மற்ற முறை அவன் [illegible]க்குப் போனபொழுது தன் ஊராரைப் பார்த்து வார்த்துவைகாயப் பிரதிமைகள் செய்தும் ஓவியம் சித்திரித்தும் கொடுப்ப தாக அறிக்கை செய்தான். அங்கிருந்து காலஞ்சென்று போன குரு ஒருவர்க்கு ஊரார் சொற்படி அவன் ஞாபக சின்னம் ஒன்று பூசித்துச் சிலைவடித்தான். அது சர்வ ஜன த்திற்கும் திருப்திகரமாயிருந்தது. லந்தன நகரவாசம் செய்கையில் ஒரு குதிரை லாயத்திற்கு மேன்மாடம் அவன் சித்திராலயம். அங்கிருந்து அவன் முதன்மையாய் அமைத்த பிரதிமையை முதல் முதல் அதிசயம் காட்டினான். அது சாந்தனின் பிரமாண்ட சிரம். சாந்திரியின வாழ்நாள் அந் தியில் அவன் சித்திராலயத்தில் இருட்டில் ஒருவர் உலாவும் பொழுது அந்தச் சென்னிப் பிரதிமையை ஒரு மூலையிற் கண்டு உற்றுப் பார்த்தார். பார்க்க, சித்திரகனுடைய சாந் திரி "நான் லந்தனுக்கு வந்து ஆதியிற் செய்தது இந்தத் தலை. கடிதக்குலைவா இட்டுக்கொண்டு இதை ஒரு உபரி மாடத்திற் செய்தேன். ராத்திரிகாலத்தில் நீடம் ஏற்ற மெழுகுவர்த்தி ஒன்றுக்கு அதிகம் வாங்கத் திக்கில்லை. ஆனதுபற்றி வர்த்தியைக் கொளுத்தி என் குல்லாயில் மாட் டிக்கொண்டு அந்த வெளிச்சத்தில் வேலைசெய்தேன். என் விடத்திற்குப் போனாலும் வெளிச்சம் என்னோடு சென்றது" என்றுரைத்தான். ராஜ வித்தியாசாலையில் சித்திரோற்சவம் நடந்த சமயத்தில் இந்தத் தலையை ப்லாக்ஸ்மன் கண்டு வியப்புற்று, கிரீனிச் ஜல ராணுவவீரர் அடைக்கலாலயத் தில் வைக்கும்படி புத்தமரக்கல தளபதிகள் நால்வர் சா

யல் விளங்கும் ஹார்த்துவ காயப் பிரதிமை நாலு செய்து கொடுக்க யோக்கியதையுள்ளவனென்று சாந்திரியைச் சிலாகித்துச் சொன்னான். இவ்வேலையைக் கண்டு பின்னும் இவ்வகை வேலை செய்து தரும்படி பலரும் கேட்டார்கள். அதனால் சாந்திரி பிரதிமைகளிற் சிந்தை செலுத்தி, ஓவியம் தீட்டு முயற்சியை நிறுத்திவிட்டான். இதற்குமுன் எட்டு வருஷகாலம் சாந்து-மெழுகுப் பிரதிமைகள் செய்து விற்று அவன் தேடிய பணம் ஐம்பது ரூபாயும் காணாது. அவன் ஹார்ன் டுக்கின் (Horne Tooke) சென்னிப் பிரதிமை செய்து பிரபல கீர்த்தியும் பிரக்கியாதியும் பெற்றான். அதைக் கண்டு அவனுக்குத் திரளாய் அகப்பட்ட வேலைகளால் 1, 20, 000 ரூபாய் சேர்ந்தது. இது அவனே மதித்தெழுதிய கணக்கு.

சாந்திரிக்கு அனுகூல தசை உண்டாகத் தொடங்கிவிட்டது. முன்னமே அவன் கஷ்டப்பட்டு உழைத்து ஒருவாறு திரவியம் சம்பாதித்திருந்தான். லண்டன் நகரத்தில் மூன்றாவது ஜார்ஜ் அரசனுக்குச் சிலை அடிப்பித்து வைக்கும் எத்தனம் தொடங்கிய சமயத்தில் இவ்வேலை கேட்ட வித்துவர் பதினாறு பெயர். அவர்களில் சாந்திரிக்கு வேலை படிந்தது. அதன்பின் சில வருஷம் சென்று, இப்பொழுது லிச்வீல்டு அத்தியக்ஷர் ஆலயத்தில் பிள்ளைகள் நித்திரை செய்யும் பாவனை விளங்க வைத்திருக்கின்ற பிரதிமையைச் சிருஷ்டிக்கத் தொடங்கினான். அந்த அழகிய பிரதிமையில் நவரசங்களில் ஒன்றாகிய கருணை என்பது பிரபலமாய் விளங்குகின்றது. அதை அவன் அமைத்த நாள் முதலாக அவனுக்கு மேலும்மேலும் கனமும் கீர்த்தியும் செல்வமும் உண்டாயின. அவனை இவ்வாறு பெருமை அடைவித்த சாதனங்கள் பொறுமையும் முயற்சியும் நிலை குலையாக கடைப்பிடியுமே. விவேகம் அவனுக்குப் பிறப்புவாசி. அதனுடன் இன்னறிவும் இருந்ததனால், அவன் வரப்பிரசாதமாய் அமைந்த அவ்விவேகத்தைச் சாதித்துப் பிரதிஷ்டை

டை பெற்றான். ஹாரானைப்போல் அவனும் மூடப்புத்தியுள்ளவன், உபாயி. இத்தாலியா தேசத்திற்குப் பிரயாணம் போனபொழுது அவன் ஒரு நாளும் கைவிடாதிருந்த குறிப்புப் புஸ்தகத்தில் சித்திரவித்தைக் குறிப்பு, அன்றன்று செல்லும் செலவு, இன்னவைகளின் விலைகளே முதலிய நானா வரலாறுகளும் எழுதிவைத்திருந்தான். அவனுக்கு ஈசேந்திரிய ஞானம் அத்தனை விசேஷித்ததல்ல, சாமானியந்தான். மற்றொரு சாதனத்தாலல்ல, அந்தச் சாமானிய ஞானபலத்தாலேயே அவன் அமைத்த விசித்திரமான பிரதிமைகளுக்கு இத்தனை பிரதாபம் உண்டாயிற்று. ஹாண்டன்வார்த் தேவாலயத்தில் அவன் செய்துவைத்திருக்கும் வாத் பிரதிமை என்ன சாமான்யமா - அது சித்திரம் அமைத்தமைத்துக் கை திருந்திய ஒருவன் சிருஷ்டித்ததெனத் தானே தோன்றும். ஆனாலும், அதி விசித்திரமான வேலைப்பாடு அதில் ஒன்றும் இல்லை. சாந்திரி தன்னைப் போலும் சித்திரகர் ஜீவனத்திற்குப் பொருள் வருவழியற்றுத் தவதாயப்படும்பொழுது, மூட்டித் தீர்த்து மனம் குளிர அவர்களுக்குத் தாராளமாய்த் திரவிய சகாயம் செய்து புண்ணியம் கட்டிக்கொள்வான். ஆனாலும், ஊர் மெச்சப் பகிரங்கத்தில் அவன் ஒன்றும் கொடுக்கிறதில்லை. கொடுப்பதைப் பிறர் அறியாவண்ணம் அந்தரங்கத்திற் கொடுப்பான். அவன் பிரித்தானியாவிற் சித்திரவித்தை அபிவிர்த்திக்காகத் தன் திரவியத்தில் பாதிக்கு அதிகம் ராயல் அக்காடெமி என்னும் வித்தியாபிவிர்த்தி சங்கத்திற்கு எழுதிவைத்தான்.

இவனைப் போலவே டேவிட் உவில்கி (David Wilkie) என்பவனும் சாமர்த்தியத்தில் உன்னதம் உயர்ந்து ஓய்வற்றுக் கைத்தொழில் முயற்சி செய்தவன். ஸ்கொத்திலாந்தில் அவன் ஒரு குரு புத்திரன். சிறு பருவத்திலேயே அவன் சிந்தை சித்திரவித்தையிற் சென்றதெனத் தோன்றியது.

அவன் பாடத்தை வருந்திக் கற்கிறதுமில்லை, கற்ற கல்வி மனதில் நிற்கிறதுமில்லை. மனுஷர் முகத்தையும் வேறு உருக்களையும் எப்பொழுதும் அதுப்பற்றுச் சித்திரித்துக் கொண்டிருப்பான். ஒன்றும் பேசாமல் மௌனமாயிருப்பது அவனுடைய பிரகிருதி. இளமையிலேயே அடங்கியிருக்கத் தொடங்கிய அவனுடைய எண்ணம் எல்லாம் ஒரே துறையிற் குவிந்து சென்றது. உள்ள நாள் உள்ளமட்டும் இதே அவனுக்குச் சிறந்த இயற்கையாய் வாய்த்தது. அவன் எங்கெங்கே இருந்தாலும், எங்கெங்கும் போனாலும் எப்பொழுதும் சித்திரம் எழுத அவகாசம் பார்த்துக்கொண்டேயிருப்பான். எழுதக் கடிதம் வேண்டுமென்று அவனுக்கு ஒரு நிபந்தனை இல்லை, கண்ணுக்கு எதிர்ப்படுவதெல்லாம் அவனுக்குக் கடிதமே. இருக்கிற வீட்டுச் சுவரானாலும் சரி, உலாவிவரும் கடற்கரை மணலானாலும் சரியே. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதமாகும் என்பதுபோல, டேவிட் உவில்கிக்கு எவ்வகைக் கருவியும் தூரியக்கோலாகும். ஜியாத்தோவிற்கு எப்படியோ, அப்படியே உவில்கிக்கும் தூரியக்கோல் கரிக்கட்டி; பக்குவமான கடிதம் ஒப்பமான கல், சித்திரிக்கும் உருவம் வழியில் எதிர்ப்படும் கந்தை கட்டிய யாசகன். அவன் எவர் வீட்டுக்காவது போயிருந்தால், திரும்பிப் போனபின் அவ்வீட்டின் சுவரில் அவன் கைக்குறியைக் காணலாம். வீட்டுக்காரர்கள் எல்லாரும் அதைக் கவனிக்கிறவர்கள் அல்ல. வீட்டைப் பெருக்கி மினுக்கிக் கண்ணுக்கு அலங்காரமாய் வைத்திருக்கும் சுசிகாரமானவர்களும் சிலர் உண்டே—அவர்களுக்குச் சுவரிற் கிறுக்கியிருப்பதைக் காணக் கண் எரிச்சலாகும்; அந்த அலங்கோலத்தைக் கண்டு அவனை கோபித்துப் பேசுவார்கள். அவன் கதையைப் பின்னும் சொல்லிப் பெருக்காமல் சுருக்கிச் சொல்லுகிறேன். தேசிகராகிய அவன் தந்தைக்குச் சித்திரவித்தை ஜன்மப் பகை. அது பாபம் என்பது அவர் பக்ஷம். அவன் மனமோ அவ்வித்தையிற் பிடிமானமாய்க் குவிந்

இருந்தது. அப்படிமானத்தைத் தவிர்க்கும்படி பிதா சொன்ன புத்திமதி ஒன்றும் சித்திக்கவில்லை. அவன் ஓட்டாரம் கட்டி நின்று சித்திரம் எழுதி எழுதித் தீர்த்து விடுகிறான். சித்திர வித்தையில் தேர்வது என்றால் எளிதல்ல. அது செங்குத்தான மலை ஏறுவது போலும். சிக்கல் சங்கடங்களை நினைத்து அவன் நெஞ்சு சலிக்கவில்லை, துணிவு குன்றவில்லை, மனத்திடன் அழியாதிருந்து வருந்தி முயல்கிறான். ஆதியில் எழும்பூர் நகரத்திலுள்ள சித்திர வித்தியாசாலையில் சேரும்படி அவன் விண்ணப்பம் செய்தான். அங்கு அவன் சித்திரித்துக் காட்டிய பிரதிமைகள் பணிக்காயிருக்கவில்லை - பிழை அதிகம். ஆனது பற்றி, வித்வசபையார் அவனைச் சேர்த்துக்கொள்ளவில்லை. சேர்த்துக்கொள்ளவில்லையென்று அவன் நீரம் குன்றி விட்டுவிட்டானா - இல்லை இல்லை. எழுதி எழுதிக் கை திருத்திச் சேர்ந்தான். ஆனாலும் அவன் தெளிந்து முன்னுக்கு வர நாட்சென்றது. அவன் அநுபவமற்ற அவதானமாய் மனுஷர் உருவை எழுதிப் பயின்றுகொண்டிருந்தான். அதிற்கு முயன்று சாதனை பண்ணியதால் சித்தி உண்டாகுமெனப் போகாதென்று உறுதியாய் மெய்ச் சித்திரத்தில் சிந்தை வைத்துப் பயின்றான். பலபேர் அவனைத் தம்மை விசேஷ விசேஷனெனப் பாவித்து விதி வசமே மனம் போன போக்கில் எல்லாம் போனார்கள். அவர்களுக்கு வழி ஒன்று இல்லை. அவர்கள் முயற்சி வெளிக்குத் தோன்றும் ஒருநாள் ஏறும் ஒரு நாள் குறையும். உயர்ந்தபடி இறங்கும் அதல்ல. அவன் முயற்சி எப்பொழுதும் இடைவிடாதிருந்தது. கெடி நாள் வரையில் அவன் தனக்கு விதித்த கருமத்தை முடித்தான். பின்பு அவன் இதை நினைந்து, தான் சித்தி பெற்றது தனக்கு விசேஷ விவேகமுடைமை இருந்ததல்ல, என்ன இடையூறு நேரிடினும் எடுத்த கருமத்தைக் கை சோரவிடாமல் தொடுத்து முயன்று முடித்ததனாலேதான் என்று பெரும்பாலும் சொல்வான். "இடையறாமல் எப்பொழுதும்

என் தூரியக்கோலை இயக்கிக்கொண்டுவந்த சாதனம் ஒன்றே ஒன்று — அது சலியாமுயற்சி” என்று அவன் மொழிந்தான். எடின்பர்க் நகரத்தில் அவனுக்குச் சில வெகுமதிகள் கிடைத்தன. இவ்வகை வெகுமதிகள் ஜீவனத்திற்குக் கட்டிவரா — ஒரு வேளைக்கு அகப்படும், ஒரு வேளைக்கு அகப்படா — மனுஷரைப் பார்த்துச் சித்திரம் எழுதி விற்றால் அதிக பயன் உண்டு. அந்த வருமானத்திற்கு இடையூறு இல்லை. ஆனதுபற்றி அவன் இவ்வகைச் சித்திரத்திற் பிரவர்த்திக்க நினைத்தான். நினைத்தும், கடைசியில், அவனுக்குப் பிரதாபம் உண்டான துறை எதுவோ அதிலேயே அவன் அச்சமற்று இறங்கினான். இறங்கி, பித்லெஸ்லி சந்தைப்படத்தைச் சித்திரித்தான். அவன் துணிவு இம்மட்டில் ஒழிந்துபோகவில்லை. சித்திரவித்தை கற்கவும் சித்திரம் எழுதிப் பயன் பெறவும் லந்தன் நகரம் மிகவும் வாய்க்கும் இடமாதலால் அவன் அங்கே போக நிச்சயித்துப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்து தன் ஏழைமைக்குத் தகுந்தபடி ஓர் எளிய விடுதி பிடித்திருந்தான். அதனுக்குச் சென்ற செலவு வாரம் ஒன்றுக்கு ஒன்பது ரூபாய். அவ்விடுதியில் இறங்கியிருக்கும்பொழுது குடியானவருள் ராஜவட்டம் பேசுவோர் படத்தைச் சித்திரித்தான்.

இந்தப் படம் வாய்த்தது. இதைக் கண்டு சிலர் அவனைக் கொண்டு சித்திரம் எழுதுவித்தார்கள். ஆனாலும், உவில்கி நெடுநாள்வரையில் ஏழையாகவே இருந்தான். அவன் சித்திரம் விற்றுத் தேடிய ரொக்கம் சிறிது — ஒவ்வொரு சித்திரம் எழுதி முடிக்கச் செல்லும் காலம் அதிகம் — உழைப்பு மிகுதி. வெகு வருஷகாலமாயின் அவன் சம்பாத்தியம் ஸ்வல்பமாயிருந்தது. அவன் எந்தச் சித்திரத்தையும் முந்தவே கருத்தாய்ச் சிந்தித்துச் சிறு அளவில் வரைப்படம் எழுதிப் பார்ப்பான். அவன் பதைத்துப் பதறிப் பரபரவென ஒன்றையும் எழுதி முடிக்கிறதில்லை. அனேக படங்களை அவன் பதனமாய்

பக்குவமாய்ச் சித்திரித்து, விளங்காத உறுப்புகளை விளக்கி, விளக்கினவைகளைப் பின்னும் விளக்கி, கூர்ந்து பார்த்துக் குறை களைந்து. சீராகத் திருத்தி வெளியிட வெகு வருஷ காலம் சென்றது. ரேனல்ட்ஸைப்போல் உவில்கியும் தலைமேற் கொண்டு நடந்த நீதிச் சொல் இது:—"உழை! உழை! உழை!". இவ்விருவரும் உளறுகிற சித்திரகர் பெயரில் தமக்கு வெறுப்பு மிகுதியென்று வெளியிட்டனர். பேசுகிறவர்கள் விதைத்தாலும் விதைப்பார்கள், விளைவை அறுப்பவர்களோ மௌனிகள். "நாம் எப்பொழுதும் யாதாயினும் ஒன்றைச் செய்துகொண்டேயிருக்கக் கடவோம்" என்று சொல்லி அவன் அலப்புகிறவர்களை அதட்டாமல் அதட்டுவான், சோம்பித் திரிபவரை எச்சரிக்காமல் எச்சரிப்பான். அவன் ஒரு சமயத்தில் தன் இஷ்டன் கன்ஸ்தேபில் என்பவனோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், "ஸ்கொத்லாந்தில் உள்ள சித்திர வித்தியாசாலையில் எனக்கு வித்தை கற்பித்த கோஹம் "உங்களுக்கு விவேகம் இருந்தால், முயற்சியால் அது தேறும்; விவேகம் இல்லாவிடில் அந்தக் குறை முயற்சியால் நிறையும்" என ரேனல்ட்ஸ் மொழிந்த வாக்கை வித்தியார்த்திகளுக்கு [illegible]பார். அதைக் கேட்டு, எனக்கு விவேகம் இல்லையென்று அறிந்தவனாய், மிகு முயற்சி செய்ய நிர்ணயித்தேன்" என்று சொன்னான். பின்னும் அவன் கன்ஸ்தேபிளுக்குச் சொல்லியது:— "லண்டன் நகரத்தில் என் சகபாடிகள் [illegible] சித்திர வித்தையைக் குறித்து [illegible] அவர்கள் வாய்மொழி [illegible] செவிகூர்ந்து கேட்க நான் [illegible] இருப்பது வழக்கம். ஏன்—"[illegible] இனை அளவு, அவர்கள் [illegible]"—இவ்வாறு அவன் சொல்லியது [illegible]. எப்பொழுதும் அடக்கமாயிருப்பது அவன் [illegible]. [illegible] பேசும் இராமனாசிகள் பிரதிமையை அவன் மானஸ்பீல்ட் பிரபுவிற்கு

விற்றது முந்நூறு ரூபாய்க்கு. இத்தொகை கையேறியவுடன் வீட்டில் தன் தாய்க்கும் சகோதரிக்கும் வெகுமானமாகத் தலையணி, உத்தரீயம், ஆடை முதலியவைகளை அவன் வாங்கி அனுப்பினான்; தன் சொந்தச் செலவைப் பாராட்டவில்லை. உவில்கி [illegible] வறிஞனாகி மித சம்சலவு செய்யப் பயின்றிருந்தும், சமயம் அறிந்து பொருளுதவி செய்யும் உதாரமதி அவனுக்கு உண்டு. இது ஆபிரகாம் ரேம்பாக் (Abraham Rumbach) எனும் சித்திரகர் எழுதிய ஜீவசரித்திர புஸ்தகத்தில் அடங்கிய சில வாக்கியங்களால் தெரிகின்றது.

சித்திர வித்தையில் இன்பப்பகுதியன்று, எடுத்த கருமத்தைத் தனியாளாக்கத்துடன் சாதித்த மற்றொரு பிரபலன் உவில்யம் எத்தி (William Etty). அவன் தகப்பன் யோர்க் நகரத்தில் மசாலைவடை பலசம்பாரம் விற்றுப் பிழைத்தவன்; தாய் கயிறு திரித்து விற்கும் ஒருவனுடைய மகள், அபூர்வ திடமனதும் நெறி குறியுமுள்ளவள். சிறு பருவம் தொடங்கி அவனுக்குச் சித்திரம் எழுதுவதில் நாட்டம் உண்டாயிருந்தது. சுவர், அடித்தளம், பீடம் இவைகளில் அவன் எழுதிய பிரதிமைகள் நிறைந்திருந்தன. அவன் முதலில் சித்திரம் எழுதப் பயின்றபோது [illegible] விலை தாளும் தாதுபலம், [illegible] எதாயினும் அகப்பட்டது. ஆனால் தாய்க்கு சித்திரவித்தை தெரியுமா - தெரியாது. அவன் [illegible] தொழில் பழக விட்டாள். [illegible] இல்லாமல் சித்திரம் எழுதிப் [illegible] தொழில் பழகக் குறித்த [illegible] அவன் தன் மனம் போன போக்கில் [illegible] மற்றொரு துறையில் இறங்க விரும்பவில்லை. [illegible] நிர்மானம். அவன் மனதிற்கு இசையச் [illegible] அவனுக்கு இந்தப் புதுத் துறையில் பொருளுதவி செய்ய உடன்பட

டார்கள். இதற்கு அவர்கள் நிர்வாகிகள்தான். ராஜ வித்தியாசாலையிற் சேர்த்து வித்தை பயிலவேண்டும் ரொக்கம் அவர்கள் அவனுக்குக் கொடுத்தார்கள். வித்தை பயின்று வரும்பொழுது, அவனோடு கூடப்படித்த சகபாடிகள் இவன் முட்டாள் அல்ல, மகாபுத்தி, கெட்டிக்காரன், [illegible] பிரபலன் ஆவான் என எண்ணிவிட்டார்கள். ஆகிலும், இடைப்பற உழைக்கும் திவ்விய வரம் அவன் வசப்பட்டிருந்தது. அவன் முயற்சியாய்ப் பாடுபட்டுப் பயின்று வரவரத் தேறி மாற்று உயர்ந்து சிரேஷ்டனானான்.

வித்தகர் [illegible] பெயர் [illegible] அடிப்படையும் துணிவு குன்றாமல் தொடங்கிய காரியத்தை முற்ற முடியச் சாதித்துச் சித்தி பெற்றார்கள். தரித்திரத்தின் [illegible] தாங்க ஆற்றாமல் எத்தனை பெயர் எடுத்த முயற்சியைக் கை சோரவிட்டு இருக்கிறார்களோ அறியோம். செங்கோல்வளையில் மார்த்தினைப் போல (Martin) அத்தனை கஷ்டப்பட்டவர்கள் இல்லை. அவன் முதல் முதல் மகா பிரதிமை ஒன்று செய்தபொழுது ஒரு நாள் அல்ல, பல நாள் பட்டினியிருந்து உடல் மெலிந்து வருந்தும் அவஸ்தைக்கு இட்டியிருந்தான். ஒரு நாள் அவன் கையில் மடியில் உள்ள பணம் எல்லாம் செலவாகி ஆக அரை ரூபாய் மிஞ்சியிருந்தது—அது பளிச்சென்று மின்னும் அரை ரூபாய்—அதன் மினுக்கை விரும்பி அதைச் செலவிடாது வைத்திருந்தான்—அதைப் பத்திரமாய் [illegible]—ஒரு நாள் பசியுபத்திரம் [illegible] அந்த அரை ரூபாயைக் [illegible] கொடுத்து ஒரு ரொட்டி [illegible] வைக்கவும், கடைக்கார[illegible] பதித்து ரூபாயை [illegible] தென்று செலவிடாது வைத்திருந்த [illegible] சமயத்தில் அரைக்காசுக்கும் [illegible] சொல்லா நாணயம் மார்த்தின் வீட்டுக்குத் திரும்பிப்போய்ப் பெட்டி

யைத் திறந்து சோதித்தும்பார்த்து ரொட்டி அடித் துணிக்கை சிறிது கண்டெடுத்துத் தின்று பசி ஆறினான். வைராக்கியம் இருந்தால் எந்தக் கருமத்தையும் சாதித்து ஜயம் பெறலாம். அவனைத் தளரவொட்டாமல் தாங்கியது வைராக்கியந்தான். அந்த வைராக்கியத்தின் ஆதரவால் அவன் சலிக்காமுயற்சி செய்து சித்திர கருமத்தில் கண்ணும் காதும் கருத்துமாயிருந்தான். கைமேலே பயன் பெறவில்லையென்று அவன் மனம் சளைக்கவில்லை; தீரம் குன்றவில்லை, பயன் விளையும் காலம் வருமென்று பொறுத்து உழைத்துக்கொண்டுவந்தான். சில தினம் சென்று தான் சித்திரித்த பிரதிமையை ஊர் மெச்சக் காட்டும்படி சமயம் வாய்த்தது. அன்றுதொட்டு அவன் பிரக்கியாதனாய் ஆனான். ஒருவனுக்கு இயற்கை விவேகமும் அவ்விவேகத்திற்கு முயற்சித் துணையும் இருந்தால், ஏதேது இடர் சம்பவிப்பினும், அந்த விவேகம் அவனைத் தலைகாக்கும். தகுதியுடையோர்க்கு நாட்சென்றாயினும், கீர்த்தி வசப்படாமற் போகாது. இதை மற்றனேக வித்தகர் சரித்திரத்தாலும் இவன் சரித்திரத்தாலும் பிரமாணபூர்வமாய் அறியலாம்.

சித்திரவித்தையில் தன் மனம் பிரவர்த்தியாதவனை மிக்க கருத்தோடும் சாதனையோடும் முறைமையாய்ப் பயிற்றிப் பண்படுத்தினாலும், அவன் ஒருபொழுதும் வித்தகன் ஆகான். சித்திரவித்தகன் முக்கியமாய்த் தன் முயற்சித் துணையாற் கடைத்தேறவேண்டும். விசேஷ வித்தியுடையோராகும் அவனைவரும் இவ்வாறே. சிறு பருவம் தொடங்கித் தன் பிதாவின் தொழிலைக் [illegible] (Pugin) என்பவன் [illegible] சிற்பவித்தையைத் தன் [illegible]. கற்றுத் தெளிந்தும், தான் [illegible], மீளவும் ஆரம்பித்து முறைமையாய் [illegible] தேறுவது ஆவசியகமென்றும் [illegible]. [illegible], அவ்விதானுன் [illegible] வெந்து உத்தியானத்தில் உள்ள அரங்கசாலையில் கூலிக்குத்

தச்சுவேலை செய்யத் தொடங்கினன். முதலில் பரும்படி யான வேலை செய்து கை தேர்ந்தேத நாணயமான வேலைகளிற் கையிட்டான். அவன் இவ்வாறே வேலையில் ஈடுபட் பயின்று சிற்ப நுட்பங்களில் சிறந்தவனாய் உழைத்துவந் தான். இதற்கு விஸ்தாரமான அவகாசமில்லை எனினும் நா ளுவிதக் கைத்தொழில் மிகவும் அநுகூலமே - அவ்வருஷம் ஈடான காலக்ஷேபம் கழித்தபின், அவன் பரம்பரைக்கலம் ஒன் றை லந்தன் நகரத்தினின்று சில பிரான்சியதுறைகளுக் குச் செலுத்திப்போனான். போகும்பொழுது இறந்து வர்த் தகமும் செய்து லாபம் பெற்றான். சமயம் கிட்டுந்தோ றும் கலையேறி, அங்கங்குள்ள பூர்வகட்டடங்களையும், முக் கியமாய்த் தேவாலயங்களையும் சித்திரித்துக்கொண்டு வருவான். பிற்பாடு, அவன் இந்தக் கருமத்தின் பெயரில் ஐரோப்பாவில் சில இடங்களுக்குப் பிரயாணம் போய்த் திரும்பு காலில் எழுதிய சித்திரங்களைச் சமைசமையாய்க் கொண்டுவருவான். இந்தப் பிரகாரமே அவன் விட்டுவிடா து கஷ்டப்பட்டு உழைத்து மேன்மையும் புகழும் பெற் றான், அவன் உழைத்த உழைப்புக்கு இது தரும் பயனே.

ஜார்ஜ் கெம்ப் (George Kemp) என்பவனும் இந்தத் துறை யில் இவ்வாறு கஷ்டப்பட்டு உழைத்தவனே. அவன் எடின் பர்க் நகரத்தில் இருக்கும் அழகிய ஸ்காட் ஞாபக சின்னத் தைச் சமைத்த சிற்பி. அவன் பிரா [illegible] மலை யின் தென்சாரியில் [illegible] எளிய ஏழை இடையன். [illegible] சேரியில் மனுஷர் கைத[illegible] முதலிய வைகளைக் கண்[illegible] அதிர்ஷ்டம் அவ்விளைஞனுக்கு [illegible] ஒரு கிருஷி கனுக்கு வயலில் [illegible] கொண்டிருக் கையில் ஒரு நாள் [illegible] அந்தச் சிறுவனை ஏ தோ செய்தி சொல்லி ரோஸ்லின் நகரத்திற்கு அனுப்பி

ஞன். அப்பொழுது அவனுக்குப் பருவம் பத்து. அங்குள்ள சிறந்த அரண்மனையும் தேவாலயத்தையும் கண்ட காட்சியைச் சிறுவன் ஒரு நாளும் மறக்கவில்லை. அது அவன் மனதிற் சித்திரித்தாற்போலப் பதிந்திருந்து. சிற்பவேலை பழகும் ஆசை அவன் நெஞ்சில் குடிகொண்டது. தச்சுவேலை பழகினால் அங்கனமாவது அதைப்பெறலாமென்று எண்ணி அவன் பிதாவை [illegible] [illegible], பிறகு அவனை அயலூரில் உள்ள மேஸ்திரி ஒருவனிடத்தில் வேலை பழக விட்டான். குறித்த காலவரையில் அம்மேஸ்திரியிடத்தில் பயின்று தெளிந்தன்மேல், வாலிபன் ஏதும் வேலை அகப்படுமென்று கலாஷீல்ஸ் எனும் நகரத்திற்குப் போனான். தொழிற் கருவிகளைக் கட்டிச் சுமந்துகொண்டு [illegible] [illegible] அயர் பள்ளத்தாக்கு மார்க்கமாய்ப் போம்பொழுது [illegible] கோபுரத்தின் கிட்ட ஒரு வண்டி அவனை முந்தி ஓடிற்று. சாரதி வண்டியை நிறுத்திச் சிறுவனைப் பார்த்து, நீ எங்கேயாம் போகிறாய் என்று கேட்க, சிறுவன் கலாஷீல்ஸ் நகரத்திற்குப் போகிறேன் என்றான். அப்படி ஆனால், ஏறிக்கொள், என்னுடன் உட்கார்ந்திரு, அந்நகரத்திற் கொண்டுபோய் இறக்கிவிடுவேன் என்று ஏற்றிக்கொண்டான். வண்டிக்குள் இருந்த எஜமான் சொல்லியே சாரதி வாலிபனை ஏற்றிக்கொண்டான், அதற்கு ஐயம் இல்லை. [illegible] அவ்வெஜமான் மற்றொருவரல்ல, ஸ்ரீ வால்டர் ஸ்காத். அவர் [illegible]க்கேயர் மாகாணத்தின் [illegible] அவர் [illegible] உத்தியோக காரியத்தின் பொருட்டு அம்மார்க்கமாய்ப் போனார். செம்பு கலாஷீல்ஸ் நகரத்தில் [illegible] [illegible] செய்து வரும் காலத்தில் [illegible] [illegible] மடங்களை அடிக்கடி [illegible] [illegible]த்துக்கொண்டு வந்தான். [illegible] [illegible] தீரா வாஞ்சையாயிருந்த [illegible] [illegible] செய்து செய்துவட இங்கிலாந்தில் [illegible] போய்ப் பார்த்தான். காதிக் வகையான [illegible]மாளிகை முதலிய கட்டடங்களைக்

காணும் சமயங்களில் அவன் ஒரு பொழுதும் அவைகளைச் சித்திரிக்காது விட்டதில்லை. ஒரு முறை லான்காஷியர் காட்டில் வேலை செய்துவருகையில், யோர்க் நகரத்திற்கு ஐம்பது மைல் தூரம் கால்நடையாய்ப் போய், அங்குள்ள அத்தியக்ஷர் ஆலயத்தைப் பூர்ணமாய்ப் பார்த்துப் பணிக்காய்ச் சித்திரித்து ஒரு வாரம் சென்று மீண்டும் கால்நடையாகவே திரும்பினான். பின்பு அவன் லீட்ஸ் நகரத்திற்குப் போய் நாலு வருஷம் தொழில் செய்தான். ஒழிந்த வேளைகளில், அங்குள்ள சிறந்த அத்தியக்ஷர் ஆலயத்தைச் சிரத்தைகூர்ந்து பார்த்துச் சித்திரித்து முடித்தான். அதன் மேல் அவன் இலண்டனுக்கு மீண்டும் ஒரு பயணம் போய், தென் நாடுகளில் சஞ்சரித்துத் திரிந்தான். இம்முறை கந்தர்புரி, உவின்செஸ்டர், இலி எனும் ஸ்தலங்களில் உள்ள ஆலயங்களையும் மற்றுள்ள பிரபல ஆலயங்களையும் பார்த்துச் சித்திரித்தான். 1824-ம் ஆண்டு அவன் இம் முகாந்தரமாகவே ஐரோப்பா யாத்திரைசெய்யக் கருதிப் புறப்பட்டான். அங்கேயும் தொழில் செய்து பிழைப்பதே அவன் கடைப்பிடி. [illegible] சேர்த்து, அப்பீவில், பொவே இவ்விரு ஸ்தலங்களையும் கண்டு பரீஸிற் போய் இறங்கிச் சில வாரம் அங்கிருந்து, அங்குள்ள அதிசயமான கட்டடங்களைக் கூர்ந்து பார்த்துச் சித்திரம் எழுதினான். அவன் தச்ச வேலையில் சமர்த்தன். [illegible] யந்திரம் செய்யும் குஷ மம் அறிந்தவன். [illegible] தோறும் அவையைக் குறித்து [illegible] பூர்வ காதிக் கட்டடம் [illegible] இங்கிலிருந்து தொழில் [illegible] கட்டடங்களைப் பார்வை[illegible] தொழில் செய்வதிலும் [illegible] ஐரோப்பாவில் ஒரு [illegible] கொத்தலா[illegible]க்குத் திரும்பினான். [illegible] அவனை விட்டு விடாமல் [illegible] எவ்வளவிலும்.

தேசக்காட்சி சித்திரிப்பதிலும் வல்லவனுனான். அழிந்து குட்டிச்சுவராய்ப்போன மெல்ரோஸின் பட்டமே அவனுக்கு மிகவும் இன்பமானது. அவன் அக்கட்டடத்தின் படத்தைப் பருப்பித்துப் பல பிரதிகள் எழுதினான். அவற்றுள் ஒன்று அக்கட்டடத்தை அதன் [illegible] தோற்றுவித்தது. பிற்பாடு அதைப் பார்த்து [illegible] அதன் உரு செதுக்கப் பட்டது. அன்றியும், அந்த கட்டடங்களின் மாதிரி கற்பித்துக் கொடுக்கும் வேலையும் அவனுக்குப் [illegible]. பிரித்தன் என்பவர் பூர்வ அந்நியகுடி ஆலயங்களைக் குறித்து உணர்த்திய வண்ணப்படி, எட்வர்ட் [illegible] சித்திரகன் ஒருவன் செதுக்கத் தொடங்கின வேலையைப் பணிக்காய் முடித்ததற்கு உதவியாக ஜெ. கெம்பு படமும் சித்திரித்துக்கொடுத்தான். இவ்வேலை அவன் மனதிற்கு இதமாயிருந்தது. இதில் அவன் மெத்தவும் பக்தி சிரத்தையோடு உழைத்தான். ஆனதுபற்றியே வேலை விரைந்து [illegible]. இவ்வேலை முகாந்தரமாய் அவனுக்கு [illegible] தேசத்தில் வழியில் சுகபோஜனம் உண்டா [illegible] போல காலம் கழித்தான். பாரிசுக்கு [illegible] யாய்ப் போனான். இப்படிப் [illegible] சித்திரங்களும் எழுதி முடித்தான். அச்சித்திரங்களோ [illegible] அவைகள் சிரேஷ்ட [illegible] அனுபவித்தால் அவ் வித்தகருக்கு [illegible] வைகள். அந்த வேலையைத் [illegible] இறந்துபோனார். அதனால் [illegible] பட்டது. கெம்பு வேறு வேலை [illegible] பேசுகிற தேயிலே, [illegible] பகசின்னம் சிரேஷ்டமாய் [illegible] வித்தகனுக்கு இன்ன [illegible] சங்கத்தாரால் விளம்பரம் [illegible] யில் கெம்பு கிப்ணென்று எவருக்கும் [illegible]. இவ் வெகுமானத்தை நாடி வெகு வெகுபெயர் [illegible] செய்தார்கள். அவர்களித்

சிலர் பூர்வ சிற்பத் துறையில் ஒப்பு உயர்வு இல்லாத வல்லலவனென்று பெயர் எடுத்தனர். இத்திறமையுடையோர் எழுதி அனுப்பிய சித்திரம் அனைத்திலுள்ளும் சிரேஷ்டமெனச் சபையார் சிந்தை ஒத்து வியந்து தெரிந்தெடுத்தது கெம்பு சித்திரித்த படமே. சபையிற் பிறந்த இந்தத் தீர்ப்பு ஜார்ஜ் கெம்பு செவிக்கு எட்டியபொழுது, அவன் அனேக மைல் தூரத்தில் எயர்ஷியர் மாகாணத்தில் இல்லின்னிங் மடத்தில் சித்திரம் எழுதிக்கொண்டிருந்தான். அந்தப் பாவியை நினைக்கப் பரிதாபம் உண்டாகின்றது! இச்செய்தி கேட்டுச் சிறிது காலத்திற்குள் கெம்பு இறந்துபோனான். அவன் மரணம் அகால மரணம். அவன் அலுப்பற உழைத்துத் தன் முயற்சித்துணையால் பரிந்து வருந்தித் தீட்டிய அபூர்வ சித்திரம் கல்லுருவாகச் சமைந்ததைக் காணும் அதிர்ஷ்டம் பெற்றானில்லை. கல்வியில் வல்லவர்க்கு ஞாபக சின்னமாகச் சிலையில் நிர்மித்த பிரதிமூர்த்திகள் எத்தனையோ உண்டு. அவை ஒன்றும் இதைப்போல் நயமும் நாணயமுமாய் வாய்க்கவில்லை.

மேலும், ஜான் கிப்ஸன் (John Gibson) என்பவனும் சித்திர வித்தையில் சிறந்து கீர்த்தி ஜனம வாசனையாக உண்டாம் பூரண வைராக்கியத்தோடு பயின்று தெளிந்த வித்தகனே. உழைப்பின் மகிமையைக் காலம் எனும் கருவியால் அளப்பது [illegible]. அவன் அந்தரமுடையவன் அல்ல, [illegible] ஆனான். அவன் பிறப்பிடம் [illegible] கான்வேக்குக் கிட்ட இருக்கும் [illegible]. அவன் தகப்பன் தோட்டவேலை செய்து பிழைத்தவன். இவன் குழந்தையாயிருக்கும்பொழுதே அவன் [illegible] சிறு கத்தி கொண்டு மரத்தில் செதுக்கிய பிம்பங்களாலே தெரிந்தது; அவன் புத்தி சென்ற முறையைக் கண்டு பிதா அவனை லிவர்பூலுக்கு அனுப்பி, சிறந்த பெட்டிகளும் செ

துக்குவேலையும் செய்யும் ஒருவனிடத்தில் தொழில் பழக விட்டான். கொஞ்சக் காலத்திற்குள் அவனுக்கு இத்தொழிலில் அதிக விருப்பத்தி உண்டாயிற்று. அவன் செதுக்கிய பிரதிமைகள் சிலவற்றைக் கண்டவர்கள் வியந்து பாராட்டினார்கள். இந்தப் பிரகாரம் அவன் மனம் ஜன்ம இயற்கையாய் மரத்திலும் சிலையிலும் சித்திரப் பிரதிமைகள் செதுக்கும் துறையில் இறங்கியது. பதினெட்டு வயசில் அவன் காலசக்கரத்தை விளக்கும்படி மெழுகில் அமைத்த பிரதிமை ஒன்று வெகுவாய் வியந்துகொள்ளப்பட்டது. அவனுடைய சித்திரவேலைப்பாட்டைக் கண்டுகொண்டாடிய சித்திரகாரிய ப்ரான்ஸிஸ் வகையார் அவனுக்குத் தொழில் பழக்கிய மேஸ்திரிக்குப் பணம் கொடுத்து உடன்படிக்கைப் பத்திரத்தை மீட்டுத் தங்கள் பெயரில் ஆறு வருஷத்திற்குத் திருப்பி எழுதி அவனைச் சேர்த்துக்கொண்டார்கள். அவ்வாறு வருஷவரையில் அவன் பல நூதன வேலைகள் செய்து அபூர்வ சாமர்த்தியம் காட்டினான். பின்பு அங்கிருந்து அவன் லண்டனுக்கும், அதன்மேல் ரோமைக்கும் போனான்; ரோமையில் இருந்து சித்திரவேலைகளில் விசேஷ விற்பத்தி அடைந்து ஐரோப்பா அடங்கலும் விக்யாதன் ஆனான்.

சித்திர வித்தியாசாலையின் ஓர் அங்கமாயிருந்த ராபர்ட் தோர்பார்ன் (Robert Thorburn) என்பவனும், ஜான் கிப்ஸனைப்போல், ஏழைகள் பெற்ற பிள்ளையே. அவன் பிறப்பிடம் டம்ப்ரீஸ். அங்கு அவன் பிதா பாதரக்ஷை செய்து விற்கும் சக்கிலி. ராபர்ட்டை விட அந்தச் சக்கிலிக்குப் பின்னும் புத்திரர் இருவர். அவர்களில் ஒருவன் மரத்தில் வெகு நாணயமாகப் பிரதிமை செய்யப் பழகினான். ஒரு நாள் அந்தச் சக்கிலி கடைக்குக் குடும்பஸ்தர் ஒருவர் பாதரக்ஷை வாங்கப் போனார். போனபொழுது, இளைஞனாயிருந்த ராபர்ட் ஒரு மணையில் காகிதம் வைத்துச் சித்திரம் எழுதிக்கொண்டிருந்தான். சக்கிலி கடையில் எழுதப்பீடம் ஏது! ஆகை

மகள் அதை வாங்கிப் பார்த்து சிறுவனுடைய திறமையைக் கண்டு சந்தோஷித்து, அவனுக்குச் சித்திரத்தொழிலில் எங்கரியிலும் பிழைப்புக் காட்ட அபிப்பிராயப்பட்டாள். இந்த அபிப்பிராயத்தை மேற்கொண்டு, சித்திரவித்தை பயிலும்படி சிறுவனுக்கு உதவி புரியச் சில பெரிய மனுஷரைத் தூண்டிவிட்டாள். அவர்கள் உதவியால் அவன் மிகு ஜாக்கிரதையாய் ஐம்புலன்களையும் ஒடுக்கிச் சித்திரத்தைப் பயின்று வந்தான். மற்றப் பிள்ளைகளுடன் கூடி வீண்பேச்சுப் பேசி ஓடி ஆடித் திரிந்து காலம் போக்காமல் அவன் எப்பொழுதும் உட்கார்ந்த வண்ணமாய் இருந்து வருந்தி உழைத்து வருவான். 1830-ம் வருஷமளவில் அந்நகரவாசிகளாகிய பெரியோர் சிலர் திரவியசகாயம் சிறிது செய்து அவனை எடின்பர்க் நகரத்திற்கு அனுப்பி அங்குள்ள சித்திரவித்தியா சாலையிற் சேர்ப்பித்தனர். அதில் வித்தை கற்பித்த உபாத்தியாயர்கள் வல்லவர்களாதலால் சிறுவன் தீவிரமாய்த் தேறினான். தேறி, அவ்விருந்து லண்டன் நகரத்திற்குப் போனான். அங்கவனுக்கு பக்ளூக் மகாராஜ பிரபுவின் சலிகை அமைந்தது. அந்தப் பிரபுவை இட்டு அங்குள்ள பெரியோர் வெகு பெயர் அவனுக்குப் பரிச்சயமாயினர். பிரபு சலிகையால் பெரியோர் சகவாசம் பெற்றது மெய்தான். ஆனால், அந்த நேர்யர்ன் பெயர்பெற்ற சித்திர வித்தகன் ஆனது சலிகையினாலா – அல்லவே – உண்மையில் வேகமும் முயற்சி குன்றாது உழைக்கும் பிரகிருதியும் இருந்ததனாலேயே அவன் இத்தகைய பிரக்கியாதன் ஆனான்.

சித்திர வித்தையை யாவரும் அறிந்து கொண்டாடும் நோயல் பாதன் (Noel Paton) என்பவன் முதலிற் செய்யத் தொடங்கிய வேலை [illegible] விரிக்கும் துப்பட்டிகளுக்கும் கையால் இழைக்கும் வெள்ளைச் சல்லாவிற்கும் விதவிதமான சித்திரங்கள் புதிந்து எழுதிக் கொடுத்தல். இவ்வேலை செய்துவரும் காலத்தில், மனுஷர் வடிவு அமைப்

யது முதலாம் மேலான சித்திரத்தொழிலும் சோர்புற வி டாது பயின்றுகொண்டுவந்தான். நூலோருக்கு எவ்வகைத் தொழிலும் எத்தனையின்றியே கைவருமெனச் சொல்வார் கள் - இவனுக்கும் அவ்வாறே. 1840-ம் ஆண்டு இந்த அறியா த இளைஞன் தொழிற்பயிற்சியுள்ள முதியோருடன் 'ரென் ப்ருஷீயர் மாகாணத்து வருஷ சரிதம்' புஸ்தகத்திற்குச் சித்திரம் எழுதிக்கொண்டுவந்தான். அவன் சித்திரவித்தை யைப் படிப்படியாகப் பயின்று தெளிந்தான். சற்று மந்த தரமாய் உழைத்தும், குற்றம் குறையின்றி, செய்வதை நய முறச் சாதித்தான். அவன் வெகுமதி பெற நாடிப் பார்லி மெண்டு சபாலயங்களுக்குச் சோடினையாகப் பெருஞ்சித்தி ரம் எழுதிக் காட்டிறவரையில், அவனுடைய பிரக்கியாதி வெளிவரவில்லை. சமய சாரத்தைக் குறிப்பித்து அவன் எழு திய சித்திரத்திற்கு உயர்ந்த வெகுமதி பெற்றான். அந்தச் சித்திரத்தால் அவன் சுத்த சித்திரவித்தகன் எனப் பிரசித் தனானான். அதன்பின் சித்திரித்து வெளியிட்ட 'ஓபிரன் - டித்தானியா சமாதானம்', 'சிரமம்' முதலியவைகளால் அவன் சித்திர வித்தியாசக்தியிலும் சாதனையிலும் இளைக் காமல் மேலுமேலும் பண்பட்டானென்று தெரியவந்தது.

எளிய குடும்பத்திற் பிறந்து சித்திரவித்தையைச் சோர் புற முயன்று பயின்று வியாபகனான மற்றொருவன் ஜேம்ஸ் ஷார்பிள்ஸ் (James Sharples). அவன் ப்ளாக்பர்னில் கரு மார் தொழில் செய்து பிழைத்தவன். அவன் பிறப்பிடம் யார்க்ஷியர் மாகாணத்தில் வேக்பீல்ட் எனும் ஊர்; ஜன்மகாலம் 1825-ம் வருஷம். அவன் பெற்றோருக்குப் பிள்ளைகள் அவனுடன் பதின்மூன்று பேர். இரும்பு வார்ப் பிடவேலை செய்து பிழைத்துவந்த தகப்பன் மேற்சொல்லிய கிரா மத்தினின்று குடியெழுந்து பெரி எனும் ஊருக்குப் போ யிருந்தான். பிள்ளைகளைப் பள்ளிக்கு வைக்கவில்லை. தவிப் படத் தலைப்பட்ட அவன் அவர்களுக்குக் குலவித்தை பயிற்

திருன். பத்துப் பருவத்தில் ஜேம்ஸை வார்ப்பிடவேலை பழக விட்டான். இரண்டு வருஷகாலம் அங்கே வேலை செய்தபின் ஜேம்ஸ் இருப்புப்பாதை வண்டித்தொடர் யந்திர கம்மசாலையிற் சேர்ந்தான். அச்சாலையில் யந்திரக்கொல்லன் அவன் தகப்பன். சிறுவன் ஆணிகளை உலையில் இட்டுப் பழுக்கக் காய்ச்சி எடுத்துக் கொண்டுபோய்க் கொப்பரை செய்யும் கொல்லரிடத்திற் கொடுப்பான். அது அவன் வேலை. அவனுக்கு ஒழிவு இல்லை. பெரும்பாலும் காலையில் ஆறு மணி தொடங்கி அஸ்தமனமாகி எட்டு மணி பரியந்தம் உழைத்த வண்ணமாயிருப்பான். இப்படி இடைவிடாது வேலை செய்து வரும் காலத்திலும் தகப்பன் அவனுக்கு வீட்டில் விளக்கு வெளிச்சத்தில் சிறிது எழுத்து அறிவித்துக் கொண்டுவந்தான். சுத்த மூடனாய்ப் போக விடவில்லை. இப்படி இராவோடிராச் சிறிது வேளை படித்துப் பாதிக்குப் பாதி எழுத்து அறிந்துகொண்டான். கம்மியசாலையில் கொப்பரைக் கொல்லருடன் வேலை செய்துவரும் நாளில் அங்கு ஏற்பட்ட ஒரு வழக்கத்தால் சித்திரம் எழுதப் பயிலும் ஆசை சிறுவன் உள்ளத்தில் உற்பத்தியாயிற்று. அப்போதைப்போது மேஸ்திரி கொப்பரை செய்யும் வடிவைத் தளத்திற் சுண்ணாம்பு பூசிய கயிறு அடித்துக் குறிப்பான். அவ்வேளைகளில் அந்தச் சிறுவன் கயிறு பிடிப்பான். சில வேளை மேஸ்திரி கயிறு பிடித்துக்கொண்டு, அகலம் - நீளம் - கனம் இவ்வளவென்று சொல்லிக்கொடுத்து அந்தப் பையனைக் கொண்டு கயிறு அடிப்பிப்பான். செய்யச் செய்ய இவ்வேலையில் ஜேம்ஸ் நன்றாய்ப் பண்பட்டான். பண்படவே அவனால் மேஸ்திரிக்கு அதிக வேலை சாய்ந்தது. வேலை ஒழிந்து வீடு சேர்ந்தபின் ஜேம்ஸ் வீட்டின் அடித்தளத்தில் கொப்பரை முதலிய சித்திரங்கள் சித்திரித்து ஆனந்தம் கொள்வான். பக்கத்துக் கிராமத்தில் வசிக்கும் ஒரு ஸ்திரி இக்குடும்பத்தைக் காண வருவதாக ஒரு நாள் அங்கிருந்து கடிதம் வந்தது. அந்தப் பெண்பிள்ளை இவர்

கள் பந்து. விருந்து வருமுன் இவர்கள் வீட்டைச் சிங்காரித்து வைத்தார்கள். ஏழை வாலிபன் சாயரக்ஷை கம்மசாலையில் வேலை முடிந்து வீடுவந்து சேர்ந்த பின், தளத்தில் வழக்கப்படி சித்திரிக்கத் தொடங்கினான். அவன் ஒரு கொட்பரையைத் தானு பலத்தாற் சிறிது சித்திரித்துக்கொண்டிருக்கையில், விருந்தாளியாக வந்திறங்கிய பந்துவுடன் அவன் தாய் அவ்விடத்திற் சேர்ந்தாள். பகல் முழுதும் கம்மசாலையில் தேகத்திற் படிந்த கரி புகைக்கறை தூசு இவைகளைக் கழுவித் தேகத்தைச் சுத்தி செய்யாமல் அந்த வாலிபன் தளத்தைத் தாழுபலத்தால் கண்ணுக்கு அவலக்ஷணமாய்க் கீறிக் கிழித்துக்கொண்டிருந்தது அவனுக்கு நன்றாயிருக்கவில்லை. நூதனமாய் வந்து சேர்ந்த பந்துவிற்கோ அவன் முயற்சியைக் கண்டு மெத்தவும் பிரீதி உண்டாயிற்று. அந்த ஸ்திரி அவன் எழுதிய சித்திரத்தைப் பாராட்டினாள். "இக்குட்டிக் குப்பைக்காரனுக்கு" காகிதமும் வங்கலேகினியும் வாங்கிக் கொடுமென்று தாய்க்குச் சொன்னாள்.

மூத்த சகோதரனுடைய உதவியால் அவன் சித்திரம் எழுதவும் தேசபடம் எழுதவும் தொடங்கினான். கல்லச்சிற் சில பிரதிகளும் பதித்தான். தேசபடம் சித்திரிக்கும் விதியும் ஒளிக்கும் இருளுக்கும் பேதம் தோற்றுவிக்கும் முறையும் அவனுக்கு அப்பொழுது தெரியுமா ஒன்றும் தெரியாது. ஆனாலும், அந்தப் பருவம் தொடங்கின தொடக்கத்தை விட்டு விடாது முயன்றுகொண்டிருந்தான்; வரவரச் சித்திரங்களைப் பார்த்து எழுதி எழுதி அவன் கை திருந்தி வழிக்கு வந்தது. பதினாறு வயதில் அவன் பெரிய நகரத்தில் உள்ள கைத்தொழிற் சாலையிற் சேர்ந்து சித்திரம் எழுதப் பயின்றான். அவனுடைய உபாத்தி சித்திர வித்தையில் தெளிந்த வித்தகனல்ல, அவ்வித்தை அவனுக்கு அதிக கொண்டாட்டம். அவன் ஒரு சவரகன், அவனிடத்து

தில் ஷெடி ஜேம்ஸ் வாரத்திற்கு ஒரு முறை மூன்று மாசகாலம் சித்திரவித்தை கற்றுக்கொண்டுவந்தான். அந்த உவாத்தி புஸ்தகசாலையில் பார்னெத் ஆசிரியர் சித்திரவித்தை பயிலும் முறையைப்பற்றி எழுதிய புஸ்தகம் ஒன்று இருக்கிறது. அதைக் கேட்டு வாங்கி வாசித்துக்கொண்டுவா என்று சொன்னான். அவனுக்கு அப்பொழுது தடையற வாசிக்க வராது. ஆனதனால் அவன் அப்புஸ்தகத்தைத் தாயிடத்திலும், சில வேளை தமயனிடத்திலும் கொடுத்து, அவர்கள் சில வாக்கியங்களை வாசிக்க, கிட்ட உட்கார்ந்து செவிகூர்ந்து கேட்பான். தான் வாசிக்க அறியாதவன் அப்படித்தானே செய்யவேண்டும். வாசிக்கப் பயிலாமல் மூட்டாளாயிருப்பது அவன் விர்த்திக்குப் பெருந்தடையாயிருந்தது. ஷெடி பார்னெத் எழுதிய கிரந்தத்தின் உள்ளுறையை நன்குணர்ந்து பண்டிதனாகும் ஆசையோ அவன் மனம் கொள்ளாதிருந்தது. ஆனதுபற்றி, அவன் இந்த உபாயம் செய்தான். மூன்று மாசம் சித்திரவித்தை கற்றபின் அதை நிறுத்திவிட்டு, வீட்டில் இருந்து எழுத வாசிக்கக் கற்றுக்கொண்டுவந்தான். இதில் அவன் வெகு விரைவிற் சித்தி கண்டான். அதன்பின் மீளவும் வித்தியா சாலையிற் சேர்ந்து பார்னெத் கிரந்தத்தை எடுத்து வாசித்தான்; வாசினையும் தடையற ஓடிற்று, பின்னுக்கு உதவுமென்று அதிற் சில குறிப்புகளும் பெயர்த்து எழுதிவைத்தான். அப்புஸ்தகத்தின் உள்ளுறை பொருளை அவன் அதிசயித்த பிரக்ஞையுடன் கிரகித்துக்கொண்டான். நித்தமும் அதிகாலையில் ஐந்து மணிக்கு எழுந்திருந்து அப்புஸ்தகத்தை வாசிப்பான்; அங்கங்கே வரும் முக்கிய விஷயங்களை எழுதி வைப்பான். அப்பால் ஆறு மணிக்கு வாழ்ப்பிடச் சம்மிய சாலைக்கு வேலைக்குப் போவான்; பொழுது சாயுமளவும் ஆறு மணி வரைக்கும், சில வேளை எட்டு மணி வரைக்கும் வேலை செய்வான்; அதன்மேல் வீட்டிற்குத் திரும்புவான்; வீடு சேர்ந்தவுடன் அவனுக்குப் புஸ்தகத்தின்மேற் புது ஆசை உண்டாம்; புஸ

நூலகத்தை எடுத்துப் பெரும்பாலும் நாழிகை ஏற வாசித்துக்கொண்டிருப்பான். இராத்திரி காலத்தில் கொஞ்சக் கொஞ்ச வேளை ஏதும் சித்திரிப்பான். சித்திரங்களைப் பார்த்து எழுதுவான். லியொனார்டோ சித்திரித்த "கடை இராப் போஜனம்" எனும் சித்திரத்தை அவன் பார்த்தெழுத ஒரு இரா முழுதும் சென்றது. படுத்துக்கொண்ட பின்னும் அவனுக்குச் சிந்தனை எல்லாம் படத்தின்மேலே இருக்கும்-தூக்கம் பிடிக்காது. அதனால், எழுந்து திரும்பவும் லேகினியைக் கையாடுவான்.

அப்பால் அவன் தைலவர்ணச் சித்திர வித்தையில் ஒரு கை பார்க்க ஆரம்பித்தான். அதன் பொருட்டு ஒரு சவளிக் கடைக்காரனிடத்தில் இரட்டுத்துணி சிறிது வாங்கி அதற்குச் சட்டம் இட்டு ஈயவெள்ளை பூசி, வீட்டுக்கு வர்ணம் கொடுக்கும் தொழிலாளி ஒருவனிடத்தின் பணத்திற்கு வர்ணம் வாங்கிச் சித்திரிக்கத் தொடங்கினான். அவன் உழைத்த உழைப்பு வாய்க்காது வீண் உழைப்பாகப் போயிற்று. இரட்டு ஒப்பமற்றது, நெருட்டுப் புடைவை, சித்திரித்த தைலம் உலரவேயில்லை. அவனுக்கு ஒன்றும் தெரியவில்லை. இத்தறியில், மேற்குறித்த [illegible] பழைய உபாத்திக்கு இதைச் சொல்லி யோசனை கேட்டான். கேட்க, உபாத்தி சித்திரம் எழுதப் பழகுசெய்த இரட்டுக் கிரயத்திற்கு அகப்படுமென்றும், தைலச் சித்திரத்திற்கென்று செய்த வர்ணமும் மினுக்கெண்ணெயும் கிட்டுமென்றும் அவனுக்குச் சொன்னான். ஆகவே, வாலிபன் சிறிது பணம் சேர்த்தவுடன் வெள்ளை [illegible] சிறுக் கிரயத்திற்கு வாங்கி வேலையைப் புதிதாக ஆரம்பித்தான். சித்திரச் [illegible] அவனுக்குச் சித்திரிக்கப் பயிற்றினான். [illegible] சித்திரித்துச் சித்திரத்துக் குருவை விடத் தேர்ந்தவன் ஆனான். அவன் முதலிற் சித்திரித்தது "ஆட்டு ரோமம் கத்திரித்தல்" எனும் செதுக்கு வேலை ஒன்றைப் பார்த்து எழுதிய படம். பின்னிட்டு அவன்

அதை ஒன்றேகால் ரூபாய்க்கு விற்றான். தைலச் சித்திர விளக்கம் எனும் சிறு புஸ்தகம் ஒன்று அரை ரூபாய்க்கு வாங்கி அதன் உதவியால் ஒழிந்த வேளையில் சித்திரித்துப் பயின்றுகொண்டுவந்தான். வரைய வேண்டுகிற உபகரணங்களைத் தப்பற விவரணமாய் அறிந்துகொண்டான். சித்திரச் சட்டம், வர்ணப்பலகை, பலகைக்கத்தி, வர்ணப் பெட்டி இவை எல்லாம் தன் கையாற் செய்தான். நாழிகை ஏறத் தொழில் செய்து சிறிது பணம் சேர்த்து வர்ணமும் தூரியக்கோலும் இரட்டும் வாங்கினான். சித்திரம் எழுதிப் பழகப் பெற்றார் அவனுக்கு ஒத்தாசை கொடுத்த நிதி இம்மாத்திரந்தான். பெருங் குடும்பம் தாங்கும் பாரம் பழி பொறுத்தவர்கள் இதற்கு மிஞ்ச நிதி கொடுக்க அவர்களால் ஆகவில்லை. பொழுது பட்டபின் பல நாள் அவன் தன் ஊரினின்று மான்செஸ்தருக்குக் கால்நடையே போய் ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய்க்கு வர்ணமும் இரட்டும் வாங்கிக்கொண்டு மீளவும் கால்நடையே வந்து சேர்வான். சேர ராத்திரி பதினொன்று நாழிகை வரையும் செல்லும். போகவரத் தூரம் சரியாகப் பதினெட்டு மைல். சில வேளை உச்சி நின்று உள்ளங்கால் வரையும் நனைந்து விறைத்து வெறுங்கையோடு வருவான். குன்றாத ஆசையும் மாறாத நிர்ணயமும் இருந்து அவனுக்குக் கொடி தாங்கும் கொழுகொம்பாக வாய்த்தன. தன் முயற்சியால் வித்தகனான இவன் அப்பால் அடைந்த கீர்த்தியை இந்தக் கிரந்தகர்த்தருக்கு இவன் கையால் எழுதி அனுப்பிய கடிதம் ஒன்றில் மறைவில்லாது காணலாம். அது வருமாறு அடியில் காண்க:—

"அதன்மேல் எனக்கு சித்திரித்த படங்கள் இவ்விதம் தோன்றும் வண்ணம் [illegible] ஒரு [illegible] படம், பின்னும் இரண்டொன்று. அதன் பிறகு, கொஞ்சகாலம் ஒன்று சித்திரிக்க உபாயம் சூழ்ந்தேன்." அதற்கு முன்னம் சிறிது காலமாயினும் எனக்கு இந்த நினைவு உண்டு.

நினைந்தபடி சித்திரித்துப் பார்க்கவில்லை. பின்பு, முதலில் காகிதத்தில் எழுதிவைத்திருந்து, அப்பால் இரட்டில் சித்திரிக்க ஆரம்பித்தேன். நான் சித்திரித்த படம் நான் வேலை செய்து பயின்ற கம்பியசாலையைப் போலும் விஸ்தாரமான ஒரு கம்பிய சாலையின் உள்ளிடத்தை விளக்குவது. இன்ன சாலையென்று ஒன்றைக் குறித்து நான் இப்படம் எழுதினவனல்ல. ஆனதுபற்றி, இம்மாத்திரத்தில் இப்படம் நூதனமென்று சொல்லலாம். இப்படத்தின் ஆகிருதியை எழுதியபின் ஆள் உரு அமைக்கும் பேசிகளைப் பிழையறச் சித்திரித்து வேலையைப் பணிக்காய் முடிக்க அங்காதிபாதவியல் அறியாமல் தீராதென்று கண்டேன். இந்தச் சமயத்தில் என் சகோதரன் பீற்றர் எனக்குச் சகாயரானார். அவர் ப்லாக்ஸ்மன் இயற்றிய 'அங்காதிபாத விளக்கம்' எனும் புஸ்தகம் ஒன்று தயைகூர்ந்து வாங்கிக் கொடுத்தார். அதற்குக் கிரயம் கொடுத்து வாங்க அப்பொழுது என்னால் மாளாது. அதன் கிரயம் பன்னிரண்டு ரூபாய். அந்தப் புஸ்தகம் எனக்கு லக்ஷம் வராகனுக்கு ஒப்பாயிருந்தது. அதை நான் அதிகாலையில் மூன்று மணிக்கு எழுந்திருந்து வருந்தி வாசித்து அதில் [illegible] விதிப்படி சித்திரிக்கப் பயின்றேன். அது மனுஷர் துயிலொழிந்து உழைக்கிற நேரம் அல்லவே. அவ்வேளையிற் சிறுபான்மை என் சகோதரன் பீற்றரை எழுந்து நிற்கச் சொல்லி அவர் உருவைப் பார்த்துச் சித்திரித்ததும் உண்டு. இவ்வாறு பயின்று வரவரத் தேறியும், தொடங்கின சித்திரத்தை எழுதிக்கொண்டுபோகும் துணிவு பிறக்கச் சிறிது காலம் சென்றது. மேலும், தேசக்காட்சி சித்திரிக்கும் முறை தெரியாததும் ஒரு தடையாயிருந்தது. ப்ருக் தேலர் இயற்றிய மூலவிதிகளைக் கவனமாய் வாசித்து இக்குறையை நிறைவிக்க வகை பார்த்தேன். அதன்பின் அப்பியாசமின்றிச் சித்திர வேலையை மீளவும் தொடங்கினேன். தேசக்காட்சி சித்திரிக்கும் விதிகளை வீட்டில் கற்றுக்கொண்டுவரும்பொ

ழுது, கம்மிய சாலையில் சற்றுப் பருவாரப்பட்டவேலை செய்ய இடந்தரும்படி கேட்டுச் செய்துகொண்டுவந்தேன். இதன் முகாந்தரம் இன்னதென்று சொல்லுகிறேன். மிகப் பாரமான இரும்பு வேலைக்கு உலையில் இட்ட இரும்பு காயச் செல்லும் நேரம் அதிகம். லேசான வேலைக்கு இரும்பு காய்ச்ச அத்தனை நேரம் செல்லாது. பருவேலைக்கு உலைக்களத்தில் இட்ட இரும்பு காயும்பொழுது உலைக்களத்திற்கு எதிரில் இருந்த இரும்புத் தகட்டில் தேசக் காட்சி சித்திரித்துக்கொண்டுவருவேன். இப்படி இவ் வேலையில் எனக்கு அன்றன்று சற்றுச் சற்று வேலை ஒழிவு கிடைத்தது."

இவ்வாறு இடைவிடாது சித்திரித்தும் சித்திரவித்தை கற்றுக்கொண்டும்வந்ததனால், ஜேம்ஸ் ஷார்பில்ஸ் சித்திரவித்தியா ஞானத்தில் மேலுமேலும் தேறினதுமன்றி, சித்திரிக்கும் தொழிலிலும் கைதேர்ந்தான். அவன் தொழிற்சாலையில் வேலை பழக ஏற்பட்ட காலம் நிறைவேறிப் பின்னும் பதினெட்டு மாசம் சென்றதன்மேல், அவன் தகப்பனைப் பார்த்துச் சித்திரித்த ஓவியத்தை அக்கரைத்தார் வெகு பெயர் கண்டுவியந்தனர். அடுத்து விரைவில் முடிந்த கொல்லுலைக்களச் சித்திரமும் அவ்வாறே வாய்த்தது. மனுஷனைப் பார்த்து ஓவியம் சித்திரிக்கும் திறமை அவனுக்கு வாய்த்ததைக் கண்டு, அந்தக் கம்மியசாலை மேஸ்திரி ஒரு குடும்ப கணத்தையும் சித்திரித்துக் கொடுக்க அவனுக்கு உத்தரவு செய்தாரன்றி அவனை அதற்கு மிகு பணிக்காய் அமைத்துக் கொடுத்தனர். அதையன்றி, மேஸ்திரி ஆதியிற் பொருந்திய இரயம் [illegible] ரூபாயும், அதனுடன் பின்னும் பதினைந்து ரூபாயும் கொடுத்தான். இந்தக் குடும்ப கணை ஓவியம் சித்திரிக்கும் காலத்தில் அவன் கம்மியசாலை வேலைக்குப் போகாமலே நின்றுவிட்டான். அம்மாத்திரமல்ல, பழகிய தொழிலை அம்மட்டோடு நிறுத்திவிட்டு, பிரத்தியேகமாய்ச் சித்திரத்தொழில் ஒன்றையே செய்துகொ

சைம்வர அவன் எண்ணியதும் உண்டு. அப்பால் அவன் வேறு சில ஓவியங்களும் சித்திரிக்க ஆரம்பித்தான். அவற்றுள் இரண்டொன்று கிறிஸ்துவின் முகமும் பெரி எனும் ஊர்க்காட்சியும். கிறிஸ்துவின் முகம் சரியாய் அதன் அளவாகச் சித்திரிக்கப்பட்டது. அது அவன் நூதனமாக உபாயம் சூழ்ந்து இயற்றிய சித்திரம். இந்தத் துறையில் அவனுக்கு வேலை வேண்டும் அளவிற்கு அமையவில்லை. அகப்படும்பொழுது வேலை செய்து அகப்படாதிருக்கும்போது வீண்பொழுது கழிக்கும்படி நேர்ந்தது. வருமானம் நிரந்தரமாய் நிலைப்படவில்லை. இத்தொழிலைச் சார்ந்து பிழைப்பது கஷ்டமென்று கண்டு ஷார்பில்ஸ் தன் ஜீவனத்திற்கு நேராக வாய்த்த கருமான் வேலையே சதமென்று தாசிதாங்கி கட்டிக்கொண்டு அவ்வேலையை மீளவும் ஆரம்பித்தான்; ஒழிந்த நேரத்தில் உலைக்களச் சித்திரத்தைச் செதுக்கி முடித்தான். அது பின்னிட்டுப் பிரசுரம் செய்யப்பட்டது. அவன் இச்செதுக்குவேலை கையிட்ட நிமித்தம் இது:— அவன் ஒரு நாள் சித்திரம் விற்று ஜீவனம் செய்யும் மான்செஸ்டர் நகரத்தான் ஒருவனுக்குத் தான் அமைத்து வைத்திருந்த உலைக்களச் சித்திரத்தைக் காண்பிக்க, அவ்வியாபாரி இந்தச் சித்திரத்தைச் சாதுரியமுள்ள வித்தகனைக் கொண்டு செதுக்குவித்தால் அச்சிடுவிக்க வாய்க்குமே என்றான். ஷார்பில்ஸுக்கு அப்பொழுது செதுக்குவேலை கட்டோடே தெரியாது. தெரியாதிருந்தும், அதைத் தன் கையால் செதுக்கி அமைக்கவேண்டுமெனும் அபிப்பிராயம் அந்தக்ஷணமே அவன் நெஞ்சில் பிறந்தது. இவ்வேலை தொடங்கி அவன் எவ்வளவோ கஷ்டப்பட்டதையும், அச்சங்கடம் எல்லாம் தவிர்த்து கருதியவாறு காரியம் சாய்த்ததையும் பின் வரும் வண்ணம் அவனே விவரணமாய் உரைத்தான்:—

"ஷெப்பீல்டில் எஃகுத் தகடு செய்து விற்கும் ஒருவன் வெவ்வேறு பரிமாணமுள்ள தகட்டுக்கு உரிய விதமும்

குறித்துப் பிரசித்தப்படுத்திய விளம்பர பத்திரம் ஒன்றைக் கண்டேன். கண்டு, என் வேலைக்கு ஆகும் பரிமாணமுள்ள தகட்டைக் குறிப்பித்து அதன் கிரயத்தையும் செதுக்குக் கருவிகள் சிலவற்றின் கிரயத்தையும் அடக்கம் செய்து, தகட்டையும் அக்கருவிகளையும் அனுப்பும்படி டை யானுக்கு ஒரு கடிதம் போக்கினேன். செதுக்குக் கருவிகளை இன்னின்னவென்று குறிப்பிட என்னால் முடியவில்லை. அப்பொழுது எனக்குச் செதுக்குவேலை மர்மம் ஒன்றும் தெரியாதே. குறிப்பிடாதிருந்தும், டை வியாபாரி எஃகுத் தகட்டோடு கூடச் செதுக்குக் கருவி நானு மூன்றும் சித்திர ஊசி ஒன்றும் வைத்து அனுப்பினான். பிரயோகிக்கும் முறை அறியுமுன் நான் கையாடி அச்சித்திர ஊசி பழுதாய்ப் போயிற்று. தகட்டிற் செதுக்குவேலை செய்துகொண்டு வரும்பொழுது, சின்னக் குறிப்புச் சித்திரம் ஒன்று சீராகச் சித்திரித்துக் கொடுப்பவனுக்கு இன்ன வெகுமதி கிடைக்குமென என்ஜினீர் சங்கத்தாரால் விளம்பரம் செய்யப்பட்டது. அவ்வெகுமதி பெற நாடி நானும் சித்திரம் எழுதிக் கொடுத்தேன். அதிர்ஷ்டவசத்தால் என் சித்திரத்திற்கே வெகுமதி கிடைத்தது. அதன் பின் சிறிது காலம் சென்று ப்லாக்பர்னுக்குப் போய்ச் சஞ்சரித்தேன். அங்கெனக்கு யேத்ஸ் வகை என்ஜினீர்கள் வசம் யந்திரக்கொல்வேலை அமர்ந்தது. வேலை ஒழிந்து வீட்டில் இருக்கும்பொழுது, முன்போல, சித்திரவேலையும் செதுக்குவேலையும் செய்துகொண்டிருந்தேன். செதுக்கு வேலைக்குச் சரியான கருவிகள் அகப்படவில்லை. வெகு சிரமப்பட்டேன். இவ்வித்தையிற் கைதிருந்த வெகுநாட் சென்றது. பின்பு என் கருமத்திற்கு உதவும் கருவி சில செய்து பார்த்தேன். முதலிற் செய்த சில கருவிகள் வாய்க்கவில்லை. செய்து செய்து கை வழக்கப்பட்டதனால், பிற்பாடு செய்த கருவி அனேகம் என் வேலைக்கு உதவின. அன்றியும் சரியான பூதக்கண்ணாடி அகப்படாததும் பெருங்குறையாயிருந்தது.